
# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

9 - MAR
MADRAS



ஸ்ரீ நடராஜப் பெருமான்
வள்ளீஸ்வரர் கோயில் — திருமயிலை.

மாலை 9] பராபவ-மாசி-மார்ச்சு, 1967 [மணி 6

சென்னை அரசாங்க அறநிலையப்



நாகைக் காரோணத்தில் நடைபெற்ற பாவை மாநாட்டில், நமது அறநிலைய ஆணையர் அவர்களும், தஞ்சைத் துணை ஆணையர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

---

## பொருளடக்கம்


1. நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்
2. மதிப்புரைகள்
3. திருவாய்மொழியின் சிறப்பு
4. திருச்சந்த விருத்தம்
5. நான் ஆர்? என் உள்ளம் ஆர்?
6. கைங்கரியச் செல்வம்
7. தமிழ் நூல்களில் சிற்பக்கலை
8. உபநிடதக் கலை
9. ஞான சித்தர்களும் சித்த மருந்தும்
10. பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்
11. கடந்து நின்றான்
12. நமது வேதங்கள்
13. தில்லையில் திருஞான சம்பந்தர்
14. ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை


---

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 9] பராபவ-மாசி-மார்ச்சு '67 [மணி 6


# "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்"

**முன்னுரை :**

திருஞான சம்பந்தப் பெருமானுக்குப் பலதிறச் சிறப்புக்கள் உண்டு. அவற்றுள், அவர் ''நற்றமிழ் வல்லவர்'' என்பதும் ஒன்று. திருஞான சம்பந்தப் பெருமானே தம்மை ''நற்றமிழ் வல்லவர்'' எனப் பல இடங்களில் குறிப்பிட்டுக் கொள்வதுடன், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவ்வுண்மையை வழிமொழிந்து கூறிவற்புறுத்தி உணர்த்துகின்றார். நம்பியாண்டார் நம்பிகள் ''ஆறது ஏறும் சடையான் அருள் மேவ அவனியர்க்கு வீறது ஏறும் தமிழால் வழிகண்டவன்'' எனத் திறம் அறிந்து பாராட்டித் திருஞானசம்பந்தரைப் போற்றித் துதித்துள்ள அருமைப்பாடு, பெரிதும் அறிந்து மகிழ்தற்கு உரியது.

**நற்றமிழ் :**

ஞானசம்பந்தர் நற்றமிழில் வல்லவர் என்பதனை நன்கினிது உணர்த்தும் நல்ல பல சான்றுகள், அவர் தம் திருப்பாடல்களில் ஆங்காங்கே மலிந்து காணப்படுகின்றன. ''நற்றமிழ்'' என்னும் தொடருக்கு, எத்துணையோ பல இயைபுடைய பொருள்களைத் தத்தம் மதிநுட்பத்துக்கு ஏற்ப அறிஞர்கள் இனிதெடுத்து விளக்குதல் கூடும். ஆயினும், ''பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்'' என்னும் உத்தி பற்றி, ''நற்றமிழ்'' என்றது ஈண்டுச் சங்கத் தமிழ் மொழியினைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

> பத்துப்பாட்டு ஆதிமனம்
> பற்றினர் பற்றுவரோ ?
> எத்துணையும் பொருட்கிசையும்
> இலக்கணமில் கற்பனையே.

எனப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் கட்டுரைக்கும் திறம் கருதியுணர்ந்தால், சங்கத் தமிழ் மொழியை ''நற்றமிழ்'' எனக் கொள்ளுதலில் பிழையேதும் இன்றென அறிஞர்கள் அனைவரும் உடன் படுவர்.

> சால்பாய மும்மைத்
> தமிழ் தங்கிய அங்கண் மூதூர்
> நூல்பாய் இடத்தும் உள.
> நோன்றலை மேதி பாயப்
> பால்பாய் முலைத்தோய் மதுப்
> பங்கயம் பாய எங்கும்
> சேல்பாய் தடத்தும் உள,
> செய்யுள்மிக் கேறு சங்கம்

மும்மைப் புவனங்களின்
மிக்கதன் றேஅம் மூதூர்
மெய்ம்மைப் பொருளாம் தமிழ்
நூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்
திரு வால வாயில்
எம்மைப் பவந்தீர்ப்பவர்
சங்கம் இருந்த தென்றால்.

எனப் போதரும் பாடல்களால், சேக்கிழார் பெருமானும் சங்கத் தமிழின் சிறப்பினைப் பாராட்டி யுரைத்திருத்தல் நம் கருத்துக்குப் பெரிதும் அரண் செய்யா நிற்கும்.

## சம்பந்தரும் சங்கத் தமிழும்:

ஞானசம்பந்தப் பெருமான் சங்க காலத் தமிழ் மரபை நன்குணர்ந்து பாடுதலில் வல்லவர். சங்க காலத்தில் வழங்காத பல புதிய பாவினங்களை முதல் முதலில் ஞானசம்பந்தர் பாடியருளிப் பெருக வழங்கச் செய்தனர். ஆயினும் அவர் சங்க காலத் தமிழ் மரபைப் பெரிதும் போற்றியவரே யாவர். ஞானசம்பந்தர்க்குச் சங்ககாலச் சான்றோர்கள் மாட்டும், சங்க காலத் தமிழ்ப் பண்பாட்டு மரபு நெறிகளிலும் மிக்க ஈடுபாடு இருந்ததெனத் தெரிகின்றது. தமது பாடல்களை "ஞானசம்பந்தன் உரைசெய் சங்கமலி செந்தமிழ்கள்" என அவர் சிறந்தெடுத்து உரைத்தலால் இதனைத்தெளியலாம். மேலும், அவர் "பட்டிமன் தென்னன்" என்றும், "அந்தண் மதுரைத் தொகையாக்கினன்" என்றும் அருளிச் செய்திருத்தலும், ஞானசம்பந்தர்க்குச் சங்கத் தமிழின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாடும் பெருமதிப்பும் பற்றி இனிது புலப்படுத்தும்.

ஞானசம்பந்தரின் பாடல்கள் எத்துணையோ பலப்பல நலங்கள் சான்றவை. அவர்தம் அழகிய இனிய பாடல்களில், ஆங்காங்கே சங்க நூற் சாயல்களும் கருத்துக்களும் மரபுகளும் வழக்காறுகளும் நிறைந்து காணப் பெறுகின்றன. அவ்வொப்புமைப் பகுதிகளைக் கண்டு சுவைத்து மகிழ்வதும், ஞானசம்பந்தரின் பாடல்களை நாம் ஆராய்ந்துணர்ந்து நலம்பெறத் தக்க பலதிற வழி வகைகளுள் ஒன்றாகும். அத்துறையில் ஈண்டு ஒரு சில ஒப்புமைப் பகுதிகளை மட்டும் கண்டு இன்புறுவோம்.

## 1. கோள்களும் மழையும்:

பண்டைச் சங்ககாலத் தமிழ் மக்கள் கோள்களின் நிலையில் இருந்து மழை முதலியவற்றை அறியும் குறிநூற் புலமை உடையவராய் இருந்தனர். சனி என்னும் கோள் பகை வீடுகளிற் சென்று மாறுபட்டாலும், தூமகேது தோன்றினும், சுக்கிரன் தென்றிசைக் கண் சென்றாலும், உலகில் மழை பெய்யாதெனப் பண்டைத் தமிழ் மக்கள் கண்டுணர்ந்திருந்தனர். இதனை,

மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி ஓடினும்
(புறம் 117)

கரியவன் புகையினும் புகைக்கொடி
தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
(சிலம்பு 10-102)

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
(பட்டினப்பாலை 1-2)

எனவரும் சங்கநூல் வரிகள் உணர்த்தும். இவற்றினை நினைப்பிக்கும் வகையில்,

விலங்கலமர் புயல்மறந்து மீன்சனிபுக்கு
ஊன்சலிக்கும் காலந் தானும்
கலங்கலிலா மனப் பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே.

என ஞானசம்பந்தர் திருக்கழுமலப் பதிகத்திற் பாடியருளியிருத்தல் சிந்தித்து மகிழற்பாலதாகத் திகழ்கின்றது.

## 2. வேங்கை மரமும் புலியும்:

காடுகளில் வேங்கை மரத்தின் பூக்கள் கருங்கற் பாறைகளின் மீது உதிர்ந்து கிடக்கும் காட்சி, புலிக்குருளையைப் போலத் தோன்றும் எனச்

சங்க நூல்களில் ஆங்காங்குக் குறிப் பிடப் படுகின்றது.

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையில் தோன்றும் காடு

(குறு-47)

ஓங்கல் மிசைய வேங்கை ஒள்வீ
புலிப்பொறி கடுப்பத் தோன்றும்

(அகம்-228)

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்

(புறம்-202)

கருங்கால் இனவேங்கை கான்றபூக் கல்மேல்
இருங்கல் வயவேங்கை ஏய்க்கும்.

(திணைமாலை -26)

இச்சங்க நூல் வரிகளின் கருத்தை நினைப் பூட்டும் முறையில், திருஞானசம்பந்தப் பெருமான் திருக்கேதாரப் பதிகத்தில் பாடியிருக்கும் பின்வரும் வரிகள் அமைந்திருத்தல்அறிந்தின்புறற்பாலது.

உடைந்த காற்றுக் குயர்வேங்கை
பூத்துதிரக் கல் அறைகள்மேல்
கிடந்த வேங்கைச் சினமாமுகம்
செய்யும் கேதாரமே.

## 3. மணம் புணரும் நாள் :

பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி நிலமக்கள் வேங்கை மலரும் பருவத் தினைத் தினையறுக்கும் காலமாகவும், திருமணம் செய்தற்குரிய காலமாகவும் கொண்டிருந்தனர். இவ்வுண்மை,

வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே

(அகம் - 2)

எனவரும் அகநானூற்றுப் பாடற் பகுதியானும், 'இணர் விரிதலும் ஊர் கோடலுமாகிய இரண்டும் மணம்செய் காலம் இதுவென உணர்த்துதலாகிய ஒரு பொருள் குறித்து நின்றமையான், அவை ஒரு வினைப்பாற்படும் என்பது'' எனப் போதரும் சேனாவரையர் நச்சி னார்க்கினியர் உரைகளாலும் தெளியப் படும். இச்சங்க நூற்கருத்தினைத் தழுவி

புனவர்புன மயிலனைய மாதரொடு
மைந்தரும் மணம் புணரும்நாள்
கனகமென மலர்களணி வேங்கைகள்
நிலவு காளத்தி மலையே.

எனவரும் திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல்வரிகள் அருளிச் செய் யப்பட்டுள்ளமை பெரிதும் சுவை பயக் கின்ற தன்றோ?

## 4. யாளியும் யானையும்:

'யாளி' என்பது பண்டொருகால் இருந்து, இஞ்ஞான்று இல்லையாய் மறைந்து போன ஒரு வகை விலங்கு. அவ்விலங்கு யானைகளையும் விடப் பெரி யதாய், அவைகளைக் கொல்ல வல்ல பேராற்ற லுடையதாக விளங்கி யிருந் ததெனத் தெரிகின்றது. யாளிகள் வந்துவிடுமோ என்ற அச்சத்தால், அவற்றினிடமிருந்து தப்பும் பொருட்டு யானைகள் மலைகளைக் குத்திக் குடைந்து குகைகளை யுண்டாக்கிப் பாதுகாப்பாக இருந்து வருகின்றன.

மத்தக் களிறுளி வரவஞ்சி
மலை தன்னைக்
குத்திப் பெருமுழை தன்னிடை
வைகும் கொடுங்குன்றம்

எனவரும் திருஞான சம்பந்தர் தேவா ரப்பாடலால், இச் செய்தியை இனி துணரலாம். இவ்வரிகளின்படி யானை கள் யாளிக்கு அஞ்சும் இயல்பின என் பது,

மழைவிளை யாடும் கழைவளர் அடுக்கத்து
அணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழம் கதழ்வுற் றாஅங்கு
எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை

(பெரும்பாண்-257)

எனவரும் பெரும்பாணாற்றுப்படை வரி களால் தெளியப்படும். இங்ஙனமே யானை குரங்கு முதலிய பல விலங்கு களைப் பற்றிய செய்திகளில் சங்க நூற் பாடல்களுக்கும் தேவாரப் பாடல்களுக் குமிடையே பெரிதும் ஒப்புமைத் தன்மை சிறந்து திகழ்கின்றது.

### 5. கிளிகளும் மறைகளும் :

கிளிகளும் வேதங்களை ஓதுகின்றன; அவற்றின் பொருளைச் சொல்லுகின்றன; அவற்றைப் பிழையாகச்சொல்லுபவர்களைத் திருத்துகின்றன என்பன போன்ற கருத்துக்கள், திருஞான சம்பந்தர் பாடல்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. வேத நெறி தழைத்தோங்கப் போந்தருளிய ஞான சம்பந்தர் இங்ஙனம் விதந்தோதுதலில் வியப்புண்டோ?

*சால நல்லார் பயிலும்*
*மறைகேட்டுப் பதங்களைச்*
*சோலை மேவும் கிளித்தான்*
*சொற்பயிலும் புகலியே (1)*

*பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்*
*பயின்றோதும் ஓசை கேட்டு*
*வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்*
*பொருட்சொல்லும் மிழலை யாமே (2)*

*பெரிதிலங்கும் மறைகிளைஞர்*
*ஓதப்பிழை கேட்டலாற்*
*கருது கிள்ளைக் குலந்தெரிந்து*
*தீர்க்கும் கடற் காழியே. (3)*

என்பன போன்று வரும் திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல்கள்,

*'வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்'*
*(பெரும்பாண்-300)*

எனப் போதரும் பெரும்பாணாற்றுப் படை வரியினை நினைவூட்டுகின்றன.

### 6. பறவையும் பார்ப்பும் :

பறவைகள் தம்முடைய குஞ்சுகளுக்கு இரைதேடிக் கொணர்ந்து, அதனை இன்னருளோடு அவற்றின் வாய்ப்பெய்து ஊட்டும் காட்சி எவருள்ளத்தையும் இன்புறுத்துவதாகும். குழந்தையாகிய ஞானசம்பந்தர் அவ்வழகிய காட்சியைக் கண்டு பெரிதும் களிப்புற்று,

*பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ*
*கேட்டுப் பிரியாது போய்க்*
*கிள்ளை ஏனற் கதிர்கொணர்ந்து*
*வாய்ப்பெய்யும் கேதாரமே.*

எனவரும் வரிகளில் அரியதொரு சொல்லோவியமாக அருளிச் செய்கின்றார். இவ்வரிகள் பின்வரும் சங்கச் செய்யுட்களை நினைப்பிக்கின்றன.

*அளியதாமே கொடுஞ்சிறைப் பறவை*
*இறையுற ஓங்கிய நெறியியல் மராஅத்த*
*பிள்ளை யுள்வாய்ச் செரீஇய*
*இரைகொண் டமையின் விரையுமாற்*
*செலவே.*
*(குறு. 92)*

*உடங்கிரை தேரும் தடந்தாள் நாரை*
*ஐய சிறுகட் செங்கடைச் சிறுமீன்*
*மேக்குயர் சினையின் மீமிசைக் குடம்பைத்*
*தாய்ப்பயிர் பிள்ளை வாய்ப்படச் சொரியும்*
*(நற். 91)*

### 7. தாழையும் கெண்டையும்

தாழை மலரின் நிழலைக் குருகு என்று தவறாக நினைத்துக் கொண்டு, நீர் நிலைகளிலுள்ள மீன்கள் அவற்றிற்காக அஞ்சி, அங்குள்ள தாமரை மலரின் கீழே சென்று மறைந்து கொள்கின்றன. அவை மறையுந்திறம் கண்டு சிரிப்பன போல முத்துக்கள் அங்கே ஒளி வீசுகின்றன.

*விடமுண்ட மிடற்றண்ணல்*
*வெண்காட்டின் தண்புறவின்*
*மடல்விண்ட முடத்தாழை*
*மலர்நிழலைக் குருகென்று*
*தடமண்டு துறைக்கெண்டை*
*தாமரையின் பூமறையக்*
*கடல்விண்ட கதிர்முத்தம்*
*நகைகாட்டும் காட்சியதே.*

எனவரும் தேவாரப் பாடல்,

*குருகுகொளக் குளித்த கெண்டை அயலது*
*உருகெழு தாமரை வான்முகை வெரூஉம்*
*(குறு. 54)*

*தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்*
*குருகென மலரும் பெருந்துறை*
*(குறு. 226)*

*கொடுங்கழி மருங்கின் இரைவேட் டெழுந்த*
*கருங்காற் குருகின் கோளுய்ந்து போகிய*
*முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை*

எறிதிரை தொகுத்த எக்கர்நெடுங்கோட்டுத்
துறுகடற் றலைய தோடுபொதி தாழை
வண்டுபடு வான்போது வெரூஉம்

(நற். 211)

என்னும் சங்கச் செய்யுட்களைத்தழுவிய சாயலுடையதாகக் காணப்படுகின்றது.

## 8. வாழைக் குலையும் யானைத் துதிக்கையும்:

இங்ஙனமே யானையின் துதிக்கையைப் போல வாழை மரங்கள் குலை ஈனுகின்றன என்னும் கருத்தமைந்த 'மொய் சேர் மும்மத நால்வாய் முரண் வேழக் கைபோல் வாழை காய்குலை ஈனும் கலிக்காழி' என்னும் தேவாரப்பாடல்,

முருகுறழ் முன்பொடு கடுஞ்சினம் செருக்கிப்
பொருத யானை வெண்கோடு கடுப்ப
வாழை ஈன்ற வையேந்து கொழுமுகை

(நற். 225)

என்னும் நற்றிணைப் பாடலின் நல்ல கருத்தை யுட்கொண்டுள்ளது.

## 9. பாம்பும் மணியும்

பாம்புகளின் நஞ்சே மணியாக மாறும் என்றும், அம்மணிகளைப் பாம்புகள் தாம் வேண்டும்பொழுது உமிழவும் விழுங்கவும் முடியும் என்றும், இரவுக் காலங்களில் பாம்புகள் மணியை உமிழ்ந்து அதன் ஒளியால் கட்பார்வை பெற்று இரை தேடி உலாவும் என்றும் அறிந்தோர் கூறுவர்.

ஊரும் அரவம் ஒளிகொள் மாமணி
உமிழ்ந்தவை உலாவி வரலால்
கார்இருள் கடிந்து கனகம்என
விளங்கு காளத்தி மலையே.

எனத் திருக்காளத்தி மலையின் சிறப்பை விவரிக்குங்கால், திருஞான சம்பந்தர் இச் செய்தியைக் குறிப்பிடுகின்றார்.

இருங்களிறு அட்ட பெருஞ்சின உழுவை
நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கிற் புலர ஈர்க்கும்
வாள்நடந் தன்ன வழக்கறும் கவலை.

— அகநானூறு, 72.

நறுந்தாது ஊதும் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியில் தோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே.

—குறுந்தொகை, 239.

## 10. களிறும் பாம்பும்:

விலங்குகளிற் பெரியது யானை. ஆயினும் அதனையும்கூடச் சில சமயங்களில் விழுங்கி விடக் கூடிய பாம்புகள் சில மலைநிலப் பகுதிகளில் உண்டாம். மிகவும் பெரிய யானையையே விழுங்கிவிடக் கூடிய அம்மலைப் பாம்புகள், எத்துணைப் பெரியனவாக இருக்கும் என்பது நாம் உன்னி உணரற்பாலது.

பரிய களிற்றை அரவு விழுங்கி
மழுங்க இருள்கூர்ந்த
கரிய மிடற்றர் செய்ய மேனிக்
கயிலை மலையாரே.

எனத் திருக்கயிலாய மலையில், யானைகளையும் விழுங்கவல்ல மிகப் பெரிய மலைப் பாம்புகள் இருப்பனவாக ஞானசம்பந்தர் நவிலுகின்றார்.

ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத்து, அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத்து இயம்பும்
கடுமான் புல்லிய காடிறந் தோரே.

—நற்றிணை, 14.

களிறுஅகப் படுத்த பெருஞ்சின மாசுணம்
வெளிறுஇல் காழ்மரம் பிணித்துநனி
மிளிர்க்கும்.

—நற்றிணை, 261.

## 11. பிடியும் களிறும்

திருக்கானப்பேர் (காளையார் கோயில்) என்னும் தலத்தைப் பற்றிப் பாடுங்கால், அங்குப் பெண் யானைகள் அலகிடுதல் முதலிய செயல்களைச் செய்ய, ஆண் யானைகள் இறைவனை வழிபடுவதாகத் திருஞான சம்பந்தர் பாடுகின்றார். திருக் குற்றாலம், திலதைப்பதி முத்தம் முதலிய தலங்களிலும் யானைகள் இறைவனை வணங்குகின்றன என அவர் பாடியருளி யுள்ளார்.

மானமா மடப்பிடி வன்கையால் அலகிடக்
கானமார் கடகரி வழிபடும் கானப்பேர்

பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து
மத்தகத்திற் பொலிய ஏந்திக்
கூந்தற் பிடியும் களிறும் உடன்
வணங்கும் குறும்பலாவே.

பத்தர் சித்தர் பணிவுற் றிறைஞ்சும்
திலதைப்பதி
மத்த யானை வழிபாடு செய்யும்
மதிமுத்தமே

இத் தேவாரப் பாடற் பகுதிகள், தவ முனிவர்களுக்குக் காட்டு யானைகள் விறகுகள் முதலியன கொண்டு வந்து பணிவிடை புரிதலைக் கூறும் பின்வரும் சங்கப்பாடல் வரிகளை நமக்கு நினைவுறுத்துகின்றன.

கான யானை தந்த விறகில்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே.

—புறநானூறு, 251.

மந்தி சீக்கும் மாதுஞ்சு முன்றில்
செந்தீப் பேணிய முனிவர், வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங்கு அருவிய மலைகிழ வோனே.

—பெரும்பாண், 498-500.

பிடியும் களிறும் மலைப் பகுதியில் உலா வருகின்றன. அப்போது அங்கு ஒரு புலி வருகின்றது. புலியும் களிறும் ஒன்றை யொன்று மோதிப் பொருகின்றன. அதுகண்டு பிடியானை அஞ்சித் தன் கன்றுகளுடன் வெருண்டு ஓடுகின்றது. புலியைக் கொன்ற களிறு, பின்னர்த் தன் பிடியையும் கன்றுகளையும் காணாமல் தேடி அலைகின்றது. தன் குரலொலி காட்டிப் பிளிறி அலறுகின்றது. எங்கும் தேடிக் காணாமையால் களைப்படைந்து, தன்னையும் அறியாமலே உறங்கத் தலைப்படுகின்றது. அத்தகையது திருவண்ணாமலை எனப் பாடுகின்றார் திருஞான சம்பந்தர் !

பிழைத்த பிடியைக் காணாது ஓடிப்
பெருங்கைம் மதவேழம்
அழைத்துத் திரிந்தங்கு உறங்கும் சாரல்
அண்ணா மலையாரே.

இஃது ஒருவகையில் களிற்றைக் காணாமல் பிடியானது அலைந்து தேடி வருந்துவதாகக் கூறும் பின்வரும்அகநானூற்று வரிகளை ஒருவகையில் ஒத்துக் காணப்படுகின்றது.

வெண்கோட்டு யானை முழக்கிசை வெரீஇக்
கன்றொழித் தோடிய புன்றலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடுமகப் பெண்டிரில் தேரும்
நெடுமர மருங்கின் மலையிறந் தோரே.

—அகநானூறு, 347.

## 12. பிடிக்குக் கவளம் :

மக்களிடையே நிகழும் இல்லற வாழ்வு, வன விலங்குகளிடையிலும் கூட ஒருவகையில் அமைந்து காணப்படுகின்றது. தான் மணந்து கொண்ட மனைவியின் மனம் மகிழும்படி, பல வகை நல்லுணவுப் பொருள்களைத் தேடிக் கொணர்ந்து தருகின்றான் கணவன்! அதுபோலவே ஆண் யானைகளும், தாம் உண்ணாமல் தமது பிணையாகிய பெண் யானைகளின் வாயில் மூங்கில் நெல்லின் இனிய முளைகளை வாரிக் கொடுக்கின்றவாம். அத்தகைய அழகிய இயற்கை வளத்தான் மிக்கது கற்குடிமாமலை!

மருங்கு அளியார் பிடி வாயில்
வாழ்வெதிரின் முளைவாரிக்
கரும் களியானை கொடுக்கும்
கற்குடி மாமலை யாரே

என்பது சம்பந்தர் தேவாரம். இங்ஙனம் களிறு பிடிக்குக் கவளம் தேடிக் கொடுத்தலைச் சங்க நூல்களும்பல இடங்களிற் குறிப்பிடுகின்றன.

கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த முடத்தாள் ஓமை.

—நற்றிணை, 127.

பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பிளக்கும்
அன்பின தோழிஅவர் சென்ற ஆறே.

—குறுந்தொகை, 37.

*கொல் மருப்பு ஒடியக் குத்திச் சினம்சிறந்து*
*இன்னு வேனில் இன்துணை ஆர*
*முளிசினை யாஅத்துப் பொளிபிளந்து*
*ஊட்டும்.*

—அகம், 335.

## 13. முல்லையின் முறுவல்:

கடவுளுணர்ச்சி என்பது, மக்கள் எல்லோருக்குமே பொதுவாக உரியது. மக்கள் தத்தம் பண்பாட்டின் தரத்திற்கு ஏற்பக் கடவுள் வழிபாடு புரிவர். மலை நிலத்திலுள்ள கொல்லைப் பகுதிகளில் வாழும் வேடர்கள், திரண்டு கூடித் தங்கள் தெய்வத்திற்கு விழாக் கொண்டாடிக் கும்பிடுகின்றனர். அங்கு அருகேயுள்ள முல்லைக் கொடிகளிற் பூக்கள் மலர்ந்திருத்தல், அவ்வேடர்களின் இனிய செயல் கண்டு மகிழ்ச்சியால் முறுவல் புரிவதுபோல உள்ளது.

*கொல்லை வேடர் கூடி*
*நின்று கும்பிட*
*முல்லை அயலே முறுவல்*
*செய்யும் முதுகுன்றே.*

எனத் திருஞான சம்பந்தர், இக்காட்சியை எழிலுறப் பாடுகின்ருர். சிறந்த இப்பாடலின் கருத்தை ஒத்துப் பின்வரும் குறுந்தொகை வரிகள், அமைந்திருத்தல் காணலாம்.

*முல்லை வாழியோ முல்லை; நீநின்*
*சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை!*
*நகுவை போலக் காட்டல்*
*தகுமோ? மற்றிது தமியோர் மாட்டே.*

—குறுந்தொகை, 162.

*பெயல்புறம் தந்த பூங்கொடி முல்லைத்*
*தொகுமுகை இலங்கெயிறு ஆக*
*நகுமே தோழி! நறுந்தண் காரே.*

—குறுந்தொகை, 126.

## 14. மூங்கிலும் யானையும்:

மலை நிலத்தில் மூங்கிற் காடுகள் உள்ளன. அங்கு ஓங்கி உயர்ந்துள்ள மூங்கில் மரங்களை யானைகள் தம் துதிக்கையினுல் தாழப் பற்றி ஈர்க்கின்றன. அதன் இலைகளை உண்கின்றன. பின்னர் அவற்றைத் தம் கைந்நெகிழ்த்து விடுகின்றன. அதுபோது அம் மூங்கில்கள் மிக்க விசையுடன் உயர்ந்து சென்று, மேகங்களை மோதிக் கீறி நிற்கின்றன.

*தாள்அமர் வேய்தலை பற்றித்*
*தாழ்கரி விட்ட விசையோய்க்*
*காளமது ஆர்முகில் கீறும்*
*கற்குடி மாமலை யாரே.*

இத்தகைய மூங்கிற் காடுகளில் குரங்குகளும் ஏராளமாக வாழ்கின்றன. குரங்குகள் குறும்பு செய்யாமல் வாளா இருக்குமோ? அவை மூங்கிற் கொம்புகளில் தாவி ஏறுகின்றன. அவை ஏறுந்தொறும் மூங்கில்கள் வளைந்து தாழ்கின்றன. அவற்றின்மேல் குரங்குகள் நின்றும் நடந்தும் குனிந்தும் நிமிர்ந்தும் ஓடியாடிக் களிநடம் புரிகின்றன.

*திருகல் வேய்கள் சிறிதே*
*வளையச் சிறுமந்தி*
*முருகின் பணைமேல் இருந்து*
*நடஞ்செய் முதுகுன்றே.*

எனத் திருஞானசம்பந்தர் அருளியுள்ள இனிய தேவாரப் பாடல்களை ஓதுங்கால், பின்வரும் சங்கப் பாடல்களை, நாம் நினைவு கூராமல் இருத்தல் இயலாது.

*சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்*
*குரங்கின் வன்பறழ் பாய்ந்தென, இலஞ்சி*
*மீன்எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்*
*உற்ருேர் மறவா நோய்தந்து*
*கண்டோர் தண்டா நலம் கொண்டனனே.*

—ஐங்குறுநூறு, 228.

*கான யானை கைவிடு பசுங்கழை*
*மீன்எறி தூண்டிலின் நிவக்கும்.*

—குறுந்தொகை, 54.

## 15. மந்தியும் கடுவனும்:

ஆணும் பெண்ணும் அன்பினுற் கலந்து கூடி வாழ்தல், இயற்கையமைப்பின் நியதி. இந்நியதி மக்களின் வாழ்க்கையில் மட்டுமே யன்றி, விலங்குக்ளின் மாட்டும் விளங்கித் தோன்றுகின்றது. திருச்சிராப்பள்ளி மலையில் ஆண் குரங்காகிய கடுவனும், பெண் குரங்காகிய

மந்தியும், கணவனும் மனைவியுமாய்க் கூடிக் களித்து வாழ்கின்றன. கூடலுக்கு ஊடல் இன்றியமையாத தொன்றன்றோ? ஆதலின் மந்தி கடுவனோடு ஊடல் கொண்டது. ஊடலினால் தன் கையில் மகவாகிய குட்டியை அணைத்து எடுத்துக் கொண்டது. கடுவனை விட்டு நீங்கியது. மலை உச்சியிலுள்ள மூங்கிலில் ஏறி அங்கிருந்து கீழே குதித்து உயிரை விடுவதற்குத் துணிந்து, வரையேறிச் செல்லுகின்றது.

*கைம்மகவு ஏந்திக் கடுவனோடு*
*ஊடிக் கழை பாய்வான்*
*செம்முக மந்தி கருவரை*
*ஏறும் சிராப் பள்ளி.*

எனத் திருஞான சம்பந்தர், இக்காட்சியினைப் புனையா ஓவியமாகப் புனைந்து காட்டிப் பாடுகின்றார். இது போன்றதொரு செய்தி, பின்வரும் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் கூறப் பட்டிருத்தல் அறிந்தின்புறுதற்குரியது.

*கடுங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்*
*கைம்மை உய்யாக் காமர் மந்தி*
*கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி*
*ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர்*
*செகுக்கும்.*
*—குறுந்தொகை. 69.*

## 16. வாளையும் கனியும்:

சீர்காழி மருதத்திணைப் பகுதியைச் சேர்ந்தது. மருத நிலத்தில் ஆங்காங்கே நீர் நிலைகளும், அவற்றின் கரையில் மாமரச் சோலைகளும் நிறைந்திருக்கும். அம்மாமரங்களில் கனிகள் மிகுதியாகப் பழுத்து நீர்நிலைகளில் விழுகின்றன. அதுகண்டு அங்கு வாழும் வாளை மீன்கள் தாவிப் பாய்ந்து, அவற்றைக்கவ்வி எடுத்துச் செல்கின்றன. நீர்ப் பூக்களின் மேல் ஏறி வசதியுற இருந்து இனிது தின்று மகிழ்கின்றன.

*மாவில் ஆரும்கனி கிடங்கில்விழ*
*வாளை போய்ப்*
*பூவில் ஆரும்புனற் பொய்கையில்*
*வைகும் புகலியே.*

என்று நம் திருஞானசம்பந்தர், இக்காட்சியை நமக்கு எழிலுறத் தீட்டிக் காட்டுகின்றார். வாளை மீன்கள், நீர் நிலைகளில் மாங்கனிகள் வீழக் கவ்விப் பிடித்து உண்ணும் இயல்பினைச் சங்கப் பாடல்களும் குறிப்பிடுகின்றன.

*கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்*
*பழன வாளை கதூஉம் ஊரன்.*
*—குறுந்தொகை, 8.*

*கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு*
*துணர்த்தேக் கொக்கின் தீம்பழம் கதூஉம்.*
*—குறுந்தொகை, 164.*

## முடிவுரை:

ஞான சம்பந்தர் நற்றமிழ் வல்லவர். ஞானசம்பந்தரை நினைப்போர் நல்ல தமிழையும், நல்ல தமிழை விரும்புவோர் ஞானசம்பந்தரையும் ஒருங்கியைத்தே நினைவு கூர்வர். தமிழுக்கும் ஞான சம்பந்தருக்கும் அத்துணைச் சிறந்த தொடர்புண்டு. தமிழ் மொழியை வாழ்விக்கத் தோன்றியவர்களுள் தலைசிறந்த ஒருவர் திருஞான சம்பந்தர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியருளிய நலஞ் சிறந்தவர் அவர்! என்பதில் ஐயமில்லை. 'நல்ல தமிழ் வல்லவன் ஞான சம்பந்தன்' என்று, அவரே தம்மைப் பல இடங்களில் சிறப்புறக் குறித்துக் கொண்டிருத்தல் காணலாம். பிறர் எவரும் கூறிக் கொள்ளா வகையில், தம்மைத் 'தமிழ் ஞானசம்பந்தன்' என்று அவர் பல பதிகங்களில் (45) குறிப்பிட்டுக் கொண்டு மகிழ்கின்றார். தமிழைப் பரப்பி வளர்த்தவர்களின் வரிசையில் ஞானசம்பந்தருக்குத் தனிப் பெருஞ் சிறப்பிடம் உண்டு. அவரை ஒரு சிறந்த ''தமிழ் வீரர்''என நாம் கூறிப் போற்றலாம்.

*திசைய னைத்தின் பெருமையெலாம்*
*தென்திசையே வென்றேற*
*அசைவில்செழுந் தமிழ்வழக்கே*
*அயல்வழக்கின் துறைவெல்ல*

ஞான சம்பந்தர் தோன்றியருளினார் என்பது, சேக்கிழார் பெருமானின் திருவாக்கு!

இத்தகைய ஞானசம்பந்தர், ஓதாதுணர்ந்த ஒண்மையர். உவமை இலாக் கலை ஞானமும் உணர்வரிய மெய்ஞ் ஞானமும் ஒருங்கே பெற்றொளிர்ந்த தவ முதல்வர். ''கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தால் கண்ட'' அண்ணலார் ஆகிய அவர்தம் அருமைத் தேவாரத் திருப் பதிகங்களை, நாமும் ஆயிர முகத்தால் ஆராய்ந்து கண்டு இன்புறுதல் வேண்டும். சங்க இலக்கியங்களோடு தேவாரத் திருமுறைகளை ஒப்பிட்டுணர்ந்து கற்று மகிழ்தலும் (Comparative Study), அவற்றுள்ளே ஒரு சிறந்த ஆராய்ச்சி நெறிமுறை யாகும். திருஞான சம்பந்தரின் செந்தமிழ்ப் பெருநலனை நம்மனோர் ஆராய்ந்துணர்ந்து மகிழ்தற்கு, இவ்வகை ஆராய்ச்சி நெறியும் செவ்விதின் உறுதுணை புரியும் என்பதில் ஐயமில்லை.

இதனால் ஞான சம்பந்தர் தமக்கு முன்னே வாழ்ந்திருந்த சான்றோர்களை ஏற்ற பெற்றி போற்றியருளிய சிறப்பினையும், அவருக்குப் பின்னே தோன்றிய பெரியோர்கள் அவரை எங்ஙனம் மதித்துப் போற்றி யுய்ந்தனர் என்னும் மாண்பினையும்,* நாம் அறிந்துகொண்டு நலம்பல பெற இயலும்! நற்றமிழ் வாழ்க! ஞானசம்பந்தர் வாழ்க!!

—ஆசிரியர்.

* "A great poet is not an isolated fact. He has affiliations with the present and the past; and through these affiliations he leads us inevitably to his contemporaries and predecessors......"

—*William Henry Hudson,*
An Introduction to the Study of Literature, p. 36.

## மதிப்புரைகள்

**உடலும் உயிரும்:**

கவியோகி மகரிஷி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் இயற்றியது. உடம்பின் நுட்பம், அதன் அற்புத அமைப்பு, உறுப்புக்களின் கூறு, உணவு நெறி, உண்ணும் முறை, உணவுப் பொருள்களின் சத்து, நோய்களும் சிகிச்சைகளும், மூலிகைகளும், மூலிகைகளின் விளக்கமும் முதலிய பல சிறந்த பொருள்கள் எளிய இனிய நடையில் எழுதப் பெற்றுள்ளன. மிகவும் பயன் மிக்க நல்ல நூல். அனைவரும் படித்துப் பயன் பெறத் தக்கது. இந்நூலை டாக்டர் உ.வே. சாமிநாதையர், திரு கா. சுப்பிரமணிய பிள்ளை போன்ற பேரறிஞர்கள் பலரும் பாராட்டி யுள்ளனர். மிகவும் சிறந்த நூல்! விலை ரூ. 2.50

**நால்வர் சரித்திரம்:**

தேவகோட்டை (பாலகவி) சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் எழுதியது. சட்டைப் பைக்குள் வைத்துக் கொள்ளத் தக்க சிறிய அளவில் அமைந்தது. பக்கம் 131. எளிய இனிய உரை நடையில் சிறுவர்கள் படித்துப் பயன் பெறும்படி அழகுற எழுதப் பெற்றுள்ளது. காஞ்சி தொண்டை மண்டல ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்ரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் முன்னுரையோடு கூடியது. விலை காசு 60. கிடைக்குமிடம்:—திரு மு.அ.வீ. வீரப்ப செட்டியார், ஜவுளிக்கடை, கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை. புத்தகம் வேண்டுவோர், 75 காசு அஞ்சல் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஸ்ரீராமஜெயம்:**

சமய சம்பந்தமான மாதப் பத்திரிகை. தமிழில் வெளிவருவது. தமிழ் சம்ஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் உள்ள இந்து சமய சம்பந்தமான கட்டுரைகள் இதில் இடம் பெறுகின்றன. பக்தர்களுக்கு மிகவும் பயன்படக் கூடிய நல்ல பத்திரிகை. ஆண்டுச் சந்தா ரூபா 6. தனிப் பிரதி 50 காசு. கிடைக்குமிடம்: 4, நல்லதம்பி முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

—ஆசிரியர்.

# திருவாய்மொழியின் சிறப்பு

**முன்னுரை :**

ஆழ்வார்களுள் தலை சிறந்தவர் நம்மாழ்வார். வைணவப் பெருமக்கள் 'பிரபந்த ஜன கூடஸ்தர்' என, நம்மாழ்வாரைப் பெரிதும் போற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுவர். 'பிரபத்தி நெறியைப் பின்பற்றும் வைஷ்ணவப் பெருமக்கள் எல்லோருக்கும் தலைவர்' என்பது அதன் பொருள். இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய் மொழியானது, எல்லா உறுதிப் பொருள்களையும் கொடுக்க வல்லது. எல்லோரையும் இன்பமுறச் செய்வது. அடியார்களுக்கு அமிழ்தமாய்த் திகழ்வது. தமிழ் வேதம் என்னும் பெருமை சான்றது. கடல் போன்று விரிந்து பரந்து, சிறந்த பொருள் நலங்களை உடையது.

திருவாய்மொழியானது, உயிர்க்கு உறுதி பயக்கும் உயரிய பொருள்களைத் தெளிவுற உணர்த்தும் நூல்களுள் முதன்மை வாய்ந்தது; இறைவனுடைய உயர்வற உயர்ந்த குணங்களை அனுபவித்தலால் உண்டான பெருமகிழ்ச்சியின் விளைவாக வெளியிடப் பெற்றது; இறைவனின் திருவருளால் விளைந்த பரஞானத்தின் பயனாகத் தோன்றியது; வேத விழுப் பொருள்களை விளக்கமுற அறிந்த சான்றோர் அனைவரும் ஏற்றுப் போற்றுவது; வேதப் பொருள்களை யெல்லாம் இனிய தமிழினால் எளிதின் அருளிச் செய்வது; தெளியாத மறை நிலங்களை எல்லாம் தெளியவைக்கும் சிறப்புடையது!

**இறைவனும் திருவாய்மொழியும்:**

திருவாய்மொழியின் சிறப்பைப்பெரியோர்கள் பலவகைகளில் விளக்குவர். இறைவனுக்கு உரிய இயல்புகள் எல்லாம் திருவாய்மொழிக்கும் உண்டு என்பது பெரியோர்களின் கோட்பாடு. இவ்வாற்றால் திருவாய்மொழிக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள சில ஒப்புமைகளை மட்டும் இங்குக் காண்போம்.

(1) இறைவன் அஞ்ஞானத்தைப் போக்குதல், ஞானத்தை அளித்தல், பக்தியை விளைத்தல் என்பன மூன்றையும் செய்வன். திருவாய் மொழியும் இம் மூன்றையும் செய்ய வல்லதாகும். ''காரிமாறன் சடகோபன் ஒலி புகழ் ஆயிரத்துள் இப்பத்து உள்ளத்தை மாசறுக்குமே'' என்பதனால் அஞ்ஞானத்தைப் போக்குதலும்; ''வண்சடகோபன் தெருள்கொள்ளச் சொன்ன ஓராயிரம்'' என்பதனால் ஞானத்தை அளித்தலும்; ''குருகூர்ச் சடகோபன் சொன்ன தூய ஆயிரத்து இப்பத்தால் பத்தர் ஆவர் துவள்இன்றியே'' என்பதனால் பக்தி உணர்வை விளைத்தலும் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

(2) இறைவன் நம்மை யெல்லாம் தனக்கே உரிய அடிமையாக ஏற்றுக் கொள்ளும் இயல்பினன் ஆவன். “வெறித்துளவ முடியானே வினையேனை உனக்கு அடிமை அறக்கொண்டாய்'' என்னும் பாடலால் இவ்வுண்மை புலனாகும். திருவாய்மொழியும் நம்மை எம்பெருமானுக்கே முழுதும் அடிமையாக்கும் விழுப்பம் வாய்ந்தது. இதனைத் ''தொண்டன் சடகோபன் தெரியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும் உரிய தொண்டர் ஆக்கும் உலகம் உண்டாற்கே'' என்பதனால் அறியலாம்.

(3) இறைவன் பிறவியாகிய நோயைப் போக்கும் மருந்தாகத் திகழ்பவன் என்பது யாவரும் அறிந்தது. திருவாய்மொழியும் உலகியல் துன்பம் அனைத்தையும் போக்கி நலம் விளைக்கும் உயர்வுடையது. ''தண் குருகூர்ச் சடகோபன் மிடைந்த சொல் தொடை

ஆயிரத்துள் இப்பத்து, உடைந்து நோய்களை ஓடுவிக்குமே'' என்பது இவ்வுண்மையை உணர்த்தும்.

(4) இறைவன் நமக்குப் பரமபத மாகிய வைகுந்தத்தை அளிப்பவன். ''ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் நமக்கு'' என்பது பாசுரம். திருவாய் மொழியும் நமக்குப் பரமபதமாகிய வைகுந்தத்தை அளிக்க வல்லது. ''குரு கூர் வண் சடகோபன் சொன்ன ஆயி ரத்துள் இப்பத்தும் வானின் மீதேற்றி அருள் செய்து'' என்பது ஆழ்வார் அருளிச் செயல்.

(5) இறைவன் நம்மைத் தன் திரு வடிகளின் கீழ்ச் சேர்த்துப் பெருவாழ்வு தருவன். இதனைப் ''பெருந் துன்பம் பேரற நீக்கித் தன் தாளின் கீழ்ச் சேர்த்து அவன் செய்யும் சேமம்'' என வரும் பாசுரம் விளக்கும். இவ்வாறே இறைவனின் திருவடிகளின் கீழ் நம்மைச் சேர்த்து வைத்து நமக்குத் திருவாய்மொழி பேரின்பப் பெருவாழ் வளிக்கும் என்பது, ''திருமாலால் அரு ளப்பட்ட சடகோபன் சொல் ஆயிரத் துள் இப்பத்தால் அருளி அடிக்கீழ் இருத்தும்'' எனவரும் பாசுரப் பகுதி யால் உணரப்படும்.

(6) இறைவன் தன்னைப் புகலடைந் தவர்களுக்குத் தன்னுடைய பேரின்ப அனுபவ நிலையை வழங்கி அருள்வன். ''தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு இன்பக் கதிசெய்யும் தெளிவுற்ற கண் ணன்'' என்னும் பாசுரம் இதற்குச் சான்று பகரும். இம்முறையில், திரு வாய்மொழியும் தன்னை ஓதித் தன்பால் ஈடுபடுபவர்க்கு இறையருள் அனுபவ இன்பத்தை நிறைய விளைவிக்கும். ''வண்குருகூர்ச் சடகோபன் இங்ஙனே சொன்ன ஓராயிரத்துள் இப்பத்து எங் ஙனே சொல்லினும் இன்பம் பயக்குமே'' எனவரும் பாசுரம் இதனை இனி துணர்த்தும்.

(7) இறைவன் தன்னை அனுபவிக்கத் தலைப்பட்டவர்களை, ''ஊடுபுக்குஎனது ஆவியை உருக்கி உண்டுநின்ற நின் றன்னை'' என்கிறபடி நெக்குநெக்கு நீராய் உருகச் செய்வான். திருவாய் மொழியும் தன்னை ஓதி உணரத் தலைப்பட்டவர்களை நீர்ப் பண்டமாக நெகிழ்ந்து கசிந்து உருகச் செய்யும். ''தென்குருகூர்ச் சடகோபன் சொல் ஆயிரத்துள் இவை ஒன்பதோடு ஒன் றுக்கும் மூவுலகும் உருகுமே'' என்றும், ''தோற்றங்கள் ஆயிரத்துள் இவையும் ஒருபத்து வல்லார் ஊற்றின்கண் நுண் மணல்போல் உருகா நிற்பர் நீராயே'' எனவும் வரும் பாசுரங்களால் இவ் வுண்மை தெளியலாம்.

(8) இறைவன் பத்துத் திருவவதா ரங்கள் செய்தருளினன். அதுபோலத் திருவாய்மொழியும் பத்துப் பத்தாக அமைந்திருக்கின்றது. இதனை ஊன்றி உணர முற்பட்டால், இறைவனின் தசா வதாரங்களைப் போலவே, திருவாய் மொழியும் பத்து அவதாரங்கள் செய் ததுபோலும் என எண்ணத் தோன்று கின்றது.

(9) இறைவன் நல்லவர்களைக் காக்க வும் அல்லவர்களைப் போக்கவும் திரு வவதாரம் புரிந்தருள்கின்றான். ''கொடியோர்த் தெறுதலாகிய துஷ்ட நிக்கிரகமும், செவ்வியோர்க்கு அளித்த லாகிய சிஷ்ட பரிபாலனமும்'' இறைவ னுக்கு இயல்பாக அமைந்த செயல்க ளாகும். திருவாய்மொழிக்கும் இவ் விரு செயல்கள் உண்டு. இறைவனின் அருள் நெறிக்கு மாறுபட்ட தீயவர் கள் அழியவும், இறைவனின் அருளுக் குரிய நல்லவர்களாகிய அடியார்கள் வாழவுமே திருவாய்மொழி தோன்றுவ தாயிற்று. இவ்வாறு இறைவனுக்கும் திருவாய்மொழிக்கும் உள்ள இவ் வொப்புமை இயல்பினை,

நண்ணா அசுரர் நலிவெய்த
நல்ல அமரர் பொலிவெய்தப்
பண்ணார் பாடல் இன்கவிகள்
யானாய்த் தன்னைத் தான்பாடி

என நம்மாழ்வார் அருளிச் செய் திருத்தல் அறிந்து இன்புறத்தக்கது.

(10) இறைவன் உலகத்து உயிர்களைத் துன்புறுமற் காத்தற் பொருட்டே தோன்றியருளினன். அவ்வாறே திருவாய் மொழியும் உலக மக்கள் பிறவித்துன்பம் நீங்கி உய்தி பெறுதற் பொருட்டே திருவவதரிப்பதாயிற்று.

**முடிவுரை :**

இங்ஙனம் எண்ணியுணருந்தொறும் இறைவனோடு பல நுண்ணியவொப்புமைச் சிறப்பியல்களை உடையது திருவாய்மொழி! அதன் அருமை பெருமைகளை நாம் அனைவரும் நன்கினிது உணர்ந்து, அதனைப் பலகாலும் அன்புடன் ஓதி நலம் பெற முயலுவோமாக!

—ஆசிரியர்.

---

## மதிப்புரைகள்

*மாசிமக விழா:*

1. ஸ்ரீ ஆதிகும்பேசுவர சுவாமி தேவஸ்தானம், கும்பகோணம்.
2. ஸ்ரீ வேதாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், வேதாரண்யம்.
3. ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் தேவஸ்தானம், திருக்கண்ணபுரம்.
4. ஸ்ரீ கடம்பவனேஸ்வரர் தேவஸ்தானம், திருக்கடம்பந்துறை, குளித்தலை.
5. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர்.
6. ஸ்ரீ வாகீஸ்வர சுவாமி தேவஸ்தானம், பெருஞ்சேரி.
7. ஸ்ரீ வாஞ்சிநாதர் தேவஸ்தானம், திருவாஞ்சியம்.

*பெருந் திருவிழா:*

1. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், திருத்தணிகை.
2. ஸ்ரீ பிரம்மபுரீஸ்வர சுவாமி தேவஸ்தானம், அம்பல், நன்னிலம் தாலுக்கா.
3. ஸ்ரீ சிவகெங்கை தேவஸ்தானம், மதுரை.
4. ஸ்ரீ திருமுருகநாத சுவாமி தேவஸ்தானம், திருமுருகன் பூண்டி, திருப்பூர்-3.

*இரத சப்தமி விழா:*

1. ஸ்ரீ மேகநாத சுவாமி தேவஸ்தானம், திருமீயச்சூர்.
2. ஸ்ரீ மானேந்தியப்பர் தேவஸ்தானம், கல்லிடைக்குறிச்சி.

*இந்திரப் பெருவிழா:*

ஸ்ரீ சுவேதாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானம், திருவெண்காடு.

*கஜேந்திர மோட்ச விழா:*

ஸ்ரீ காளமேகப் பெருமாள் தொகுதி தேவஸ்தானம், திருமோகூர்.

*சிவராத்திரி விழா:*

ஸ்ரீ இராமநாத சுவாமி தேவஸ்தானம், இராமேஸ்வரம்.

ஸ்ரீ கயிலாசநாதர் கோயில், காஞ்சிபுரம்.

ஸ்ரீ நந்தீசுவரர் கோயில், நந்திபுரம்.

விழுப்புரம் வட்டம் கோலியனூர் ஸ்ரீ வாலீஸ்வர சுவாமி கோயிலில் சனிப் பெயர்ச்சி விழா, 10-3-1967.

கோயமுத்தூர், ஸ்ரீ கோனியம்மன் கோயில், பிரம்மோற்சவம்.

—ஆசிரியர்.

# திருச்சந்த விருத்தம்

(முற்றொடர்ச்சி)

பண் உலாவும் மென்மொழிப்
படைத் தடம்கணாள் பொருட்டு
எண்இலா அரக்கரை
நெருப்பினால் நெருக்கினாய்
கண்அலால் ஓர் கண்இலேன்
கலந்த சுற்றம் மற்றுஇலேன்
எண்இலாத மாய நின்னை
என்னுள் நீக்கல் என்றுமே.

பொழிப்புரை: பண்ணின் இனிமை பொருந்தியமென்மையானசொற்களைப் பேசுபவளும், வாள்போன்று பெரிய கண்களை உடையவளுமான பிராட்டியின் பொருட்டு, அளவு இல்லாத அரக்கர்களைக் கணைகளின் நெருப்பினால் அழித்தருளியவனே! எனக்குக் கண் போன்ற நின்னைத் தவிர, யான் வேறொரு துணையை உடையவன் அல்லேன். உள்ளம் கலந்த உறவும் எனக்கு நின்னைத் தவிர வேறு எவரும் இல்லை. அளவு இல்லாத மாயைச் செய்கைகளை உடையவனே! உன்னை எக்காலத்திலும் என் உள்ளத்தினின்று பிரித்து விடாதே.

குறிப்புரை: கண்—கண் போன்றவன்; கண் இலேன்—களைகண் இலேன்; களை கண்—துன்பத்தை நீக்கும் துணைவன்; நீக்கல்—நீக்கி விடாதே, நீக்கற்க. 'நீக்கல்' என்புழி 'அல்' ஈறு, 'மகன் எனல்' என்னும் திருக்குறளிற் போல எதிர் மறைப் பொருளில் வந்தது (91)

விடைக் குலங்கள் ஏழ் அடர்த்து
வென்றி வேல்கண் மாதரார்
கடிக்கலந்த தோள் புணர்ந்த
காலிஆய வேலை நீர்
படைத்து அடைத்து அதில்கிடந்து
முன் கடைந்த நின்தனக்கு
அடைக்கலம் புகுந்த என்னை
அஞ்சல் என்ன வேண்டுமே.

பொழிப்புரை: கடல் நீரைப் படைப்புக் காலத்தில்தோற்றுவித்தும், ஸ்ரீ ராமாவதாரத்தில் அக்கடல் நீரை அணை கட்டியும், தத்தம் குறைகளை முறையிட்டுக்கொள்பவர்களுக்கு முகம் கொடுப்பதற்காக அக்கடலில் பள்ளி கொண்டருளியும், முன்னொரு காலத்தில் தேவர்களின் பொருட்டு அக் கடலைக் கடைந்தும், (இவ்வாறெல்லாம் செய்ததும் அல்லாமல்) பலவகை நிறங்களுடைய ஏழு சிறந்த காளைகளையும் அடக்கி வெற்றி கொண்டு, வேல் போன்ற கண்களையுடைய நப்பின்னைப் பிராட்டியின் நறுமணம் கமழும் திருத்தோள்களை அணைத்து மகிழ்ந்த கோபால கிருஷ்ணனே! நின்னிடத்தில் அடைக்கலமாக வந்து புகுந்த எளியவனாகிய என்னை, 'அஞ்சாதே' என்று கூறி ஆட்கொண்டு காத்தருள வேண்டும்.

குறிப்புரை: வேலை—கடல்; அடர்த்து—அடக்கி; கடி கலந்த—நறுமணம் மிகுந்த; காலி—பசுக்கள்; காலி ஆயன்—பசுக்களைமேய்க்கும் இடையன், கோபால கிருஷ்ணன்; அஞ்சல்—பயப்படாதே. **(92)**

சுரும்பு அரங்கு தண்துழாய்
துதைந்து அலர்ந்த பாதமே
விரும்பி நின்று இறைஞ்சுவேற்கு
இரங்கு; அரங்க வாணனே
கரும்பு இருந்த கட்டியே
கடல் கிடந்த கண்ணனே
இரும்பு அரங்க வெம்சரம்
துரந்த வில் இராமனே.

பொழிப்புரை: கரும்புச் சாற்றினின்று செய்யப் பெற்ற கட்டியைப் போன்று இனிமையானவனே! திருப் பாற்கடலிலே பள்ளி கொண்டருளும் பெருமானே! அரக்கர்களின் இரும்பு

போன்ற வலிய உடல்கள் அழியும்படி கொடிய கணைகளைச் செலுத்திய வில்லை உடைய இராமபிரானே! திருவரங்கம் என்னும் பெரிய கோயிலில் வாழ்பவனே! வண்டுகள் படிகின்ற குளிர்ந்த திருத்துழாய் நெருங்கி மலர்ந்துள்ள நினது திருவடிகளையே மிகவும் ஆசைப் பட்டுத் தொழுகின்ற அடியேனுக்கு, இரக்கம் காட்டி அருள்வாயாக!

குறிப்புரை : இரும்பு—இரும்பைப் போன்ற வலிய உடல், உவமை ஆகு பெயர்; அரங்க—அழியும்படி; துரந்த—செலுத்திய; சுரும்பு அரங்கு—வண்டுகள் படிகின்ற. (93)

ஊனின் மேய ஆவி நீ
உறக்கமோடு உணர்ச்சி நீ
ஆனின்மேய ஐந்தும் நீ
அவற்றுள் நின்ற தூய்மை நீ
வானினோடு மண்ணும் நீ
வளம்கடல் பயனும் நீ
யானும்நீ அது அன்றி
எம்பிரானும் நீ இராமனே.

பொழிப்புரை : இராமபிரானே! உடம்பில் பொருந்தியுள்ள உயிரை இயக்குபவன் நீ. அறியாமையும் அறிவும் நீ. பசுக்களிடத்து உண்டாகின்ற பஞ்ச கவ்வியமும் நீ. அவற்றுக்குள் அமைந்த தூய்மையும் நீயே. நித்திய விபூதி என்னும் மேலுலகமும், லீலா விபூதியான மண்ணுலகமும் நீ. வளம் நிறைந்த கடலில் தோன்றும் பயன்களும் நீ. யானும் நின் அடிமை. அதுவல்லாமல் எங்களுக்குத் தலைவனுக இருப்பவனும் நீயே.

குறிப்புரை : இறைவன் உயிர்களுக்கு எல்லாமாகவும் இருந்து உதவி புரிந்து வரும் பெருங் கருணைச் சிறப்பை வியந்து துதித்தது இச் செய்யுள். (94)

அடக்கரும் புலன்கள் ஐந்துஅடக்கி
ஆசை ஆம் அவை
துடக்கு அறுத்து வந்துநின்
தொழிற்கண் நின்ற என்னைநீ
விடக்கருதி மெய் செயாது
மிக்கஓர் ஆசை ஆக்கிலும்
கடற்கிடந்த நின் அலால்ஓர்
கண்இலேன் எம் அண்ணலே.

பொழிப்புரை: எங்கள் தலைவனே! அடக்குவதற்கு அரிய ஐந்து புலன்களையும் தீய வழிகளில் செல்லாதபடி தடுத்து அடக்கி நல்லவைகளிலேயே செல்லும்படி செய்து, நுகர்ச்சிப் பொருள்களில் உண்டாகும் ஆசைகளின் தொடர்பை அறுத்தொழித்து நின்னைப் புகலிடமாக வந்து சேர்ந்து, நினக்குத் தொண்டு செய்தலில் ஈடுபட்டு நிற்கும் எளியவனுகிய என்னை, ஏற்றுக் கொள்ளாமல் விலக்கி விட வேண்டுமென்று நீ எண்ணி, என்பால் உண்மையான அருளைச் செய்யாமல், எனக்கு உலகப் பொருள்களிலேயே மிகுந்த பேராசைகளை உண்டாகும் படிச் செய்தாலும், திருப்பாற் கடலில் பள்ளி கொண்டுள்ள நின்னைத் தவிர, வேறொரு கடவுளை யான் விரும்ப மாட்டேன்.

குறிப்புரை : துடக்கு—தொடர்பு; நின் தொழிற்கண்—நின்னுடைய தொண்டின்பால்; விடக்கருதி—நீக்கிவிட எண்ணி. (95)

வரம்பு இலாத மாய மாய
வையம் ஏழும் மெய்ம்மையே
வரம்புஇல் ஊழி ஏத்திலும்
வரம்பு இலாத கீர்த்தியாய்
வரம்புஇலாத பல் பிறப்பு
அறுத்து வந்து நின்கழல்
பொருந்தும் ஆ திருந்த நீ
வரம்செய் புண்டரீகனே.

பொழிப்புரை: அளவு இல்லாத மாயச் செய்கைகளை உடைய மாயனே! ஏழு உலகங்களிலுள்ள மக்கள் எல்லோரும் கூடி, உண்மையாகவே அளவு இல்லாத பல ஊழிகளின் காலம் துதித்தாலும், எல்லை காண இயலாத பெரிய புகழை உடையவனே! தாமரை மலர் போன்ற கண்களை உடையவனே! முடிவு இல்

வாமல் பெருகக் கூடிய பற்பல பிறவி களையும் அறுத்துப் போக்கி, யான் நின்னுடைய திருவடிகளை அடைந்து சேரும் வண்ணம், திருந்திய முறையில் எனக்கு நீ அருள் புரிவாயாக.

குறிப்புரை: என் பிறவி வேரை அறுத்து, யான் நினது திருவடிகளை அடைந்து சேரும் வண்ணம், எனக்கு அருள் புரிவாயாக என்பது கருத்து. (96)

வெய்யஆழி சங்கு தண்டு
வில்லும் வாளும் ஏந்துசீர்க்
கைய! செய்ய போதில் மாது
சேரும் மார்ப! நாதனே!
ஐயில் ஆய ஆக்கை நோய்
அறுத்து வந்து நின்அடைந்து
உய்வதுஓர் உபாயம் நீ
எனக்கு நல்க வேண்டுமே.

பொழிப்புரை: அரக்கர்களுக்குக் கொடுமையான சுதர்சனம் என்னும் சக்கரத்தையும், பாஞ்ச சன்யம் என்னும் சங்கையும், வலிமை மிகுந்த கதையையும், சார்ங்கம் என்னும் வில்லையும், நாந்தகம் என்னும் வாளையும் ஏந்துகின்ற சிறந்த கைகளை உடையவனே! செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் வாழும் மார்பினை உடையவனே! எல்லாவற்றிற்கும் எல்லோருக்கும் தலைவனே! கோழை முதலியவற்றினால் உண்டாகும் உடலின் நோய்களைப் போக்கிக் கொண்டு, நின்னை வந்து அடைந்து யான் உய்வதற்குரிய ஒரு சிறந்த வழியினை எளியேனுக்கு நீ கூறி அருளுதல் வேண்டும்.

குறிப்புரை: வெய்ய—கொடிய; ஆழி—சக்கரம்; தண்டு—கதை; செய்ய போது—செந்தாமரை மலர்; ஐ—கோழை, சிலேத்துமம். (97)

மறம்துறந்து வஞ்சம் மாற்றி
ஐம் புலன்கள் ஆசையும்
துறந்து நின்கண் ஆசையே
தொடர்ந்து நின்ற நாயினேன்
பிறந்து இறந்து பேரிடர்ச்
சுழிக்கண் நின்றும் நீங்குமா
மறந்திடாது மற்று எனக்கு
மாய! நல்க வேண்டுமே.

பொழிப்புரை : வியத்தகு பண்பும் செய்கையும் உடைய மாயனே! கோபத்தை ஒழித்து, வஞ்சக எண்ணங்களை நீக்கி, ஐம்புலன்களின் ஆசைகளை எல்லாம் ஒழித்து, நின்னிடத்தில்ஆசையாகிய பக்தியை மேன்மேலும் பெருகி வரப்பெற்ற நாயினும் கடைப்பட்ட நான், பிறந்தும் இறந்தும் துன்பமாகிய சுழியில் அகப்பட்டுக் கொண்டு வருந்துதலினின்று நீங்கும் வழியையும், அதற்கு மேற்பட்ட பேரின்பப் பெருவாழ்வைப் பெறும் வழியையும், அடியேனுக்குத் தாங்கள் மறவாமல் அருள் செய்தல் வேண்டும். (98)

காட்டி நான்செய் வல்வினைப்
பயன் தனின் மனந்தனை
நாட்டி வைத்து நல்லஅல்ல
செய்ய எண்ணினார் எனக்
கேட்டதன்றி என்னது ஆவி
பின்னை கேள்வ நின்னொடும்
பூட்டி வைத்த என்னை நின்னுள்
நீக்கல் பூவை வண்ணனே.

பொழிப்புரை : நப்பின்னைப் பிராட்டியின் கணவனே! காயாம் பூப் போன்ற நிறம் உடையவனே! எமதூதுவர்கள் நான் செய்த கொடிய தீவினைகளை நினைவுபடுத்தி, அப்பாவங்களின் பயன்களை அனுபவிக்குமாறு என்னுடைய மனத்தை அவற்றில் வற்புறுத்தி ஈடுபடச் செய்து, கொடுமையான தண்டனைகளைச் செய்யக் கருதினார்கள் என்று நான் கேட்டிருப்பது நிகழாதபடி, என்னுடைய உயிரை நின்பால் சேர்த்து அடைக்கலமாகப் புகுத்தியுள்ள என்னை நின்னிடமிருந்து நீக்கி விடாதே.

பிறப்பினோடு பேர் இடர்ச்
சுழிக்கண் நின்றும் நீங்குமஃது
இறப்பவைத்த ஞான நீசரைக்
கரைக் கொடு ஏற்றுமா

பெறற்கரிய நின்ன பாதம்
பத்தி ஆன பாசனம்
பெறற்கு அரிய மாயனே
எனக்கு நல்க வேண்டுமே.

பொழிப்புரை: ஒருவராலும் தாமே முயன்று பெறுவதற்கு இயலாத மாயனே! பிறப்பு முதலிய பெரும் துன்பங்களாகிய சுழிகளிலே யிருந்து நீங்கி உய்வதற்கு உரிய சிறந்த மெய் யுணர்வை மறக்கும்படி செய்த ஞான மில்லாத நீசர்களைக் கரையிலே கொண்டு சேர்க்கும்படியாகப் பெறுதற் கரிய நின்னுடைய திருவடிகளில் கொள் ளும் பக்தி என்னும் தெப்பத்தை எனக்குத் தேவரீர் அருள வேண்டும்.

குறிப்புரை : இறைவன் பெறுதற்கரியவன். அவனை மறந்தமையினாலேயே உயிர்கள் துன்ப முறுகின்றன. பிறவிக் கடலில் விழுந்து துயரு றும் உயிர்களுக்குப் பக்தி உணர்வானது தெப் பம் போன்று பயன்படும். அப்பக்தி உணர்வு கைவரப் பெறுதல் எளிய செயலன்று. இறை வன் அருளினால்தான், ஒருவருக்குப் பக்தி உணர்ச்சி உண்டாகும் என்னும் சிறந்த கருத் துக்கள் இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளன. ஞான நீசர்—ஞானமில்லாத நீசர்கள், நீசரா யிருந்தும் தம்மை ஞானிகளாகக் கருதிக்கொண் டிருப்பவர்கள். பிற துறைகளில் எவ்வளவு தான் சிறப்புற்றவர்களா யிருப்பினும், இறை யுணர்வாகிய ஞானமில்லாதவர்களை நீசர்கள் எனவே ஆழ்வார் கருதுதல் மனங் கொள்ளத் தக்கது. பாசனம்—ஓடம், மரக்கலம், தெப் பம். இறைவன் தமக்குப் பக்திஉணர்ச்சியைக் கொடுத்தால், அதனால் தாம் மட்டுமேயன்றி நீசர்கள் பலரையும் கூடப் பிறவிக் கடலில் நீந்திக்கரையேறும்படி செய்வேன் என ஆழ்வார் குறிப்பிடுகிறார். (100)

—தொடரும்.

—ஆசிரியர்.

---

## மதிப்புரை

### இந்தியத் திவ்விய க்ஷேத்திரங்கள்:

இந்திய தேசத்தில் சைவ-வைஷ்ணவ க்ஷேத்திரங்கள் மிகப் பல உள்ளன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடியருளிய க்ஷேத்திரங்கள், அவற்றுள் மிகவும் புனிதமாக மதித்துப் போற்றப் படுகின்றன. திருமாலுக்கு 106 க்ஷேத்திரங்களும், சிவபிரானுக்கு 5 க்ஷேத்திரங் களும், முருகனுக்கு 6 படை வீடுகளும் சிறப்பானவை யாகும். இத்தலங்களைப் பற்றிய முழு விவரங்களையும் பக்தர்களுக்குத் தொகுத்தளிப்பதே இவ்வெளியீட்டின் முக்கிய நோக்கமாகும். இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, தமிழ் ஆகிய நான்கு மொழிகளில் இத் தொகுப்பு நூல் வெளி வரும். ஒவ்வொரு க்ஷேத்திரத்திற்கும் ஓர் அழகிய சிறந்த மூவண்ணப் படமும், எட்டுப் பக்க அளவில் தலவரலாற்றுக் கட்டுரையும் இதில் வெளியிடப் பெறும். பல சிறந்த பேரறிஞர்கள் தலவரலாற்றுக் கட்டுரைகளை எழுதி அளிக்க இசைந்துள்ளனர். பன்னிரண்டு ஆழ்வார்கள், சைவ சமயாசாரியர்கள் நால்வர் ஆகியோரின் அழகிய வண்ணப் படங்களும் இதன்கண் சேர்க்கப் பெறவுள்ளன. 1800 பக்கங்களும், 200 அழகிய படங்களும் கொண்டதாக, நல்ல வழவழப்பான சிறந்த தாளில் இந்நூல் வெளிவர உள்ளது. திவ்விய க்ஷேத்திரங்கள் அமைந்துள்ள இடங்களைக் காட்டும் இந்தியத் தரைப்படமும் (40'' x 30'') இதனுடன் இணைக்கப் பட்டிருக் கும். இந்நூல் பக்தர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும். இது பற்றி மேலும் அறிய விரும்புவோர் பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீ என். கிருஷ்ண சுவாமி,
வெளியீட்டுப் பொறுப்பாளர்,
இந்தியத் திவ்விய க்ஷேத்திரங்களின் தொகுப்பு மலர்,
6, தஞ்சாவூர் ரோடு,
தியாகராய நகர், சென்னை-17.

—ஆசிரியர்.

# நான் ஆர்? என் உள்ளம் ஆர்?

**முன்னுரை :**

தமிழ் மொழியானது, பக்தி உணர்வுப் பாடல்களுக்கு மிகவும் புகழ்பெற்றது. தமிழிற் போல உலகில் வேறு எம்மொழியிலும், பல்லாயிரக் கணக்கில் பக்தியுணர்வுப் பாடல்களைக் காண்டல் அரிது. ஆழ்வார்களும் நாயன்மார்களும், அவர்களின் வழி வந்த எத்துணையோ பல அருட் சான்றோர்களும், பற்பல ஆயிரம் பக்தி இலக்கியப் பாடல்களைத் தமிழில் அருளிச் செய்துள்ளனர். அவற்றுள் திருவாசகம் என்பது, மிகவும் தலை சிறந்ததொன்றாகத் திகழ்ந்து வருகின்றது.

**திருக்கோத்தும்பி :**

திருவாசகத்தில், 'திருக்கோத்தும்பி' என்பது ஒரு சிறந்த பகுதி. அதன்கண் மாணிக்க வாசகர், இறைவன் தம்மை ஆட்கொண்டு செய்தருளிய பலப்பல தண்ணளிகளை, மிகவும் வியந்தோதிப் புகழ்ந்து போற்றுகின்றார். 'சிவனோடு ஐக்கியம்' என்னும் பொருளை இத்திருப்பதிகம் உணர்த்துவதாகச் சான்றோர்கள் கொண்டுள்ளனர். 'பிற மலர்களில் உள்ள சிறிதளவு தேனை விரும்பித் தேடி உழலாமல், பேரின்பமாகிய சிறந்த தேனைப் பெற்றுண்ணுதற்கு இறைவனின் திருவடியாகிய தாமரை மலரிற் சென்று ஊதுவாயாக?' என வண்டை நோக்கிப் பாடும் முறையில் இத்திருப்பதிகம் அமைந்துள்ளது.

*நான்ஆர்? என் உள்ளம்ஆர்?*
*ஞானங்கள்ஆர்? என்னையார்அறிவார்?*
*வானோர் பிரான் என்னை*
*ஆண்டிலனேல்; மதி மயங்கி*
*ஊனார் உடைதலையில்*
*உண்பலிதேர் அம்பலவன்*
*தேனார் கமலமே*
*சென்றுஊதாய், கோத்தும்பீ!*

என்னும் பாடல், திருவாசகத்தில் 'திருக்கோத்தும்பி' என்னும் பகுதியில் வரும் ஒரு சிறந்த பாடல் ஆகும்.

**பாடலின் பொருள் :**

திருவாசகத்தில் அறிஞர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டும் மேற்கோட் பாடல்களுள் ஒன்றாகத் திகழும் சிறந்த பாடல் இது! நினைத்தொறும் ஊற்றெடுத்துச் சுரந்து பெருகும் பல, அரிய பெரிய கருத்துக்களை உட்கொண்டது இப்பாடல்! இதன் பொருள் வருமாறு:

*அரச வண்டே! தேவர்களின் தலைவன் ஆகிய சிவபிரான் என்னை வலிய வந்து ஆட்கொண்டருளி யிராவிட்டால், நான் எத்தன்மையினனா யிருந்திருப்பேன்? என் மனமானது எத்தகையதாக இருந்திருக்கும்? என்னுடைய உணர்வுகள் எவ்வகையினவாக இருந்திருத்தல் கூடும்? என்னை அடியவன் என்று உலகத்தில் யார் அறிந்திருப்பார்கள்? மதி மயங்கி ஊன்நிறைந்த தலையோட்டில் பிச்சை எடுத்து உண்ணுகின்ற தில்லை யம்பலவனாகிய சிவபிரானின் இன்பத் தேன் நிறைந்த திருவடித் தாமரை மலரினையே சென்றடைந்து, நீ ஊதுவாயாக!*

சிறந்த இப்பாடலின்கண் அமைந்துள்ள 'மதி மயங்கி' என்னும் தொடர், அறிஞர்களுக்குப் பெரிதும் மதி மயக்கம் தருவதாக விளங்கி வருகின்றது. இத்தொடருக்கு அறிஞர்கள் பலரும் பல வகைகளில் பொருள் கூறி வருகின்றனர். 'சிந்திப் பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன' என்னும் நிலையில், இத்தொடரானது புதிய புதிய பொருள்களை யுணர்த்துவதாகத் திகழ்கின்றது. ''உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே'' எனத் தொல்காப்பியர் பணித்

தருளியபடி, உணர்பவர்களின் அறிவு வலிமைக்கும் தவ வலிமைக்கும் ஏற்ப, இத்தொடர் எத்துணையோ பல பொருள்களை உணர்த்த வல்லதாக இருக்கின்றது.

**இருவகை நூல்கள்:**

நூல்களை அறிவு நூல்கள் என்றும், அனுபவ நூல்கள் என்றும் இருவகையிற் பிரிக்கலாம். அறிவு நூல்களுக்குப் பொருள் அறிதலும் அறிவித்தலும் எளிதாக இருக்கும். ஆனல் அனுபவ நூல்களின் பொருளை எல்லோருமே உணர்தல் இயலாது. ஓரோவழி அறிஞர் சிலர் உணரப் பெற்றாலும், அதனை முறையே எடுத்துப் பிறர்க்கும் எளிதின் விளங்கும்படி உணர்த்துதல், எளியதொரு செயலன்று. இராமாயணம் பாரதம் அகநானூறு புறநானூறு போன்ற இலக்கியங்களுக்கு, நல்ல கல்வி உடையோர் எவரும் பொருள் அறியவும் அறிவிக்கவும் இயலும். ஆனல் தேவாரம் திருவாசகம் திருமந்திரம் போன்ற அனுபவ ஞானப் பெரு நூல்களுக்கு எத்தகைய கல்வி வல்லமை உடையவரேயாயினும், யாம் இவற்றின் பொருள் நலங்களையெல்லாம் ஐயமறத் தெளிந்துணர்ந்து கொண்டோம் என்று எண்ணவும்இயம்பவும், ஒரு சிறிதும் துணிவு கொள்ளார். வெறும் அறிவு நூல்களுக்காயின், ஒருவர் ஒரு நாளைக்குப் பல நூறு பாடல்களுக்கு உரை எழுதலாம். ஆனல் அனுபவ ஞானப் பெரு நூல்களின் ஒரு சிறு தொடருக்குப் பொருள் காணப் பல ஆண்டுகள் முயன்றாலும் முடிவதில்லை.[1] அதனல் தான், திருவாசகம் திருமந்திரம் போன்ற அனுபவ ஞான அருட் பெரும் நூல்களுக்கு, முன்னைப்பெருஞ் சான்றோர்கள் எவருமே உரை எழுதத்துணிந்து முன் வந்திலர். இவ்வாற்றால் திருவாசகம் போன்ற தெய்வத் தமிழ் மறைத் திரு நூல்களுக்குப் பொருள் காணும் முயற்சியின் அருமைப்பாடு, இனையதென்று யாவரும் அறியலாம்,

**மதி மயங்கி:**

எனினும், இத்துறையில் நம்மால் இயன்ற அளவு முயன்று பொருள் நலம் காண முற்படுதல், குற்றமாகாது. ஆதலின் 'மதி மயங்கி' என இத் திருப்பாடலில் வரும் தொடருக்கு எவ்வெவ்வகையிற் பொருள் கொள்ளலாம் என்பது பற்றி, ஈண்டு ஒரு சிறிது சிந்தித்து இன்புறுவோம்.

(1) 'மதி மயங்கி' என்பதற்கு, 'மதி மயங்கியவனாக நடித்து' எனப்பொருள் கொண்டு, அதனை 'உண்பலிதேர் அம்பலவன்' என்பதனோடு இயைத்துமுடிபு கொள்ளலாம். இப்பொருளில் இத் தொடர் வினைஎச்சம் ஆகும். இது பொதுவாகப் பலிதேர்தலின் (பிச்சை எடுத்தலின்) இழிவைக் குறிப்பதாக அமையும்.

(2) 'மதி மயங்கி' என்பது, பிரமனைக் குறிப்பதாகக் கொண்டு, பிரமனின் 'ஊனர் உடைதலையில் உண்பலி தேர் அம்பலவன்' என இயைத்தும் பொருள் கொள்ளலாம். பிரமன் தன்னையே முதல்வனாக எண்ணித்தருக்குற்று நின்றனன் ஆதலின், அவனை 'மதி மயங்கி' எனக் கொள்ளுதல் பொருந்தும். இப்பொருளில் இத் தொடர் வினையாலணையும் பெயர் எனவும், ஆறும் வேற்றுமைத் தொகை எனவும் படும்.

(3) 'மதி மயங்கி' என்பதனை 'நானர்' என்பதனோடு மாட்டேற்று முறையால் இயைத்து, 'மதிமயக்க முற்றவன் ஆகிய யான் எத்தகையேன்' எனவும் பொருள் கொள்ளலாம்.

---

(1) பொருத்தமான ஓர் அடைமொழியைக் கண்டுபிடித்து அமைத்தற்கு, உலகப் புகழ்பெற்ற வில்லியம் வொர்ட்ஸ்வொர்த் என்னும் பெருங்கவிஞருக்கு 43 ஆண்டுகள் ஆயின என்பது, ஈண்டு இயைபுபற்றி உணரத் தக்கது.

"Dorothy Wordsworth records in her 'Journal' her brother William had tried to seek an epithet for the Cuckoo, and only after 43 years sound himself able to express the sound of the Cuckoo's 'Wandering voice'".

—*I. L. Lowes,*
Convention and Revolt in Poetry.

(4) 'மதி மயங்கி' என்பதனை 'ஆண்டிலனேல்' என்பதனோடு மொழிமாற்றி இயைத்தும் பொருள் கொள்ளலாம். இவ்வாறு கொள்ளின், இறைவனை மதி மயக்கமுடையவனாகக் குறிக்கின்ற குற்றம் வரும் என்று அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர். நம் மதி மயக்கத்தால் இறைவனின் மீது மதி மயக்கமாகிய குற்றத்தை ஏற்றி உரைத்தல் பெரும் பாவமாகும் என்று அறிஞர்கள் கூறுவர். ஆயினும், இவ்வாறு பொருள் கொள்ளுதலே இறைவனுக்குப் பெருஞ் சிறப்பாகும். உண்மையிற் கூறலுறின் இவ்வாறு கொள்வதே சிறந்த நய உரையாகும் எனலாம்.

## 'தேய் மதியன்'

இறைவன் பேரறிவினன், முற்றுணர்வுடையவன், ஞான சொரூபன், என்பன அனைத்தும் உண்மை. ஆயினும் அவனுக்கும் மதி மயக்கம் உண்டு என்று கூறத் தட்டில்லை. அம்மதி மயக்கம், இறைவனுக்குக் குறையாகாமல், இறைவனின் பெருங் கருணைத் திறனை விளக்கும் நிறைவேயாகும். இம்முறையில் ஆராய்ந்தால், மாணிக்க வாசகர் இறைவனின் இயல்பைக் கண்டறிந்து புதிதாகவும், பொருத்தமாகவும், முதல் முதலாகவும் அமைத்த அன்புப் பெயரே (Sobriquet), 'மதி மயங்கி' என்பது எனவும் கூறலாம். பிறிதோர் இடத்தில் இறைவனை மாணிக்க வாசகர் 'குணமிலி' 'மானிடன்' 'தேய் மதியன்' என்றெல்லாம் நயமுறக் குறித்திருத்தலும் கருதத் தக்கது (நீத்தல் 46). கரியின் உரிப்பிச்சன், தோலுடைப் பிச்சன், நஞ்சுண் பிச்சன், சுடுகாட்டு எரிப் பிச்சன் என்றெல்லாம் அவர்பாடியிருத்தலும் (நீத்தல் 49) நாம் சிந்தித்து உணர்தற்குரியது. இவ்வாற்றால், இறைவனை மதிமயக்கம் உடையவனாகவும் உணர்ந்து, மாணிக்க வாசகர் குறிப்பிட்டதனை வலியுறுத்தும் வகையில், நாம் பல அமைவுரைகள் கூறலாம். அவைகளுள் சில வருமாறு:—

### வானோர் பிரான்:

(1) இறைவன் 'வானோர் பிரான்' தேவர்களின் தலைவன். தேவர்களை அடிமையாகக் கொள்ளும் உரிமையும் சிறப்பும் உடையவன். அங்ஙனமாகவும் 'ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்டான்'. இஃது ஒன்றே அவன் மதி மயங்கி என்பதற்குச் சாலும்.

### நினைவின்றி:

(2) இறைவன் நல்லவர்களையும் அன்பர்களையும், திறம் தெரிந்து தேர்ந்து ஆட்கொள்ளும் தன்மையனாதல் வேண்டும். ஆனால், பொல்லாதவனும், அன்பில்லாதவனும், பலப்பல குறைகளை யுடையவனுமாகிய என்னை ஆட்கொண்டான். ஆட்கொள்ளத்தகாத என்னை அவன் ஆட்கொண்டமைக்கு ஏதேனும் ஒரு காரணம் இருத்தல் வேண்டும். அடியவர்களை ஆட்கொள்ளுங்கால், அவர் நடுவே இருந்த என்னை அவன் பிரித்தறிய மாட்டாமல் அடியவனாகவே கருதி மதி மயங்கி நினைவின்றி ஆண்டுகொண்டான் போலும்!

> நாயேனையும் இங்கு ஒருபொருளாக
> நயந்து வந்து
> நீயே நினைவுஇன்றி ஆண்டுகொண்டாய்...
> —அபிராமி அந்தாதி, 61

### யாதும் பெற்றிலன்:

(3) அடிமை கொள்ளும் தலைவராயினார், தம் நலன் கருதியே அடிமைகளை அமைத்துக் கொள்வர். அதுவே உலகியலிற் பலரிடத்தும் காணப்படும் உண்மை. ஆனால் இறைவனோ என்றால், தனக்கு ஒரு பயனும் பெறக் கருதாமல், எனக்கு நலஞ் செய்தற்கே என்னை ஆட்கொண்டருளினான். இஃது ஒருவகையில் மதி மயக்கமே அன்றோ?

> தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
> சங்கரா ஆர்கொலோ சதுரர்?
> அந்தம்ஒன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
> யாதுநீ பெற்றதொன் றென்பால்?
> —கோயில், 10.

**நகவேதரும் நாடகம்:**

(4) நல்லவர்களை உயர்த்துதலும், அல்லவர்களைத் தாழ்த்துதலுமே எங்கும் பொதுவாக நாம் காணும் நெறி. ஆனல் இறைவன் விண்ணேரைத் தாழ்த்தினன், புன்மையேனை உயர்த்தினன். தகுதி எதுவும் இல்லாத என்னை ஆட்கொண்டான். எம்பிரான் செய்த நாடகம் நகைப்பையே தருகின்றது (சதகம்-10) என மணிவாசகர் கூறுதல் கருதின், இறைவன் மதி மயங்கி யாதல் தெளியப்படும்.

**ஆசு தோஷி:**

(5) உலகத்துத் தலைவர் என்போர், அற்பப் பொருள்களுக்கு ஆசைப்படார். ஆசைப்படின், அவர் தலைவர் எனற்குத் தகுதியுடையவராகார். இறைவனே அற்பப் பொருள்களையும் விரும்பி ஏற்று மகிழ்பவன். அதனல் அவனுக்கு 'ஆசுதோஷி'[2] (அற்பப் பொருள்களை விரும்புபவன்) என்றும் ஒரு பெயர் வழங்கும். அற்பப் பொருள்களை விரும்புவதே ஒரு மதி மயக்கம். அற்பப் பொருள்களை விரும்பி ஏற்று, அவற்றிற்காகத் தன்னிடமுள்ள மிகவுயர்ந்த அரிய பொருள்களைப் பிறருக்குக் கொடுத்து விடுதல் அதனினும் மிக்க பெருமதிமயக்கம்! அடியார்கள் சிறிது தண்ணீரைத் தன் தலையில் வார்த்துப் பச்சிலையைக் கிள்ளித் தன்மேல் இட்டால் அதற்கு மிகவும் மகிழ்ந்து, எல்லாப் பெரும் பதவிகளையும் பேரின்பத்தையும் வழங்கி விடுகின்றன் இறைவன். இறைவனின் இச்செயல் மதி மயக்கமேயாகும் அன்றே?

குடங்கை நீரும் பச்சிலையும்
இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் கையிற் படுதலைகொண்டு
இடங்கள் தோறும் இரப்பாய்என்று
ஏசு வார்க்கென் பேசுவனே?

—பரஞ்சோதி முனிவர்.

**பித்தவடிவப் பிள்ளை:**

(6) இறைவன் ஒருவகையில் குழந்தையைப் போன்றவன். குழந்தைகள் பொருள்களின் அருமையையும் மதிப்பையும் அறியா. ஒரு காசு இனிப்புக்கு மகிழ்ந்து, விலையுயர்ந்த காசு மாலையையும் கழற்றிக் கொடுத்துவிடும் பொருள்களின் மதிப்பறியாத மதிமயக்கம் உடையன குழந்தைகள். தக்கார் தகாதார், நல்லார் பொல்லார் என்பன போன்ற பாகுபாடுகளையும் குழந்தைகள் அறிய மாட்டா. அவர்கள் எல்லோரையும் சமமாகவே கருதும். அந்நிலையில் குழந்தை எனத்தக்க இறைவன், தீவினையேன் ஆகிய என்னையும் நல்லவன் என்று கருதி, மதிமயங்கி அடியவனுக ஏற்றுக் கொண்டருளினன்.

மழக்கை யிலங்குபொற் கிண்ணம்என்றலால்
அரியை என்றுனைக் கருது கின்றிலேன்.

—சதகம், 91.

அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்
துறையான்
பித்தவடிவுகொண்டிவ்வுலகில்பிள்ளையும்
ஆம்.

—பூவல்லி, 19.

**வைதாலும் வாழ்விப்பவன்:**

(7) இறைவன் ஒருவகையிற் பித்தன், அறிவில்லாதவன். தன்னைத் தன் அடியவர்கள் இகழ்ந்தாலும், புகழ்ந்ததாகக்கொள்ளும் இயல்பினன். வாழ்த்துபவர்களுக்கு நலம் செய்வதும், வைபவர்களை ஒறுப்பதுமே, யாவர்க்கும் உரிய இயல்பான வழக்கம். இறைவனே வைதாரையும் வாழவைப்பான். அடியார்கள் நிந்தித்துப் பாடினும், அதையும் ஒரு பெரும் புகழாகக் கருதி, நிந்தையையே துதியாக ஏற்றுப் போற்றிமகிழ்பவன். இத்தகையவனை மதி மயங்கி என்பது பொருத்தமே அன்றே?

---

(2) "கல்கத்தா பல்கலைக் கழகத்தின் புகழ்பெற்ற துணை வேந்தராக விளங்கி யிருந்தவர் 'அசுடோஷ் முக்கர்ஜி' (Asutosh Mukherjee) என்பவர். அவர்தம் பெயரில் முதற்கண் உள்ள 'அசுடோஷ்' என்பது 'ஆசுதோஷி' என்னும் வடசொல்லின் மரூஉவே யாகும் என்பது, இங்கு நாம் இயைபுபற்றி அறிந்து இன்புறுதற்குரியது."

—ஆசிரியர்.

**நாய்க்குத் தவிசு:**

*(8)* உலகில் தக்கோர் யாரேனும் விருந்தினராக வருவராயின், அவர்களுக்குத் தவிசளித்துச் சிறப்புச் செய்தலே வழக்கமாகும். தன்னினும் மிகத் தாழ்ந்தவர்களுக்கோ, தீய கொடியவர்களுக்கோ, வெறும் புல்லியர்களுக்கோ தவிசளித்துச் சிறப்பிப்பதில்லை. யானோ நாயிலாகிய குலத்தினும் கடைப்பட்டவன். ஒரு நாயை வரவேற்று, அதற்குப் பொன்னால் இயன்ற தவிசளித்துப் பெருஞ் சிறப்புச் செய்வார் எவரும் இரார். இங்ஙனமாகவும் இறைவன் நாய்போன்ற எனக்குப் பொற்றவிசு அளித்தான். வானோர்களும் அறியாத பெருவளம் ஈந்தான்.

நானூர்அடி அணைவான்ஒரு
நாய்க்குத்தவிசிட்டு அங்கு
ஊனூர்உடல் புகுந்தான்உயிர்
கலந்தான்உளம் பிரியான்
தேனூர்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை யுறைவான்
வானோர்களும் அறியாததோர்
வளம்ஈந்தனன் எனக்கே.

—உயிருண்ணி, 2.

நம்மையும்ஓர் பொருள்ஆக்கி
நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக்கு அருளியவாறு
ஆர்பெறுவார் அச்சோவே.

—அச்சோ, 9.

நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு....

—சதகம், 28.

பொற்றவிசு நாய்க்குஇடுமாறு
அன்றேநின் பொன்அருளே

—ஏசறவு, 5.

நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்
படுத்த
தீமேனியான்.

—கோத்தும்பி, 20.

**தோஷ போக்யம்:**

*(9)* குணங்கண்டால் உவத்தலும், குற்றம் கண்டால் வெறுத்து ஒறுத்தலுமே எவரும் செயற்பாலது. அங்ஙனமாகவும் இறைவன் ''குறை உடையார் குற்றம் ஓரான்''. குற்றங்களை ஓராமை மட்டுமன்று. ''என் அடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்'' என்றாற்போல, அடியார் செய்த குற்றங்களையும் குணமாகவே கொண்டு விடுவான் இறைவன்! ஈன்றணிய பசுவானது தன் கன்றின் மீதுள்ள வழுக்களையும் நாவினால் விரும்பி உட்கொண்டுவிடும். கன்றின் அழுக்கையும் விரும்பும் பசுவின் சிறந்த அன்புடைமையையே 'வத்சல்யம்' (வத்சம்—கன்று) என்பர். அதுபோல இறைவனும் தன்அடியார்களின் குற்றத்தையும் ''தோஷபோக்கியம்'' எனும்படி, குணமாக உவந்து கொண்டு மகிழ்ந்தருள்வான். அவ்வியல்பு பற்றியே அவனுக்குப் 'பக்த வத்சலன்' என்பது பெயர் ஆயிற்று. அடியார்கள் செய்யும் ''பாதகத்திற்கும் பரிசு வைப்பவன்'' இறைவன். அடியார்களின் ''பாதகத்தையும் பணியாக்கி'', அவர்கள் ''செய்தனவே தவமாக்கி'' விடுதல், இறைவனது இயல்பாகக் காணப்படுகின்றது. ஞானசம்பந்தர் நாவுக்கரசர் நாளைப்போவார் சூதர் சாக்கியர் சிலந்தி கண்ணப்பர் முதலியவர்கள் குற்றம் செய்யினும், குணமெனவே கொள்ளும் கொள்கை அவனுக்குரியது! இத்தகைய இறைவனை மதி மயங்கி என்பதில் தடையும் உண்டோ?

**பொதுவினில் தீர்த்தோன்:**

*(10)* எல்லோரையும் ஒப்ப நோக்குதல் பொதுவாகத் தலைவர்களுக்குரிய இயல்பான கடமையாகும். ஒருவர்க்கு ஒரு நீதியும், பிறிதொருவர்க்குப் பிறிதொரு நீதியும் செய்தல் தலைவராயினார்க்கு முறையன்று. இம்முறை திறம்பி, நெறி பிறழ்ந்து நடப்போர் மதி மயங்கியே யாவர். இறைவன் எல்லோரையும் ஆட்கொள்ளும் பொதுமுறையி னின்று திறம்பி நெறி

பிறழ்ந்து, என்னை மட்டும் ஒரு தனி நெறி வகுத்து ஆட்கொண்டருளினன். ''பொதுவினில் தீர்த்து என்னை ஆண் டான்'' (கோவை, 146). யான் கடுமை யான விரதங்களைக் கடைப்பிடித்து வருந்தாமலும், செய்தற்கரிய தவத் தொழில்களை மேற்கொள்ள வேண்டா மலும், எனக்கு எளிவந்தான். எனக்கு அவனே ''தவ வினை தீர்ப்பவன்'' (கோவை, 107). உலகியல் வாழ்வி லேயே மயங்கித் தனக்கு முகம்கொடா மல் உழன்று கொண்டிருந்த என்னை 'வா வா என்று பூதலத்தே வலித் தாண்டு கொண்டான்'. ''புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே உண்டியாய், அண்ட வாணரும் பிறரும் என்பராய் நினைவார், எனைப்பலர் நிற்க, எற்றி னுக்கோ எனை ஆண்டான்?'' இத்தகை யவனை மதி மயங்கி என்றலே சாலப் பொருந்தும் என்றலில் தடை யாது?

மாணிக்க வாசகர் இறைவனைப் பல இடங்களிலும் பித்தன், எத்தன், கள் வன், சோரன், பேதை என அன்புடன் வழங்கி யிருத்தலால், மதி மயங்கி என் றும் அவர் இறைவனைக் குறித்ததாகக் கொள்ளுதலில், தவறேதும் இல்லை யென்க.

**இலக்கியங்கள் :**

சிறந்த பேரிலக்கியங்கள், தம்மை ஆழ்ந்து கற்குந்தோறும் கற்போர்க்குப் புதிய புதிய பல நுண் பொருள்களை விளக்கும் தன்மை வாய்ந்தன. நவில் தொறும் அந்நூல்களின் நயம் பெருகும். தொட்டனைத்தூறும் மணற்கேணி போலக் கற்றனைத்தும் அவற்றினின்று அறிவு ஊற்றெடுக்கும். 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்றதற் கேற்பப் புதிய புதிய பொருளனுபவம், அரிய பெரிய சிறந்த இலக்கியங்களைப் பயிலுங்கால் தோன்றிக் கொண்டே இருக்கும். நல்ல சிறந்த இலக்கியங் கள் உணர்த்திக் கொண்டு செல்லும் பொருட்டிறங்களுக்கு, ஓர் எல்லையே இல்லை எனலாம். 'இதுவா அல்லது அதுவா' என்ற முறையில் இல்லாமல், 'இதுவும் அதுவும் பிறிதும்' என்ற முறையில் அவற்றின் பொருட் பரப்பா னது, பரந்து விரிந்து கொண்டே போகும் என்பர் அறிஞர். அம்முறை யில் நாம் மேலே ஆராய்ந்த கருத்துக் கள் அனைத்துமே, மிக்க பொருத்தம் உடையனவாகும்!

**முடிவுரை :**

இவ்வுண்மையை வலியுறுத்துதற்கு, நாம் இதுகாறும் ஆராய்ந்த திருவாசகத் திருப்பாடலே, ஒப்பற்ற பெருஞ் சான்றாகும். இத்துணைச் சிறந்த திரு வாசகச் செந்தமிழ் மாமறையினை நாம் இடைவிடாமற் பயின்றோதி, இறை யருள் பெற்று உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்.

---

(3) "The proof of the purest poetry is that its meaning is *inexhaustible*...About the best poetry, and not only the best, there floats an atmosphere of *infinite suggestion*. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something *boundless* which is only focussed in it."

*—Prof. A. C. Bradley,*
Oxford Lectures on Poetry.

(4) "Words do not have *either–or* meaning in imaginative poetry; they have *and–and–meanings*. That is how poetry works."

*—Hilary Corke.*

# கைங்கரியச் செல்வம்

(மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.)

மாஞானிகளால் இருள் தருமாஞாலமென வழங்கப்பட்ட இந்நில வுலகில் அகவிருளையொழிக்க அருட் கடலான எம்பெருமான் சாஸ்திரங்களாகிய பெருவிளக்கை ஏற்றி வைத்தருளினன். ''கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பகமும் சொற் பொருள்தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினலருள் செய்து'' என்ற திருமங்கை யாழ்வார் பாசுரம் இங்கு உணரத்தக்கது. பிரமாணங்களுள் முதன்மை பெற்ற வேதங்களும், அவற்றுக்கு வியாக்கியானமாகத் தோன்றிய இதிகாச புராணங்களும் மற்றும் ஆழ்வாராசாரியர்களின் திவ்ய க்ரந்தங்களுமான நூல்களெல்லாம் கடல் போல் விளங்குவன. அவற்றுள் அறிவிக்கப்படும் அர்த்தங்கள் கடலலைகள் போலவும், கடலில் நுண் மணல்கள் போலவும் எண்ணிறந்துள்ளன வெனினும், அவை மூன்றே வகுப்பில் அடைக்கப்பட்டுள்ளன; தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் என்பனவாம் அவை. எது பரம்பொருளோ அதுவே தத்துவமெனப்படும், பரம் பொருளின் பதவிணை சேர்தற்கு எது உபாயமோ அதுவே ஹிதமெனப்படும். பதவிணை சேர்ந்த பின் அனுபவிக்கப்படுமது எதுவோ அதுவே புருஷார்த்த மெனப்படும். சிறிது விரித்துரைப்பின், திருமகள் கொழுநனே தத்துவமென்றும், அவனடி சேர்தற்குச் சரணு கதியே உபாயமென்றும், அடி சேர்ந்து அத்தாணிச் சேவகம் புரிதலே புருஷார்த்தம் என்றும் தேறி நிற்கும்.

இவற்றுள் கடையான புருஷார்த்தத்தைப் பற்றியே இங்குச் சிறிது விவரணங்காட்ட எழுகின்றேம். ஈண்டு நாம் திருக்கச்சி நம்பியின் பெருமையை யனுபவிக்கப் புகுந்ததனலும், நம்பிக்கு விளைந்த பெருமையெல்லாம் கைங்கரியச் செல்வத்தைப் பற்றியதே யாதலாலும், அதனை விவரித்துப் பேசுவதே நம்பியின் பெருமையனுபவமாகும். விஷ்ணு ஆலயங்களில் நாதமுனிகள் ஆளவந்தார் போல்வாரானஆசாரியர்கள் திருக்கோலம் திகழாத இடங்களிலும் திருக்கச்சி நம்பிகளின் திருக்கோலம் திகழக் காணுநின்றேம். அவர் விசேஷமாக நூல்களை இயற்றி உலகுக்கு உதவி புரிந்தவரல்லர். தேவப்பெருமாள்விஷயமாகத்தேவராஜாஷ்டகமென்னும் எட்டு சுலோகங்கள் கொண்ட சிறிய துதிநூல் ஒன்றை மட்டுமே இவர் பணித்துள்ளார். ஆகவே 'தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்' என்னும்படியான பெருமையைப் பற்ற இவர்க்குத் தேவாலயங்களில் திருக்கோலம் அமைந்ததென்ன இயலாது. ''திருவாலவட்டம் திருக்கச்சி நம்பி'' என்று உலகம் பரவிய வியபதேசம் பெற்ற இவ்வாசிரியர் கைங்கரியச் செல்வம் ஒன்றினலேயே பெருமை பெற்று விளங்கி ஆலயங்களிலும் சிறப்புப் பெற்றரென்பர் பெரியோர். ஆகவே இவ்வாசிரியர் திருவுள்ள முகக்குமாறு கைங்கரியத்தின் சிறப்பைச் சிறிது பேசுவோம்.

நாம் பெறவேண்டிய பெரும் பேறு பரமனடியிணையில் பணிவிடை செய்வதே யென்பதை மீண்டும் மீண்டும் விவரிக்கத் தேவையில்லை. பணிவிடை யென்பதும் கைங்கரியம் என்பதும் பரியாயமேயாகும். பணிவிடையென்பது தென்மொழி; கைங்கர்யம் என்பது வடமொழி என்னுமித்தனையே வாசி. கிங்கர: என்னும் சொல்லின் மேல் ப்ரத்யய விசேஷம் ஏறியதனல் கைங்கர்யமென்கிற சொல் தேறுகிறது. ''நியோஜ்ய கிங்கர ப்ரைஷ்ய புஜிஷ்யபரிசாரகா:' என்னும் அமர கோசத்தின்படி பணிவிடை செய்பவன் என்னும் பொருளைக் கொண்டது கிங்கர பதம். 'கிஞ்சித் கரோதீதி கிங்கர:' —ஏதேனும் ஒன்றைச் செய்து கொண்டிருப்பவனென்பது சொல்லின் மேல் தேறும் பொருள். அன்னவனுடைய செயல் கைங்கரியமெனப்படும். பகவான் திறத்திலும், அவனடியார்களான பாகவதர் திறத்திலும் செய்யும் பணிவிடையைக் கைங்கர்யமென வழங்குவர் பெரியோர்.

இங்கே ஒரு சிறு விசாரம். கீழே உதாஹரித்த அமர கோசத்தில் ''ஸேவாச்வவ்ருத்தி:'' என்று கூறப்பட்டது. 'பிறர்க்கு உழைப்பது

நாய் வேலை' என்பது இதன் பொருள். மநு தர்ம சாஸ்த்ரத்திலும் நான்கா மத்யாயத்தில் 'நாய் வேலையாகிய அடிமைத் தொழில் கொள்ளத் தகாதது'' என்று மறுக்கப் பட்டுள்ளது. அதைக் கண்ட ஒரு ரஸிகர் ''ஸேவாச்வ வ்ருத்திரிதியத் அபத்தம் தத்உதீரிதம், ஸ்வை ரசாரீ க்வ சுநக: விக்ரீதா ஸு: க்வ ஸேவக:'' என்றார். இதன் கருத்தானது—''அடிமைப் படுவது நாய் வேலை யென்று மனுமஹர்ஷி கூறியது தவறு; ஒருவர்க்கும் அடிமைப்படாமல் யதேஷ்டமாகத் திரிகிற நாய் எங்கே?- நாலு காசுக்கு உயிரை அறவிலை செய்திருக்கும் சேவகன் எங்கே?'' என்பதாம். இதனால் சேவகன் நாயினும் கடைப்பட்டவன் என்றதாம். இதைக் கொண்டு கைங்கரியத்தை இழி தொழிலாக நினைக்கலாகாது. வயிற்றை வளர்ப்பதற்காகச் செய்யும் சேவகத் தொழிலே அங்குப் பழிக்கப்பட்டது என்பது மூலத்திலேயே ஸ்பஷ்டமாக வுள்ளது. ஸ்வரூப ப்ரயுக்தமாகவும், குணங்கண்டும் உரிய விஷயங்களில் தொண்டு செய்வது பழிப்புக்கு இலக்காமதன்று. ''கண்டாரிகழ்வனவேகாதலன்தான் செய்திடினும், கொண்டானை யல்லாலறியாக் குலமகள்'' என்று ஸ்ரீ குலசேகராழ்வாரால் புகழப்பட்ட ஒரு பதிவிரதை தன் கணவனுக்குச் செய்யும் பல்வகைத் தொண்டுகளை இதிஹாஸ புராணங்களிற் கேட்பது தவிர, கட்கூடாகவும் காண்கிறோம். அங்ஙனமே சிஷ்யன் ஆசாரியனுக்குச் செய்யும் பணிவிடைகளும் பிரசித்தம். உபதேசரத்தின மாலையில் ''பின் பழகராம் பெருமாள் சீயர் பெருந்திவத்தில், அன்பதுவுமற்று மிக்கவாசையினால்—நம்பிள்ளைக் கானவடிமைகள் செய்யந் நிலையை நன்னெஞ்சே, ஊனமற வெப்பொழுதுமோர்'' என்று மணவாள மாமுனிகள் அருளிய பாசுரம் அறியாதாரில்லை.

பகவத் ராமாநுஜர் அருளிச் செய்த வேதார்த்த ஸங்க்ரஹத்தின் முடிவில் ''நநு ச, அத்யந்த சேஷதைவ ஆத்மந: அநவதிகாதிசயம் ஸுகமிதி உக்தம் பவதி; தததேத் ஸர்வ லோக விருத்தம்'' என்று தொடங்கிப் பூர்வ பக்ஷ ஸித்தாந்தங்கள் விசதமாக வரையப்பட்டுள்ளன. அங்கு ''ஸர்வம் பரவசம் து:க்கம் ஸேவா ச்வவ்ருத்தி:'' இத்யாதிகளை உத்க்ஷேபித்து ஒருங்க விட்டிருப்பதைக் காணவேணும். அதுவே முமுக்ஷுப்படி ரஹஸ்யத்தில் ''சேஷத்வம் துக்க ரூபகமாகவன்றே நாட்டில் காண்கிறதென்னில்; அந்த நியமமில்லை; உகந்த விஷயத்துக்கு சேஷமாயிருக்கும் இருப்பு ஸுகமாகக் காண்கையாலே'' என்கிற ஸ்ரீ ஸூக்திகளால் நிருபிக்கப்பட்டது.

துஷ்யந்த சக்ரவர்த்தியின் ஒரு செய்கையைக் கேளீர். இவன் வேட்டையாடச் சென்ற போது கண்வரென்னும் மகரிஷியின் ஆச்ரமத்திற் புகுந்து, அங்கு சகுந்தலையினிடத்தில் காதல் கொண்டான். அவள் வெய்யிலில் படுகிற தாபத்தைக் கண்டு மனமிளகிச் சொல்லுகிறான்—''ஸம்வீஜயாமி நலிநீதள தாலவ்ருந்தை:, ஸம்வாஹயாமி சரணுவுத பத்ம தாம்ரௌ'' என்கிறான். அம்மா சகுந்தலே! தாமரையிலையை விசிறியாக்கி வீசட்டுமா? உன் கால்களை என் மடியிலிட்டுக் கொண்டு வருடட்டுமா? என்கிறான். இவனோ சக்ரவர்த்தி. அவளோ ஒரு காட்டுப் பெண். இவன் இந்த வார்த்தை சொல்லுவதற்கு உரியவனா? என்று பார்க்க வேணும். அவள் பாலுண்டான உகப்பு சொல்லுவித்த தத்தனை. ஒரு காமுகனுடைய செய்கையையா உவமை கூறுவது? என்ன வேண்டா. ஸ்ரீ விஷ்ணு புராணம் (1-20-இல்) ப்ரஹ்லாதாழ்வானுக்கு அருள் செய்யத் தோன்றிய ஸ்ரீ நருஸிம்ஹ மூர்த்தி அந்தர்த்தானமடையப் போகிற சமயத்தில் வரம் வேண்டுகின்ற அந்த பாலபக்தன் 'யா ப்ரீதிர விவேகாநாம் விஷயேஷு அநபாயிநீ, த்வாம் அநுஸ்மரதஸ் ஸாமே ஹ்ருதயாந் மாபஸர்ப்பது'' என்றான். அவிவேகிகளான பாமரர்களுக்குச் சிற்றின்பங்களிலே எவ்வகையான காதல் குன்றாது மேன்மேலும் பெருகிச் செல்லுமோ அத்தகைய காதல் எனக்கு உன்றன் சிந்தனையில் கொழுந்து விட்டு வளர வேணுமென்பது மேலே காட்டின சுலோகத்தின் பொருள். ப்ரஹ்லாதனோ நாலைந்து பிராயச் சிறுக்கன். சிற்றின்பத்தைச் சிறிதும் அறியாதவன். சிற்றின்பங்களிலே பாமரர்களுக்கு எத்தகைய காதல் விளைகின்றதென்பதையும் அறியகில்லான். இப்படி யிருக்க, இவன் 'விஷயேஷு அவிவேகி நாம் யா ப்ரீதி:' என்று சொன்னது எங்ஙனம்? என்று விவேகிகள் விமர்சிக்க வேண்டும். துஷ்யந்த மஹாராஜன் போல்வாரான காமுகர்களினுடைய கதைகளைக் கேட்டிருந்து அதனால் சொல்லுகிறானென்ன வேணும். ஆகவே, பகவானுடைய கைங்கரியத்தில் பக்தர்களுக்கு உண்டாகும் அபிநிவேசத்திற்கு விஷயாந்தரங்களில் பாமரர்

ருக்குண்டாகும் ருசியை நிதர்சனமாகக் காட்டுதல் ஏற்குமென்க. கீழே நாமெடுத்துக் காட்டிய முமுக்ஷுப்படி ஸ்ரீ ஸூக்தியில் 'உகந்த விஷயத்துக்குச் சேஷமாயிருக்கு மிருப்பு ஸுகமாகக் காண்கையாலே'' என்ற விடத்தை வியாக்கியானித்தருளா நின்ற மணவாள மாமுனிகள் பாமரர்களின் பணிவிடையையே நம்மாழ்வார் ஸ்ரீ ஸூக்தியைக் கொண்டு மூதலிக்கிறார். (திருவாய்மொழி 4-1-5) ''பணிமின் திருவருளென்னும் அஞ்சீதப்பைம் பூம்பள்ளி, அணிமென் குழலா ரின்பக் கலவி யமுதுண்டார்'' என்ற பாசுரத்தின் ஈடு வியாக்கியானம் ஸேவிப்பது.

ஆக இவ்வளவால்—கைங்கரியம் செய்வதென்பது ஸர்வாத்மநா ஹேயம் என்று நினைக்கத் தக்கதன்று என்பதும், உகப்புக்கு இலக்கான விஷயத்தில் கைங்கரியம் பரமபோக்யமாகு மென்பதும் நிரூபிக்கப்பட்டது. இனி கைங்கரியத்தின் வகைகளை நிரூபிக்கிறேம். மாநஸிகம் வாசிகம் காயிகம் என்று கைங்கரியம் மூவகைப்படும். இவற்றுள், அது செய்ய வேணும் இது செய்ய வேணும் என்று நெஞ்சால் பாரிப்பதான மாநஸிகம் இருக்கட்டும். வாசிகமான கைங்கரியம் சில அதிகாரிகளுக்கே உற்றதாகும். வேதம் வல்லவர்கள், திவ்யப் பிரபந்தமோதினவர்கள், ஸ்தோத்ர நூல்களை யதிகரித்தவர்கள் வாசிக கைங்கரியம் பண்ண வுரியார். இக்கைங்கரியம் எம்பெருமானுக்கு ப்ரீதி கரமேயாகும். இதைவிட மேம்பட்டது காயிக கைங்கரியம். திருவிளக்கெரிக்கை, திருமாலையெடுக்கை, ஸ்ரீபாதம் தாங்குதல், சாமரை வீசுதல், குடை பிடித்தல் முதலியவை காயிக கைங்கரிய மெனப்படும். இவற்றுள் ஒன்றான திருவாலவட்டம் பணிமாறுதலாகிய தொண்டைக் கடைப்பிடித்தவர் திருக்கச்சி நம்பி. ஆலவட்டமென்று விசிறிக்குப் பெயர். ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடிகள் ''தொடை யொத்த துளபமுங் கூடையும் பொலிந்து தோன்றியதோள் தொண்டரடிப் பொடி யென்னும் அடியன்'' என்றும் ''துளபத் தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப் பொடி'' என்றும் தாமே பணித்தபடி அர்ச்சைத் திருமேனியில் துளபமும் கூடையும் பொலிந்து தோன்றுவது போலத் திருக்கச்சி நம்பிகளும் ஆலவட்டமும் கையுமாகவே எங்கும் காட்சி தருவர். ஆசார்ய ஹ்ருதயத்தில் (1-85) ''புஷ்பத்யாக போக மண்டபங்களில் பணிப் பூவு மாலவட்டமும் வீணையுங் கையுமான அந்தரங்கரை'' என்ற விடத்தில் ஆலவட்டமும் கையுமான அந்தரங்கராக வ்யபதேசிக்கப் பெற்றவர் திருக்கச்சி நம்பிகள்.

காயிக கைங்கரியத்திற் காட்டிலும் தனத்தால் செய்யும் கைங்கரியம் சிறந்ததென்று சிலர் நினைப்பதும் சொல்லுவதுமுண்டு. அது எம்பெருமான் திருவுள்ளத்தால் சிறப்புற்றதாகாது. ஏனென்னில், நாம் சரீரத்திலே அதிகமான அன்பு செலுத்துகிறோமோ? தனத்திலே அதிகமான அன்பு செலுத்துகிறோமா? என்று ஆராய்ந்து பார்ப்போமாயின், தனத்திற் காட்டிலும், சரீரத்திலேதான் மிக்க பிரேமம் காட்டுகிறோமென்பது கட்கூடு. இதைப் பலமுகமாக நிரூபிப்போம். பெருங்குற்றஞ் செய்த வொருவனுக்கு அரசன் 'ஆயிரம் ரூபா அபராதம், அதுகட்டத் தவறினால் ஒரு வாரம் காவல்' என்று சிக்ஷை விதித்தால் தரித்ரனும் சரீரத் துன்பத்தை ஸஹிக்க மாட்டாமல் பணத்தைச் செலுத்துகிறானே யொழிய, 'ஆயிரம் ரூபா எதற்காகச் செலுத்துவது! ஒருவாரம் சிறையிருந்து வந்து விடலாமே' என்று நினைத்துச் சிறையிருக்க இசைவதில்லை. பெருமாள் திருத்தேரிலெழுந்தருள, வடம் பிடிக்க வாருங்கள் என்றழைத்தால் 'வேணுமானால் பத்தெட்டு ரூபா தருகிறேன் கொண்டு போங்கள், ஒட்டன் வேலைக்கு நாம் வரோம்' என்பார்களேயன்றிப் பெறுப் பேறான இக்கைங்கரியம் செய்ய இதோ வருகிறேன்' என்று சொல்லி வடம் பிடிக்க வருவாரில்லையே.

சிலர் பணத்தைக் கனக்க மதித்து சரீரத்தை அலக்ஷியம் செய்வாருமுளர். திருவாய்மொழியில் (4-9-2-) 'சாமாறும் கெடுமாறும்' என்ற விடத்து ஈட்டில் ஒரு கதை யருளிச் செய்கிறார் காண்மின்; ஒரு ராஜத்ரோகியைத் தண்டிக்கும் அரசன் கையையும் காலையும் தெறித்து விடக் கட்டளையிட, ராஜபடர்கள் அப்படியே செய்தாயிற்று. உதிரமொழுக வொழுக வீடு வந்து சேர்ந்திருக்கிறான். சில நாழிகையில் உயிர் துறக்கப் போகிறான். உற்றாரும் உறவினரும் வந்து 'ஐயோ! இப்படியாயிற்றே!' என்று கண்ணீர் பெருக்கி வருந்தி நிற்க, தண்டனை யுண்ட இவன் சொல்லுகிறான்—'ஐந்நூறு தா, ஆயிரம் தா' என்று சொல்லிக் காசு பறித்துக் கொள்ளாதே இவ்வளவோடே போனது

உங்கள் ஆசீர்வாத பலமல்லவா? என்றுனும். முற்காலத்துத் தண்டனைகள் பலவிதமாயிருக்கும். தோசைக் கல்லைப் பழுக்கக் காய்ச்சி அதன் மேல் உட்காரச் சொல்லுவார்களாம். அந்தக் கல்லில் அரைத் துணியோடு உட்கார்ந்தாலும் கேள்வியில்லை. ஒருவன் துணி எரிந்து போனல் காசு நஷ்டமாகுமே யென்று அரைத் துணியை அவிழ்த்து வைத்து விட்டு உட்கார்ந்தானும். இவன் சரீரத்தை அலக்ஷியம் பண்ணிப் பணமே கண்ணுயிருப்பவன். மற்ருெரு கதையுங்கேண்மின். ஒரு குற்றவாளிக்குத் தண்டனை விதிக்கப் பட்டது. முப்பது ரூபா அபராதம் செலுத்த வேண்டியது; தவறினல் முப்பது சாட்டையடி படவேண்டியது; அதுவும் தவறினல் மூன்று விரல்களை யெடுக்க வேண்டியது என்று. எளிதாக முப்பது ரூபாயைச் செலுத்தி விட்டுப் போகலாமிவன்; பணம் கொடுக்கப் பின் வாங்கி முப்பது சாட்டை யடிக்குஇசைந்து நின்ருன். பத்தடிக்கு மேல் தாங்க முடியாமற் போகவே சிறிது நேரம் பொறுத்து மூன்று விரல்களை யெடுக்க ஸம்மதித்து நின்ருன்; இரண்டு விரல்களை எடுத்ததும் சகிக்க முடியாமற் போக முப்பது ரூபாயை வைத்திட்டுக் கும்பிட்டுப் போனுன். சாட்டையடிகளும் பட்டு விரல்களையுமிழந்து முடிவாக, வேண்டா வெறுப்புடனே பணத்தைச் செலுத்தினன். இத்தகைய பணப் பிசாசுகளிடத்தில் பகவான் பணத்தாற் செய்யும் கைங்கரியத்தையே பேணுவன். பணத்தைப் பொருள் படுத்தாது சரீரத்தைக் கனக்கப் பேணுமவர்களிடத்தில் சரீரத்தைச் சிரமப்படுத்திச் செய்யும் கைங்கரியத்தையே பேணுவன். பொதுவாகச் சரீரத்தைச் சிரமப் படுத்திச் செய்யும் கைங்கரியமே உத்தமமாகக் கருதப்படும். ஆகவேதான் பெரியாழ்வார் திருப்பல்லாண்டில் (3) ''வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்'' என்று சொல்லியழைத்தார். இதில் மண் கொள்ளுகை, மணங் கொள்ளுகை என்று இரண்டு கூறப்பட்டது. எம்பெருமானுடைய உத்ஸவங்களில் உடலால் சிரமப்பட்டுச் செய்யும் கைங்கரியம் மண் கொள்ளுகை. இஃது இடையூறின்றி நடைபெற வேணுமென்று அபிமானிக்கை மணங்கொள்ளுகை.

முடிவாக ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் கைங்கர்யமே பரமபுருஷார்த்தமாகக் கொள்ளப்பட்ட தென்பது உணரத் தக்கது. நம்மாழ்வார் திருவாய்மொழியில் நான்காம் பதிகத்தில் தூது விடத் தொடங்கும் போதே ''முன் செய்த முழுவினையால் திருவடிக்கீழ்க் குற்றேவல் முன் செய்ய முயலாதேன் அகல்வதுவோ விதியினமே'' என்ருர். 'ஒழிவில் காலமெல்லாம் உடனுய் மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண்டும் நாம்' என்று கைங்கரியத்தையே பாரித்தார். பெரியாழ்வார் 'உனக்குப் பணி செய்திருக்குந் தவமுடையேன்' என்ருர். ஆண்டாளும் திருப்பாவையில் 'குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது—உனக்கே நாமாட் செய்வோம்' என்ருள். தனது திருமொழியிலும் ''கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள் என்னும் இப்பேறு எனக்கருள் கண்டாய்'' என்றும், 'பள்ளி கொள்ளுமிடத்து அடிகொட்டிடக் கொள்ளுமாகில் நீ கூடிடுகூடலே'' என்றும் அருளிச் செய்தாள். இவற்றை அடியொற்றி ஆளவந்தார் 'கதா அஹம் ஐகாந்திக நித்ய கிங்கர: ப்ரஹயிஷ்யாமி' என்ருர். எம்பெருமானுர் சரணுகதி கத்யத்தில் பிரார்த்தித்தது 'நித்ய கிங்கரோ பவாநி' என்று. அரங்கனிடம் அருள் பெற்றதும் 'நித்திய கிங்கரோ பவ' என்றே. இவையெல்லாம் அனுஷ்டான சேஷமாகக் கண்டது திருக்கச்சி நம்பிகளிடத்திலே யாதலால், இவருடைய பெருமை ஒப்புயர்வற்ற தென்று தலைக்கட்டி நிற்கிருேம்.

*[பூவிருந்தவல்லியில் திருக்கச்சி நம்பி மகோற்சவத்தில் ஆற்றிய சொற்பொழிவு, 16-2-67].*

# தமிழ் நூல்களில் சிற்பக்கலை

(திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனுர், M.A., M.O.L. Ph.D.,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5.)

## சிற்பம் :

களிமண், மரம், தந்தம், கல், செம்பு, வெண்கலம், வெள்ளி, பொன் முதலியவற்றுல் கண்ணுற்காணும் உருவங்களை அல்லது கற்பனை உருவங்களை அமைப்பது சிற்பம் எனப் பெயர் பெறும். (1) உருவம் முழுமையையும் தனி யாகக் காட்டும் சிற்பம் ஒருவகை. தனிப் பட்ட உருவங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. தனிப்பட்ட தெய்வ உருவங்கள், மனித உருவங்கள், பிற உயிர்களின் உருவங்கள் முதலியன இவ்வகையில் அடங்கும். (2) உருவத்தின் ஒரு பக்கத் தோற்றத்தை மட்டும் காட்டும் சிற்பம் புடைப்புச் சிற்பம் எனப்படும். இது மற்றொரு வகைச் சிற்பம். இவ்வகைச் சிற்பத்தில் உருவம் பின்னணியுடன் சேர்ந்திருக்கும். புடைப்புச் சிற்ப உருவங்கள் உயர்ந்தும் இருக்கும்; தாழ்ந்தும் இருக்கும். உயர்ந்து இருப்பது உயர் புடைப்புச் சிற்பம் எனவும், தாழ்ந்து இருப்பது தாழ் புடைப்புச் சிற்பம் எனவும் பெயர் பெறும். புடைப்புச் சிற்பத்தின் உருவம் மேற்பரப்பினும் உயரமாக வெளிப்பட்டு இருக்கும். (3) மேற் பரப்பைக் குடைந்து அம்மேற் பரப்பினும் தாழ்ந்து இருக்கும்படி உருவத்தை அமைப்பது குடைவுச் சிற்பம்எனப் படும். நாணயங்கள், இலச்சினைகள், மணிகள் போன்றவை குடைவுச் சிற்பங்களாக அமைந்துள்ளதைக் காணலாம்.

சிற்பத்தின் பயனைக் கொண்டு அதனைப் பல வகைகளாகப் பிரித்தலும் உண்டு. (1) ஒரு கட்டடத்தை அழகு செய்ய, அதன் பகுதியாக அமைக்கப்படுவதை அலங்காரச் சிற்பம் என்னலாம். கோவில் தூண்களிலும் அரண்மனைத் தூண்களிலும், சுவர்களிலும் அமைக்கப் பெறும் புடைப்புச் சிற்பங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. (2) தனித்து நிற்கக் கூடிய சிற்பம் மற்றொரு வகை. வீரர் பொருட்டு நடப்படும் வீரக் கற்கள், மன்னர் புலவர் கலைஞர் அரசியல் உயர் அலுவலர் போன்றவர் நினைவாக நாட்டப்படும் சிலைகள், வெற்றித் தூண்கள் போன்றவை; நினைவுச் சின்னச் சிற்பங்கள் என்னலாம். (3) ஒருவரது உருவத்தை உள்ளவாறு காட்டுவது உருவச் சிற்பம் எனப் பெயர் பெறும்.

(1) சிற்பக் கலைக்குப் பயன்படும் பொருள் களுள் காலத்தாற் பழமை வாய்ந்தது களிமண்ணுகும். களி மண் கொண்டு உருவங்கள் செய்தல் எளிது. செய்த உருவம் சுடப்படின், உறுதி பெறும். சுட்ட மண் சிற்பம் வண்ணம் தீட்டுவதற்கு ஏற்றதாகும். இன்று நமது நாட்டில் உள்ள மண் சிற்பங்கள் அனைத்தும் சுடப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டவையே யாகும். (2) பழைய மக்கள் மரத்தைக்கொண்டும் சிற்பங்கள் அமைத்தனர். மரச் சிற்பங்கள் பசிபிக் தீவுகளில் வாழும் பழைய மக்களிடம் இன்றும் காணப்படுகின்றன. நமது நாட்டில் கோவில்களிலுள்ள காளை வாகனம், கருட வாகனம், யானை வாகனம் போன்றவையும் மரச் சிற்பங்களே யாகும். தேர்களில் காணப் படும் எல்லா வுருவங்களும் மரச் சிற்பங்களே. எண்ணிறந்த விளையாட்டுப் பொருள்களும் மரத்தாலானவையே. (3) யானைத்தந்தமும் சிற்ப வேலைக்கு ஏற்றதாகும். இது செதுக்குவதற்கு எளியது; நுட்ப வேலைப்பாடுகளுக்கு மிகவும் ஏற்றது. (4) மாக்கல், சலவைக்கல், பளிங்கு, கருங்கல் ஆகிய கல் வகைகளைக் கொண்டும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன; இன்றும் அமைக் கப்படுகின்றன. (5) செம்பு, வெண்கலம், வெள்ளி, பொன், பஞ்ச உலோகம் ஆகிய வற்றைக் கொண்டும் சிற்பங்களை அமைக்கும் பழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. தமிழகத்துக் கோயில்களிலுள்ள தெய்வ உருவங்கள் இப்பலவகை உலோகங்களால் ஆனவையே.

## பல்லவர் காலம் :

பல்லவர் காலம் ஏறத்தாழக் கி.பி. 300 முதல் கி.பி. 900 வரையில் என்னலாம். இக் காலத்தில்தான் வடநாட்டில் தோன்றிய பக்தி நெறி தென்னுட்டில் பரவியது. சைவ அடியார் அறுபத்து மூவரும் வைணவ அடியார் பன்னிரு

வரும் வாழ்ந்து முறையே சைவத்தையும் வைணவத்தையும் வளர்த்த காலம் இதுவேயாகும். பல்லவர் குடைவரைக் கோவில்களையும் ஒற்றைக் கற்கோவில்களையும் கற்கோவில்களையும் அமைத்த காலமும் இதுவேயாகும். பல்லவர்காலத் தமிழகத்தில் ஏறத்தாழ நானூறு சிவன் கோவிகளும் நூற்றெட்டுத் திருமால் கோவில்களும் விளங்கின என்பது, சைவத் திருமுறைகளாலும் ஆழ்வார் அருட் பாடல்களாலும் அறிகின்றோம். திருக்குறள் ஒழிந்த பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும், சைவத் திருமுறைகள் நாலாயிரப் பிரபந்தமும் பல்லவர் கால இலக்கியச் செல்வங்களாகும். அத்வைதக் கொள்கையை நாடு முழுதும் பரப்பிச் சங்கரர் வாழ்ந்ததும் பல்லவர் காலமே யாகும். பல்லவர் காலத்தில் பக்தி நெறி காட்டாற்று வெள்ளம்போல் தமிழகத்துக்குப் பேரூர்களிலும் சிற்றூர்களிலும் பரவியது. அக்காலத்தில் சமயத் தொடர்பாகவே சிற்பக் கலை மிகுதியாக வளர்ந்தது.

## சோழர் காலம்:

கி.பி. 10 முதல் 13-ஆம் நூற்றாண்டு வரையில் சோழப் பேரரசர் தென்னிந்தியாவைச் சிறப்புற ஆண்டனர். சோழர் பாடல்பெற்ற கோவில்களைக் கற்றளிகளாக மாற்றினர்; தஞ்சை இராசராசேச்சரம், இராசராசபுரத்து இராசேசுவரம், கங்கை கொண்ட சோழேச்சுரம், திரிபுவன வீரேசுவரம் போன்ற உலகம் வியக்கத்தகும் பெருங் கோவில்களையும் அமைத்தனர். அவர்கள் காலத்தில்தான் சீவக சிந்தாமணி பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற பெரிய காவியங்கள் தோன்றின. நாட்டில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய சமயங்கள் சிறந்திருந்தன. கோவில்களில் வழிபாடும் விழாக்களும் குறைவின்றி நடைபெற்றன. அரசன் முதல் ஆண்டி ஈறாக இருந்த அனைவரும் கோவில் வளர்ச்சியிலும் வழிபாட்டு உணர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டனர் என்பது, நூல்களாலும் எண்ணிறந்த கல்வெட்டுக்களாலும் தெரிகின்றது.

## விசயநகர ஆட்சிக் காலம்:

விசயநகரப் பேரரசு, முஸ்லிம்களின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தி இந்து சமயத்தை வளர்க்கத் தொடங்கிய பேரரசு என்னலாம். அக் காலத்தில் வானளாவிய கோபுரங்கள் கட்டப் பெற்றன. சிறிய கோவில்கள் பெரிய கோவில்களாக மாறின. ஆயிரக் கால் மண்டபங்களின் தூண்களில் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்தன. மதுரை-தஞ்சை-செஞ்சி நாயக்கர் ஆட்சியில் கோவில்களும் சிற்பங்களும் செழிப்புற்றன. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல், குமரகுருபரர் பிரபந்தங்கள், சிவப்பிரகாசர் பிரபந்தங்கள், அஷ்டப் பிரபந்தம், தேசிகர் பிரபந்தங்கள் முதலிய இக்காலத்தில் தோன்றின. இவை அனைத்தும் சமயச் சார்புடைய நூல்களேயாகும். சோழர் ஆட்சிக்குப் பின்னரே உலா, தூது, கலம்பகம், பிள்ளைத் தமிழ் முதலிய சிறு நூல்கள் மிகுதியாகத் தோன்றின. அவற்றுள் பல கடவுள் தொடர்பானவை. தஞ்சை மகாராட்டிரர் ஆட்சியில் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் தோன்றின. இது காறும் கூறப்பெற்ற நூல்களில் சமய வளர்ச்சி குறித்த செய்திகள் பலவாகும். அவை கோவில்களையும் உருவ வழிபாட்டையும் விழாக்களையும் கடவுளர் திருவுருவங்கள் உலா வருதலையும் பிறவற்றையும் நன்கு எடுத்துப் பேசுகின்றன.

தமிழ் மக்கள் மிகப் பழங்காலத்திலேயே எகிப்தியர் கிரேக்கர் உரோமர் சுமேரியர் அசீரியர் முதலிய அயல் நாட்டினருடன் வாணிகத் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. பண்டைக் காலக் கடல் வாணிகம் பற்றிய செய்திகள் சங்க நூல்களிலும் காணப்படுகின்றன. கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'சாலமன்' என்ற அரசனுக்குத் தமிழகத்திலிருந்து மயில் தோகை யானைத் தந்தம் முதலியன ஏற்றுமதி செய்யப் பெற்றன. பொனீசியர் கப்பல்களில் சேர நாட்டு மிளகு மிகுதியாக அனுப்பப் பெற்றது. பாபிலோனில் தென்னிந்திய வணிகர் குடியேறி வாழ்ந்தனர். சுமேரிய மக்கள் மலையாள நாட்டுத் தேக்கு மரத் துண்டுகளைப் பயன்படுத்தினர். கி.மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் உரோமப் பேரரசனாக விளங்கிய அகஸ்டஸ் என்பவனோடு தமிழ்வேந்தர் வாணிக உறவு கொண்டனர். நம் நாட்டு யானைத் தந்தம் அங்கு மிகுதியாக அனுப்பப்பட்டது. உருவச் சிலைகள் தேர்கள் வண்டிகள் மேசைக் கால்கள் சீப்புகள் முதலியன உரோம நாட்டில் யானைத் தந்தங்களால் செய்யப் பெற்றன.

யவனர் தமிழ் நாட்டுத் தலைநகரங்களிலும் துறைமுகப் பட்டினங்களிலும் குடியேறி வான

ளாவிய மாளிகைகளில் வாழ்ந்தனர். தமிழரசர் யவனர்களிடமிருந்து பலவகை இயந்திரங்களையும் கண்ணாடிப் பொருள்களையும் குடிவகைகளையும் அன்ன விளக்கு, பாவை விளக்குப் போன்ற பொருள்களையும் பெற்றனர்.

## மேனாட்டுச் சிற்பக்கலை:

பண்டை எகிப்தியர் கி.மு. 4500 முதல் கி.மு. 250 வரையில் சிற்பக் கலையை நன்கு வளர்த்தனர் என்பது, அவர்கள் அமைத்த கல்லறைக் கோவில்களிலிருந்து கிடைக்கும் சிற்பங்களிலிருந்து நன்கு அறியலாம். அவர்கள் மரம், சுண்ணாம்புக்கல், சலவைக்கல், வெண்கலம் முதலிய பல பொருள்களைக் கொண்டு சிற்பங்களை அமைத்தனர்; கோவில்களின் முன்னும் மண்டபங்களிலும் நினைவுச் சிற்பங்களை நிறுவினர். பண்டைச் சுமேரியர் கி.மு. நாலாயிரத்துக்கு முன்பே செம்பைக் கொண்டு மனித உருவங்களையும் விலங்கு உருவங்களையும் தெளிவாக அமைக்க அறிந்திருந்தனர். பிரிட்டிஷ் பொருட்காட்சி நிலையத்தில் அவற்றை இன்றும் காணலாம். சுமேரியர், மரம், செங்கல், கருங்கல், உலோகம் ஆகியவற்றைக் கொண்டு சிற்பங்களை அமைத்தனர்.

கிரேக்கர் ஏறத்தாழக் கி.மு. பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் சிற்பக்கலையைச் சிறப்பாகப் பேணி வந்தனர். மண், தந்தம், உலோகம் என்பன சிற்பங்களுக்கு மிகுதியாகப் பயன் பட்டன. இடைசிறுத்த மனிதர் சிலர் எருதுகளைப் பிடிக்கும் காட்சி புடைப்புச் சிற்பமாக ஒரு பொற் கோப்பை மீது அமைந்துள்ளது. அது, கி.மு. ஆயிரத்துக்கு முற்பட்டது. கிரேக்கச் சிற்பங்கள் பெரும்பாலும் வண்ணம்தீட்டப் பெற்றவை. காலம் செல்லச் செல்லக் கிரீஸில் மிகுதியாகக் கிடைக்கும் சலவைக் கல்லைக் கொண்டே சிற்பங்கள் அமைக்கப் பெற்றன. காலப் போக்கில், கிரேக்கர் தெய்வ உருவங்களைக் கண்கவர் முறையில் அமைக்கலாயினர். வெண்கலம் முதலிய உலோகங்களும் சிற்பங்களுக்குப் பயன்படுத்தப் பட்டன. கிரேக்கர் உட்கூடாக உள்ள வெண்கல வார்ப்பு முறையைக் கண்டுபிடித்தனர். அது சிற்பக்கலை வளர்ச்சிக்குப் பெருந் துணைபுரிந்தது. கிரேக்கர், சுட்ட களி மண்ணாலும் சிறிய வடிவங்களைச் செய்வதில் திறமை பெற்றிருந்தனர். அலெக்சாண்டர் படையெடுத்துச் சென்ற நாடுகளில் கிரேக்கரது சிற்பக் கலை பரவத் தொடங்கியது.

உரோமப் பேரரசின் காலத்தில் கிரேக்கச் சிற்பக்கலை உரோமப் பெரு நாட்டில் மிகுதியாகப் பரவியது. சிற்பக் கலையின் ஒரு கிளையான உருவச் சிற்பக் கலை சிறப்புற வளர்ந்தது. அவ்வுருவச் சிற்பங்கள், அவ்வுருவங்களுக்குரிய மக்களின் இயல்புகளைத் தெளிவாகக் காட்டுகின்றன. சுருங்கக் கூறின், அச்சிலைகள் அவர்களையே நம்முன் உயிரோடு நிறுத்துகின்றன என்னலாம்.

## இந்தியச் சிற்பக்கலை:

ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்து வெளியில் எகிப்து, சுமேரியா, கிரீஸ் ஆகியவற்றோடு ஒத்த உயர்ந்த நாகரிகம் நிலவியது என்பது, சிந்து வெளியில் கிடைத்த புதை பொருள்கள் வாயிலாக உறுதிப் படுகின்றது. யோகியைக் குறிக்கும் சுண்ணாம்புக் கற்சிலை ஒன்று அங்குக் கிடைத்துள்ளது; பலவகை மண் உருவங்களும் கற்சிலைகளும் நடனமாதை உணர்த்தும் வெண்கலச் சிற்பமும் புடைப்புச் சிற்பங்களைக் கொண்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட முத்திரைகளும் கிடைத்துள்ளன. கற்சிலைகளின் கைகள் தனியே செய்து இணைப்பதற்கு ஏற்றவாறு அச்சிலைகளில் தொளைகள் அமைக்கப்பட்டுள்ளன. நடனமாதின் வெண்கலச் சிலை வார்ப்படச் சிலையாகும். அச்சிலை மிகவும் வழவழப்பாகவும் ஒழுங்காகவும், உயர்வைக் குறிப்பதாகும். சிந்து வெளி நாகரிகம், கிரேக்க நாகரிகத்திற்கு முற்பட்டதாகும் வெண்கலத்தால் செய்யப் பெற்ற எருமை, குரங்கு, வெள்ளாடு முதலியவற்றைக் குறிக்கும் சிற்பங்கள் சிறந்த வேலைப் பாடுகளைக் கொண்டவை. மண்ணாலான பல வகை உயிர்களைக் குறிக்கும் சிற்பங்களும் அங்குக் கிடைத்துள்ளன. முத்திரைகள் மாக்கல்லால் ஆனவை. அவற்றின் ஒரு புறத்தில் எருது, மரம் முதலியனவற்றின் உருவங்களும் சித்திர எழுத்துக்களும் செதுக்கப் பெற்றுள்ளன.

கி.மு. மூன்றும் நூற்றாண்டில்வாழ்ந்த அசோகர் நாட்டின் பல பகுதிகளில் ஒற்றைக் கல் தூண்களை நாட்டியுள்ளார். இவற்றின் போதிகைகளில் எருது, குதிரை, யானை, சிங்கம் முதலியவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த உருவங்கள் வீரியத்தோடும இயற்கையாகவும் நயமாகவும் செதுக்கப்பட்டுள்ளன. மௌரியச் சிற்பக் கலையில் கிரேக்கக் கலையின் செல்வாக்கும் பாரசீகக் கலையின் செல்வாக்கும்

ஓரளவு இடம் பெற்றுள்ளன. மௌரியர் காலச் சிற்பங்கள், தொன்று தொட்டு வரும் வட இந்தியச் சிற்பக் கலைப் பயிற்சியின் அநுப வத்தை நன்கு உணர்த்துகின்றன.

மௌரியர்க்குப் பின்வந்த சுங்க மரபினர் காலத்தில் பாருத், புத்தகயா, சாஞ்சி முதலிய இடங்களில் பௌத்தத் தூபிகள் அமைக்கப் பட்டன. அத்தூபிகளைச் சுற்றிலும் கல்வேலி கள் அமைக்கப்பட்டன. அவ் வேலிகளில் பல வகையான சிற்பங்கள் செதுக்கப்பட்டன. கல் வேலியிலும் தோரண வாயிலிலும் புடைப் புச் சிற்பங்கள் பல இடம் பெற்றன. அச் சிற்பங்களில் புத்த ஜாதகக் கதைக் காட்சி களும், புத்தர் வரலாற்றுக் காட்சிகளும் அழ குறவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளன. பௌத்த முனிவரும் சமண முனிவரும் வழி படுதற் கமைந்த கோவில்களும், வாழ அமைந்த மடங்களும், நாஸிக், கால்லே, அஜந்தா, எல் லோரா முதலிய இடங்களில் குகைகள் வடிவத் தில் உள்ளன. அக்குகைகளின் முகப்புகளும் தூண்களும் சிற்ப வேலைப்பாடு மிகுந்தவை. வட இந்தியாவில் உள்ள மதுரையில் இந்து-பௌத்த-சமண சமயங்களில் சிற்பங்களைத் தெளிவாகக் காணலாம்.

அலெக்சாந்தர் படையெடுப்புக்குப் பின்பு இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் இந்திய-கிரேக்க-பாரசீகச் சிற்பக் கலைகளின் கலப்புக் கலை, காந்தாரக்கலை என்னும் பெயரோடு தோற்றமெடுத்தது. அவற்றுள் பல புத்த சமயச் சார்புடையவை. மனித உருவங்கள் உடற்கூற்று விளக்கங்களோடு அமைந்தவையே, காந்தாரச் சிற்பத்தின் சிறப்பியல்பாகும். இந்த இயல்பு கிரேக்கக் கலையிலிருந்து வந்தது. காந் தாரச் சிற்பங்கள் பெரும்பாலும் காரை பூசைப் பெற்று, வண்ணம் தீட்டப் பெற்று, மெருகிடப் பெற்றவை. வட இந்தியாவில் காந்தாரச் சிற்ப மரபும் வடமதுரைச் சிற்ப மரபும் பிற சிற்ப மரபுகளும் சிறந்து விளங்கிய காலத்தில் கிருஷ்ணையாற்றை அடுத்துள்ள அமராவதி, ஜக் கையபேட்டை, நாகார்ச்சுன கொண்டா முத லிய இடங்களில் ஆந்திர மன்னர்களின் ஆதர வில் தனிச் சிற்பக் கலை மரபு சிறந்து காணப் பட்டது. அவ்விடங்களில் அழகிய பௌத்தத் தூபிகள் அமைக்கப்பட்டன. அவற்றைச் சுற் றிக் கல்வேலிகள் அமைந்தன. தூபிகளிலும் கல் வேலிகளிலும் கண்ணைக் கவரும் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப் பெற்றன. புத்தர் வாழ்க் கைக் காட்சிச் சிற்பங்கள், புத்த ஜாதகக் கதைச் சிற்பங்கள், யட்ச வடிவங்கள், நாகர் வடிவங் கள், தாமரைப் பூ உருவங்கள் என்பன சிறப் பாக அமைந்திருந்தன.

இந்தியாவில் குப்தர் காலத்தில் (கி.பி. 300-600) பௌத்த-சமண-இந்து சமயங்களைச் சேர்ந்த தெய்வ உருவங்கள் முடிவான அமைப்பைப் பெற்றன என்று சொல்லலாம். குப்தர்கள் காலத்தில் சைவ வைணவக் கோவில்கள் பலவாக எழுந்தன. அக்கோவில் களின்சுவர்களும் தூண்களும் சிகரங்களும் சிற்பங்களால் சிறப்புற்று விளங்கின. குப்தர் காலத்தில் பெரும்பாலான வடமொழிப் புரா ணங்கள், எழுதி முடிக்கப்பட்டன. இதிகாசங் கள் விரித்து எழுதப்பட்டன. குப்தருக்குப் பின் கி. பி. 600 முதல் 1200 வரை ஒரிஸ்ஸாவில் பரசு இராமேசுவரர் கோவில், ஜகந்நாதர் கோவில், முக்தேசுவரர் கோவில், லிங்கராஜர் கோவில் என்பவை சிற்பச் சிறப்போடு கட்டப் பெற்றன. இராஜபுதனத்தில் உண்டான கோயில்களும் சிற்பச் சிறப்பு வாய்ந்தவை. கூர்ச்சரம், கத்தியவார், கட்சு என்னும் இடங் களில் கோவில்கள் தோன்றின. மாடேரா என்னும் இடத்தில் உள்ள சூரியன் கோவில் செதுக்கு வேலைப்பாடுகள் நிறைந்தது. கூர்ச்சரத்துக் கலை மண்டபக் கூரையின் உட் புறத்தின் நடுவிலுள்ள சிற்பத் தொங்கட்டம், மிகச் சிறந்த வேலைப்பாடு கொண்டது. எல் லோராச் சிற்பங்கள் உலகம் வியந்து போற்றும் வேலைப்பாடுகள் கொண்டவை. சிவனைத் திரி புராந்தகனாகவும், கங்காதரனாகவும், திருமாலைக் கருடவாகனனாகவும், இராவணன் தன் தலை களைச் சிவனுக்குப் பலியிடுவதாகவும் காட்டும் சிற்பங்கள் வேலைப்பாட்டில் மிகவுயர்ந்தவை. எலிபெண்டாவிலுள்ள நடராசர் வடிவம், சிவ-பார்வதி திருமணச் சிற்பம், சிவன் இராவண னது செருக்கை அடக்கும் சிற்பம் என்பவை சிறந்த வேலைப்பாடு கொண்டவை.

கி.பி. 1050 முதல் 1300 வரையில் கன்னட நாட்டில் சிறந்திருந்த ஒய்சளர் அமைத்த கோவில்களிலுள்ள சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே ஈர்ப்பவை. ஹலபீடு (பழைய வீடு-துவரை) என்னும் இடத்தி லுள்ள ஒய்சளேசுவரர் கோவில், கேதாரீசு வரர் கோவில் ஆகிய இரண்டிலும் அடி முதல் முடி வரையில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்

துள்ளன. இவ்வளவு மிகுதியான சிற்ப வேலைப்பாடுகளை இந்தியாவில் வேறு எக் கோயிலிலும் காணுதல் இயலாது. சிற்பங் கள், கோவிற் சுவர்களில் அடுக்கடுக்காகக் குறிப்பிட்ட ஒரு முறையைப் பின்பற்றி அழ காகச் செதுக்கப்பட்டுள்ளன. ஒய்சளேசுவரர் கோவில் அடி வரிசையில் ஏறத்தாழ இரண்டா யிரம் யானைகள் செதுக்கப்பட்டுள்ளன; அடுத்த வரிசையில் சிங்கங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு வரிசையிலும் ஒழுங்கு தவறாமல் ஒரேவகை வேலைப்பாடு காணப்படு கிறது.

விசய நகர ஆட்சியில் திராவிடக் கலை முதிர்ச்சி நிலையை அடைந்தது என்பது பொருந் தும். விசயநகர வேந்தர் காலத்தில், பழைய கோவில்கள், சுற்றியிருந்த துணைக் கோவில் களும் மண்டபங்களும் சேர்த்துப் பெரிய கோவில்களாக அமைக்கப்பட்டன. அம்மன் கோவில், திருமண மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் என்பவை சிற்பங்கள் செறிந்த தூண் கள் கொண்டவை. பாழடைந்த விசய நகரத் திலுள்ள விட்டல சுவாமியின் கோவில் தூண் கள் அடி முதல் நுனி வரையில் சிற்ப வடிவங் களால் சிறந்திருத்தலை இன்றும் காணலாம். எழுந்து நிற்கும் குதிரைகளையும் யாளிகளையும் முன்பக்கத்தில் கொண்ட தூண்கள் பார்க்கத் தக்கவை. அவற்றின் மேலும் அடியிலும் மனித உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.



பெரியபாளையம் ஸ்ரீ ஐம்முக்தீசுவரர் கோயிலின் வெளிப்புறத் தோற்றம்.

# உபநிடதக் கலை

(கவியோகி மகரிஷி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், அடையாறு, சென்னை-20)

## முன்னுரை :

உபநிடதத்தைத் தெள்ளிய தமிழில் வடித்துத் தரும்படி வேண்டினர் 'திருக்கோயில்' ஆசிரியர். உள்ளொன்றிய அருட்கலை வாழ்வு தான் உபநிடதம். உபநிடதப் பாசுரங்கள் பல என்றாலும் அவற்றின் கருத்து ஒன்றே. ஆதலால் ஒருமையில் தலைப்பு அமைந்துள்ளது. 108 உபநிடதங்களையும் ஆய்ந்துணர்ந்துதனித்தனித் தலைப்புக்களில் எழுதுவேன். தமிழருக்காக எழுதுவதால், மூலத்தையும் தமிழ் மொழி பெயர்ப்பிலேயே உணர்த்துவேன்.

## 1. வாழ்வாங்கு வாழும் வகை :

உலகில் எப்படி யெப்படியோ வாழ்கிறோம். என்னென்னவோ நினைக்கிறோம், செய்கிறோம், பேசுகிறோம். எங்கெங்கோ செல்லுகிறோம். உள்ளே ஏதோ உந்துகிறது; ஏதோ செய்ய முந்துகிறது. நாம் விழித்திருக்கும்போது புலன்கள் வெளியே திரிந்து எவ்வெவற்றையோ படம் பிடித்துச் சித்தத்தில் கொண்டு குவிக்கின்றன. மனம் அதன் வழியே அலைகிறது. மனவிகாரம் இனவிகாரமாகி, கனவிகாரமாகி, கவலைக் கடலாகிப் புயல் வீசி அமைதியைக் கெடுக்கிறது. இந்த அலை மனதை நிலை நிறுத்த வேண்டும். மனமே மனிதன் ; மனமெப்படி மனிதன் அப்படி; மனிதன் எப்படி, வாழ்வும் அப்படியே அமையும். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால் தெய்வத் தன்மை பெறலாம். மனத்துக்கண் மாசிலனுதலே அறநெறி, திருநெறி. இச் செந்நெறியை உணர்த்தி வழிகாட்டி அமைதி யின்பம் தருவதே உபநிடதம் ஆகும்.

## 2. எல்லாரும் போற்றும் வாக்கு :

எனது உலக யாத்திரையில் எத்தனையோ அருட் பெரியாரைக் கண்டேன். எல்லாரும் உபநிடதத்தைப் போற்றுகின்றனர். ஆர்வமுடன் கற்கின்றனர். இந்தியா என்றாலும் இந்து மதம் என்றாலும் உபநிடதம் என்றே அறிஞர் அறிவர். ஷோபன்ஹௌர் என்ற ஜெர்மன் அறிஞர், இளமையில் கவலை யிடர்ப் பட்டார். அவர் தாயாரே அவருக்குப் பகையானுர். பல நூல்கள் கற்றும் மனம் தெளியவில்லை. ஒரு பிரெஞ்சு அறிஞர் அவருக்கு உபநிடத மொழி பெயர்ப்பை அளித்தார். ஷோபன் ஹௌர் அதை அள்ளிப் பருகிவியந்து நயந்து போற்றினுர். ''என் வாழ்வின் வழி காட்டி உபநிடதமே. அதுவே எனக்கு இம்மை மறுமை இன்பமளிக்கிறது. அதை என்றும் ஓதி யுணர்வேன்'' என்றுர். பிரெஞ்சு நாவலாசிரியரான விக்டர்யூகோ, கேனுப உபநிடதத்தைப் பிரெஞ்சில் கவிதை யாக்கி அடிக்கடி சிந்தித்தார். அமெரிக்காவின் மூன்று அறிஞரான எமர்சனும், வால்ட் விட்மனும், தோரோவும் உபநிடதக் காதலாயினர். ஃஜென் புத்தக் குருக்களான (Zen master) டாக்டர் சூசுகி, உபநிடதத்தை ஆர்வமுடன் கற்றுர். 'உள்ளதை உள்ளபடி உணர்த்துவதே உபநிடதம்' என்றுர். மெய்ப் பொருளை அருகே உள்ளத்தில் விளக்குவதே உபநிடதமாம். விவேகானந்தர் கடோபநிஷத்தையே தமது வழி காட்டியாகக் கொண்டு அறிவுச் செல்வமளித்தார். சங்கரர் ராமானுஜர், மத்வாசாரியார் அனைவரும் உபநிடதங் கற்றே பேசினர், எழுதினர், வேதாந்த முழக்கம் செய்தனர்! வேதாந்தத்தின் உயிர் நாடி பிரம சூத்திரம், கீதை, உபநிடதம் ஆகிய மூன்றுமாம். இந்த மூன்றையும் பிரஸ்தானத்ரயம், அறிவின் இருக்கை என்பர். இந்த மூன்றின் உயிரும் உபநிடதமே. உபநிடதத்தின் திட்பநுட்பக் கருத்துச் செறிவே பிரம சூத்திரங்களாம். உபநிடதப் பசுவின் பாலே கீதாமிருதமாகும். நமது சமயத்தையே உபநிடதக்கலை என்னலாம்.

## 3. வேத விளக்கம் :

உபநிடதம் வேதத்தின் தலையாகும். வேதம் மூன்று காண்டங்களால் ஆனது. 1. கர்ம காண்டம், 2. உபாசன காண்டம், 3. ஞான காண்டம். இவையே ஞான பக்தி கர்ம யோகங்களாகி நாம் யார் என்று ஞாபகப் படுத்துகின்றன. வேதத்தின் உடல் கர்மம், உள்ளம்

பக்தி உபாசனை, மூளை உபநிஷத்தான ஞானம். இந்த மூன்றும் உகத்தலே யோகம் (ஓகம்) ஆகும். மனித வாழ்வின் பெரும் ஆராய்ச்சி 'நானுர் என் உள்ளமார், என்னுள் அறிவதார்' உயிர்ப்பதார்? '' என்பதே. இதற்கு விடையளிக்கும் அருட்கலையே உபநிடதம்.

எங்குற்றேம் என்ன செயல்
எங்கு செலல் என்றறிவோன்
கங்குற்கடல் கடந்தோன் காண்.

இந்தக் கேள்வியை மாணிக்க வாசகரும் நம்மாழ்வாரும் கேட்டுத் தமது அனுபவங்களைப் பாடினர். நம்மாழ்வார் தமது அனுபவத்தை 'அத்தைத் தின்று ஆங்கே யிருக்கும்' என்று சுருங்கச் சொன்னுர். இதுவே உபநிடதக் கலை. அப்பர் பெருமான் மெய்யுழவு செய்து சிவகதி விளைத்ததும் உபநிடதக் கலையே. உபநிடதக் கருத்துக்கள் சம்ஸ்கிருதத்திற் போலவே தமிழிலும் பரவியுள்ளன.

## 4. பிரம வித்தை:

உலகின் அருள் வாக்குகளிற் சிறந்ததொன்று உபநிடதமாகும். அதுவே வேதத்தின் அறிவுத் திருமுடியாம். உபநிடதத்தைப் பிரம்மவித்தை என்பர், அதாவது கடவுளறிவு. ''பிரம்மவித் ஆப்னோதிபரம்'' கடவுளறிஞனே பெரியோன். 'பிரம்மவித் ப்ரஹ்மைவபவதி' கடவுளறிஞன் கடவுண்மையன் ஆகிருன். அவனுக்கே அமைதியின்பம் என்பது உபநிடதத்தின் எடுப்பும் தொடுப்பும் முடிப்புமாகும். தேவார திருவாசகங்கள் நால்வர் உள்ளத்திலிருந்து எவ்வாறு பேரின்ப ஊற்ருக எழுந்தனவோ, அவ்வாறே உபநிடதங்களும் அருட் கலப்பாளரான முனிவர் தியானத்தில் எழுந்தன. அவை அன்று எப்படி முழங்கினவோ, அதே உதாத்த அனுதாத்த ஸ்வரத்துடன் இன்றும் வழங்குகிறது. சீவனிற் சிவமணங் கமழும் சித்தர் வாக்கே உபநிடதம். அது எழுதாக் கிளவியாகக் கிளர்ந்தது. ஆசிரியர் மாணவருக்குப் பாடம் பண்ணி வைத்தார். இதற்கு ஸந்தை சொல்வது என்பர்.

## 5. அனுபவ விளக்கம்:

பிற்காலத்தில் இது ஏட்டில் எழுதப் பெற்றது. இக்காலத்தில் அச்சிட்ட உபநிடதம் எளிதிற் கிடைக்கும். விஞ்ஞான வசதியுள்ள இக்காலம் மெய்ஞ்ஞானத்தில் எவ்வளவோ முன்னேற வசதியுண்டு. இசைத் தட்டில் வேதங்களையும் உபநிடதத்தையும் கேட்கலாம். பாடம் சொல்லப் புலவர் உள்ளனர். ஆனுல் நமக்குக் கருத்திருக்க வேண்டும். 'திருக்கோயில்' தரும் அறிவையாவது கற்று நின்று பயன் பெறுவோம். உபநிடதம் உலக நூல். அதற்கு அனுபவ விளக்கம் காண்பாம். உபநிடதம் வேத சிகரம். வேதம் உள்ளறிவுச் சுரங்கம், அள்ள அள்ள அரும் பொருள் அளிப்பது. உலகின் மிகப் பழைய வாக்கான வேதம், இன்னும் அதே வீறுடன் ஒலிக்கிறது. இந்தியாவில் அன்னிய மாயம் படர்ந்திருந்த காலத்தில் வேதம் மங்கி மறைந்திருந்தது. இன்று உரிமை பெற்றேம்; நாம் இந்துக்கள், வேதம் ஓதும் வேதியர் என்று பெருமை பெற்றேம். முற்காலத்தில் குறித்த சிலரே வேதம் கற்றனர். இன்று எல்லோருமே வேதத்தைக் கற்கவாய்ப்பு உள்ளது. வியாசர் காலத்தில் அச்சுப் பொறியில்லை. சிலரே கற்றனர். இன்று பலர் எளிதிற் கற்கலாம்; கற்கிறுர்களோ? மனம் வேத வழியிற் செல்லுகிறதா? செல்ல வேண்டும். அதற்குத் தூண்டுகோலே இந்நூல். இன்று சாதி மத பேதமில்லாமல் எல்லாரும் எதையும் உரிமையுடன் கற்கலாம்.

## 6. ஆதி நூல்:

வேத வியாசர் வேதத்தை ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்று நான்காக வகுத்தார். அவற்றை பீலகர், வைசம்பாயனர் ஜைமினி ஸுமந்து ஆகிய மாணவ முனிவருக்குப் பயிற்றினுர். இவர்கள் மூலம் வழிவழியாக ஆசான்—சீடன் மரபில் வேதம் எப்படியோ, எத்தனையோ இடர்களுக்கிடையே தத்தளித்து நமக்கு எட்டியுள்ளது, கிட்ட வேண்டும். காலப் போக்கில் அது பல சாகைகளாகப் பிரிந்தது.

வேதமே ஆதி நூலாம்
வேதமே நீதி நூலாம்
வேதமே அறிவுச் சோலை
வித்தகச் சித்தர் வாக்காம்
வேதமே ஆத்ம சக்தி
விழித்தெழும் சங்க நாதம்
வேத மெய்ப் பொருளுணர்ந்து
வித்தகராக வாழ்வோம்!

### 7. வேதம், ஆகமம் :

வேத விளக்கமே ஆகமம்; ஆகமம் வேத வுண்மையைப் பயிற்றித் தாய் போல அருளூட்டிச் சீவனைச் சிவமயமாக்குகிறது.

வேதங்கள் ஐயாஎன ஓங்கி
ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
ஆகமம் ஆகி நின்று
அண்ணிப்பான் தாள் வாழ்க.

என்றார் மணிவாசக முனிவர். இரண்டும் உள்ளறிவு மின்சாரம். இரண்டும் பரநாதப் பண்ணொலிகள். அசுரத் தன்மையை வென்று தெய்வத் தன்மையாக விளங்குவதே வேதப் பொருள். ருக்வேதம் 21, யஜுஸ் 109, சாமம் 1000, அதர்வணம் 50 கிளைகள் அல்லது சாகைகளாகப் பிரிந்தன. வேதாகமத்தின் வாய்க்கால்களே எல்லாச் சமயங்களும் ஆகும். வேதம் மந்திர ஸம்ஹிதை, பிராமணங்கள், ஆரண்யகம், உபநிஷத்து ஆகிய நான்கு பகுப்புள்ளது. சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிஷம், கல்பம் ஆகிய ஆறு உறுப்புக்களுடையது. கபிலரின் சாங்கியம், கணாதரின் வைசேஷிகம், கௌதமரின் நியாயம், பதஞ்சலி யோகம், ஜைமினியின் கர்ம மீமாம்சை, வியாசரின் ஞான மீமாம்சை (வேதாந்தம்) ஆகிய ஆறும் வேத விளக்கமே. வேதத்தில் பிராம்மணங்கள் மந்திரம், வேள்வி, புராணம் இதிகாசம், கல்பம், கீதை, தரும சாத்திரம் எல்லாவற்றிற்கும் ஊற்றாகும். பிராமணத்தின் ஒரு பாகம் ஆரண்யகம் (வனநூல்). அதிலே தான் உபநிடதம் அடக்கம்.

108 உபநிடதங்களில் மிகச் சிலவே அருள் வாக்கென்று போற்றத் தகும்.

ஈச கேனகட ப்ரஸ்னே
முண்ட மாண்டூக்ய தித்திரி;
ஐதரேயம்ச சாந்தோக்யம்
ப்ருஹதாரண்யகம் ததா.

இந்தப் பத்தும் தசோபநிஷத் என்று ஓதிப் பரவுகின்றன.

1. ஐதரேயம், ருக்வேதம்.
2. தைத்திரீயம், கடம் ஸ்வேதாச்வதரம், நாராயணீயம்—கிருஷ்ண யஜுர் வேதம்.
3. ஈசம், ப்ருஹதாரண்யம், ஜாபாலம் இவை சுக்லயஜுர் வேதம்.
4. கேனம் சாந்தோக்யம்—சாம வேதம்.

முண்டகம் மாண்டூக்யம். பிரஸ்னம்—மூன்றும் அதர்வ சிகையைச் சேர்ந்தவை.

இவை புத்தருக்கு முன்பே வழங்கின. பிற்காலத்தில் எழுந்த பல உபநிடதங்கள் உண்டு. உபநிடதக்கலையே பாரத சக்திக் கலை. இனி அதை முறையாக ஆராய்வோம்.

---

## மதிப்புரை

### ஸ்ரீ குஞ்சிதாங்கிரிஸ்தவம்:

இவ்வரிய வடமொழி நூல் சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமானின் துதியாக அமைந்துள்ளது. தோத்திரத்திற்குரிய இயல்புகளும், உவமை உருவகம் முதலிய அலங்காரங்களும், பற்பல சிறந்த காவ்ய நடைகளும்,விசேஷார்த்தம் த்வந்யர்த்தம் முதலிய பொருள்களும் அமைந்து இந்நூல் சிறந்ததாக விளங்குகிறது. 313 சுலோகங்கள் உடையது. ''ஸாக்தரா'' என்னும் விருத்தத்தில் அமைந்தது. சிவபிரானின் அருமை பெருமைகளையும் அருள் வரலாறுகளையும் சுருதி ஸ்மிருதி இதிஹாசம் புராணம் முதலியவைகளை ஒட்டி அழகுற விளக்குவது. பதஞ்சலி முனிவர் இயற்றிய பூஜா விதான சூத்திரங்களின் நுண் பொருள்களைத் தெளிவிப்பதுடன்சிதம்பர ரகசிய தத்துவங்களையும் அறிவிக்கின்றது. ஸ்ரீ நடராஜரின் திருவுருவ வர்ணனை, தாண்டவ வர்ணனை, தில்லைவாழ் அந்தணர் வர்ணனை ஆகியவைகள் இந்நூலுக்குச் சிறப்பளிக்கின்றன. இந்நூலை இயற்றியவர் உமாபதி சிவம் ஆவார். இந்நூலுக்கு பிரம்ம ஸ்ரீ க.மீ. ராஜகணேச தீட்சிதர், தமிழில் உரை எழுதி யுள்ளார். விலை ரூபா 2. கிடைக்குமிடம்: ஸ்ரீ நடராஜ வித்தியா சபை, சிதம்பரம்.

# "ஞான சித்தர்களும் சித்த மருந்தும்"

(திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ., பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8)

இதற்கு முன் கட்டுரையில், 'ஓம் நமசிவாய' என்பதின் தத்துவத்தையும், மந்திரங்களால் மந்திரங்களுக்கு அப்பாற்பட்ட பராபரத்தை யடைய முடியாதென்பதைப் பற்றியும் எழுதி யிருந்தோம்.

பல நண்பர்கள் சித்தர்கள் தத்துவத்தையே எழுதிக் கொண்டு போகிறீர்களே! சித்தர்கள் மருந்து என்ற தலைப்புக்கு விளக்கம் எழுத வில்லையே என்று கேட்கின்றார்கள். சித்தர்கள் உண்ட சாகா மருந்தைப் பற்றிப் பல அறிவாளி களும், பல ஞானிகளும் எழுதி வைத்துச் சென்ற நூல்களில் நான் எழுத முற்பட்டது ஒரு அணுதான். நண்பர்கள் கேட்கும் மருந் தைப் பற்றியும் ஒவ்வொரு கட்டுரையிலும் ஒரு பாகமாக எழுத முற்பட்டுள்ளேன். உடற் பிணிக்கு மருந்துகள் தேவைதான். ஆயினும் மரணமிலாப் பெருவாழ்வு தரக்கூடிய ஒரு மருந்து உண்டு என்று, பெரியோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள் அல்லவா? அப் பெரி யோர்களிடம் நமக்குப் பூரண நம்பிக்கை உண் டாயின் அவர்கள் சென்ற மார்க்கத்தையும், அவர்கள் சொன்னநீதிமொழிகளையும்பின்பற்றி நாமும் அவர்களைப் போல் ஞானப்பால் உண் டால், தடியர்கள் போல் நாம் இந்த சரீரத்தைப் பிணமாகத் தரையில் போட மாட்டோம் அல்லவா? ஆனால் நமக்கு இருக்கும் நம்பிக்கை எல்லாம் நாம் செய்யும் தொழிலி லும், மனைவி, மக்கள், சுற்றத்தார், வீடு வாசல் இவைகளின் பேரிலும்தான் உள்ளது. இந்த மருந்தை உண்டு இராமலிங்க வள்ள லார், ஆனந்தக் களிப்புப் பாடினார்.

பிறப்பை ஒழிக்கும் மருந்து—யார்க்கும்
பேசப்படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கும் மருந்து—என்னுள்
என்றும் மதுரித்தினிக்கும் மருந்து

இந்த மருந்து சுக்கு மிளகு திப்பிலி அல்ல. புடம் போட்டு எடுக்கும் செந்தூர பற்பங்கள் அல்ல. மாத்திரைகளை உருட்டி, மெழுகாக ஆக்கி உண்டு, காய கல்ப சாதனை செய்தல் என் பது பச்சை மூடத்தனம்.

சித்தர்கள் நான்கு வகைப்படுவர்: (1)பிரம்ம வித்து, (2) பிரம்ம விதுர், (3) பிரம்ம விதுர் யான், (4) பிரம்ம விதுரிஷ்டு என்பன.

(1) பிரம்ம வித்து—தன்னைப் போல் மற்ற வரை மேலேற்றப் பாடுபடுபவன். அதற்கென எவ்விதப் பலனையும் எதிர் பாரான். வாழ்வதோ சாதாரண மனிதனைப் போல. ஆனால், இலட்சி யமோ மோனத்தில் இருக்கும்.

(2) பிரம்ம விதுர்—தானாக உலக விவகாரங் களில் ஈடுபடுவதில்லை. தனக்கென எதையும் விரும்புவதில்லை. யாராவது கொடுத்தால் உண்பதுண்டு. ஆனால் கேட்பதில்லை.

(3) பிரம்ம விதுர்யான்—தானாக எதையும் கேட்பதுமில்லை. தானாக உண்பதுமில்லை. யா ராவது உணவை வாயில் ஊட்டினால்தான் உண் பது வழக்கம். அலை ஓய்ந்த கடல்போல எப் போதும் சிவயோக நிலையிலேயே இருப்பான்.

(4) பிரம்ம விதுரிஷ்டு—இந் நிலையிலிருக்கும் போது உணவை வாயில் ஊட்டினாலும் இறங்கு வதில்லை. ஆனால் குண்டலி சக்தியால் எப்போ தும் அமுதத்தை உண்ட வண்ணம் இருப்பர். இந்த அமுதம் இருக்குமிடமே பிள்ளையார் சுழி. இந்தச் சுழியை அறிந்தவர்கள் எப்படி இருப் பர் என்பதைப் பற்றி, சித்தர் ஒருவர் தாம் அருளிய ஞானத் தாழிசையில் கீழ்க் கண்டபடி எழுதியுள்ளார்.

சுழியாகிய முனைகண்டபின்
உற்றாருற வற்றாய்
சூதும்பல பொய்பேசிய
தொழிலும் பிறர்க்கிட்டாய்
வழியாகிய துறைகண்ட
பின் அனுட்டானமுற்றாய்
வழங்கும்பல நூல்கற்றிடு
நினைவும் பிறர்க்கிட்டாய்

விழியாகிய மலர்கண்டபின்
உயரர்ச்சனை யற்றாய்
மெய்ந்நீறிடு திருமந்திரம்
விட்டாய் சிவமுற்றாய்
அழியாப்பதி குடியேறினை
அச்சம்பல வற்றாய்
யாரொப்பவர் நிலையுற்றவர்
அலைவற்றிரு மனமே

என்று இன்னும் பதினொரு பாடல்களை அருளிச் செய்தார். இதைப் போன்று சித்தர்கள் அருளிச் செய்துள்ள அநுபவ ஞானப் பெரு நூல்களுக்குப் புலவர்கள் பலர் சுழியை விட்டுத் தடம்புரண்டு பலப்பல விதமான பதவுரைகளையும், பொழிப்புரைகளையும் ஆக்கலாயினர். அந் நூல்களை அருளிச் செய்த மகான்கள் இவ்வித விரிவுரைகளை நோக்கினார்களானால் நிச்சயம் கண்ணீர் வடிப்பர். தாங்கள் கற்ற இலக்கிய இலக்கண நூல்களை ஆதாரமாகக் கொண்டு அவ்விதப் பெரு நூல்களுக்கு விரிவுரைகள்எழுத முற்படுவது சரியன்று. எழுதுவோனுக்கே புரியாத ஒரு நூலுக்கு அனர்த்தமான பொருள் விளக்கங்கள் தந்து பாமர மக்களையும் குழப்ப முண்டாக்குவது முறையா? அறியாத ஒன்றை அறிந்தவர்களுக்கு விட்டு விடுவது ஒரு பெரும் சேவையாகும். தமிழறியேன். இலக்கிய இலக்கணங்களை படித்தறியேன். ஆனால் ஒன்று மாத்திரம் தமிழன்பர்களை வேண்டிக் கொள்கின்றேன். விளக்கம் புரியாத நூல்களை அப்புறத்தே வைத்து விடுங்கள். ஆண்டவன் அருளும், சித்தர்கள் ஆசியும் தங்களுக்குக் கிட்டும். அருள் ஞான அனுபவப் பெரு நூல்களுக்கு விரிவுரை எழுதச் சுழியைத் தரிசனம் செய்தவனால்தான் முடியும்.

## சித்தர்கள் உடற்பிணி மருந்து :

சித்த மருந்து என்பது சித்தியடைந்தமருந்து, பூரணமடைந்து விட்ட மருந்து. இனி புதிதாக நோய்களையோ, மருந்துகளையோ, கண்டுபிடிக்க அவசியமில்லை. மனிதன் ஒரு நாளைக்கு எத்தனை சுவாசங்கள் விடுகிறான். மனித சரீரத்தில் எத்தனை எலும்புகள், எத்தனை நரம்புகள் இருக்கின்றன என்றெல்லாம் அளவெடுத்துச் சித்தர்கள் கூறியுள்ளனர். பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட இவ்வுடலில் இந்தப் பஞ்ச பூதங்களின் அளவு, அவைகளின் உற்பத்தி நிலை, ஒடுங்கும் நிலை முதலியன விரிவாகவும் தெள்ளத் தெளிவாகவும் எழுதியுள்ளனர். அந்த நிலையை மற்றொரு மருத்துவ முறை அடைய எக்காலத்திலும் முடியாது. காரணம், சுழி முனை என்ற வாசியை அறிந்தவர்களால்தான் சித்தர்களின் மருந்துபோல் மற்றொரு மருந்தைக் கண்டு பிடிக்க முடியும். வியாதிகள் 4448 என்று சித்தர்கள் முடிவு செய்துவிட்டனர். இத்தனை வியாதிகளும், திரிநாடி என்னும் வாத, பித்த கபக் கோளாறு உண்டாகும் காலங்களிலே உண்டாகின்றன. பஞ்ச பூத அளவுகளின் மாறுதல்களையும் இந்தத் திரிநாடிகள் அறிவித்து விடுகின்றன. நோய்களை அறியும் வல்லமை சித்த மருத்துவத்திலில்லை எனப் பலர் அபிப்பிராயத்தில் இருந்து வருகிறது. இது முற்றிலும் தவறு. சித்த மருத்துவத்தில் நோய்களைப் பரிசோதிக்கும் முறைகளை எண்வகைத் தேர்வு என்று சொல்வர். அவையாவன: (1) நாடி, (2) பரிசம், (3) நா, (4) நிறம், (5) மொழி, (6) விழி, (7) மலம், (8) மூத்திரம். மது மேகம் (Diabetes) எனும் வியாதியை மேல் நாட்டு மருத்துவர்களே கண்டு பிடித்ததாக ஒரு தவறான அபிப்பிராயம் இருந்து வருகிறது.

மது மேகத்திற்கு நீர்ப் பரீட்சை செய்யும் முறையையும், அப் பிணியின் குறிகளையும் (Symptoms), அதற்குரிய மருந்துகளையும் அகஸ்தியர் சொல்வதைப் பாருங்கள்:

நீரே அழிவு நாழிகைதொறும்
நிரம்பக் கலயம் அதனில்இட்டுக்
காரே இணங்கும் குழலாளே!
காய்ச்சிப் பார்த்தால் பாணியதாம்;
நேராய் அதுவும் இனித்திருக்கும்
நீரும் தரையில் விட்டக்கால்
சீராய் எறும்பும் ஈயும்மொய்க்கும்
செய்யும் குணங்கள் செப்பக்கேள்!

செப்பமாய்க் கலயம் தன்னில்
சிறப்புடன் கலத்தை வைத்தால்
உப்புடன் தயிரே போல
உறைந்துதான் கீழே நிற்கும்.
வெப்புடன் சரீரம் வற்றி
மிகுந்திடும் தாகம் உண்டாம்.
அப்பொழுது அசனம் செல்லாது
அயர்ந்திடும் காலும் கையும்.

கைகால் அயர்ந்து நெஞ்சுலர்ந்து
கடிய எரிவும் உண்டாகி
மெய்தான் தியங்கி நடைகொள்ளா!
மீளும் இதற்குப் பரிகாரம்

செய்தார் எண்ணெய் குடிநீர்கள்
திருந்தும் உப்பும் பலமருந்தும்!
ஐயா உண்மை உண்மை! சொன்னேம்
அனலும் நீரும் அடைபடவே.

இப்பாடல்களில், மதுமேகம் என்னும் நோய் பற்றியும், அதற்குரிய மருந்துகள் பற்றியும் சொல்லப் பெற்றிருத்தல் காணலாம்.


இவ்வியாதியின் சாத்திய அசாத்திய குணங் களைப் பற்றியும் சித்தர்கள் விளக்கமாக எழுதியுள்ளனர்.

விடுஞ்சலம் உப்பு றைந்து
மிகுந்திருந் தாலும் பின்னே
கடுஞ்சலம் மிதத்தி ருக்கில்
கடுகென மீளும் கண்டாய்!
கொடுஞ்சலம் இனிப்ப தாகிக்
கொள்கையாய்ச் சடலம் தன்னில்
விடுஞ்சலம் தயிர தாகின்
மீளாது என்று சொல்லே!

ஆகவே மதுமேகம் (Diabetes) என்னும் வியாதி, மேல்நாட்டு மருத்துவர்களால்தான் கண்டு பிடிக்கப்பட்ட தென்பது தவறு. அத ஞல் மேல் நாட்டார் மருந்தையே நாள் ஒன் றுக்குப் பலமுறைகள் மாத்திரைகளாக உண்டும் ஊசிகளாகக் குத்திக்கொண்டும் துடி துடித்து மாளுகின்றனர். அப்படியாயின் சித்த மருத்து வத்தில் ஏன் நீங்கள் அவ்வித வியாதிகளுக்கு மருந்துகள் தரக் கூடாது எனக் கேட்பதில் தவறு இல்லை. சித்த மருத்துவம் மேல் நாட்டா ரால் பொசுக்கப்பட்டு விட்டது. வேர் மாத் திரம் இருந்தது. அது எங்கே தளிர்ந்து விடு மோவென மேனுட்டு மருத்துவம் படித்த நம் நாட்டு மருத்துவர்கள், அந்த வேரையும் பறித்து எறிந்துவிட முற்பட்டுள்ளாரென்று வெகு துக்கத்துடன் தெரிவித்துக் கொள்கி றேன். மருந்து கையிலிருப்பினும் அம்மருந்தைப் பல மக்களுக்குக் கொடுத்து அவைகளின் குணங் களை அறியவும் வாய்ப்பில்லாமல் போய்விட் டது. சித்த மருத்துவச் சாலைகள் இல்லை. அரசாங் கம் நடத்தி வந்த பல சித்த மருத்துவ மனை களையும் மூடிக் கொண்டே வருகின்றனர்.

ஆயினும் சித்தர்கள் பரம்பரையில் தோன் றியவரும், அறநிலையப் பாதுகாப்பு ஆணையா ளரும் ஆகியதிரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களின் முற்போக்கு எண்ணங் களினுல், ஆங்காங்கு தேவஸ்தானங்களின் சார் பாகப் பல சித்த வைத்திய சாலைகள் நிறுவப் பட்டுச் சித்த மருத்துவத்திற்குப் புத்துயிர ளிக்கப்பட்டு வருகிறதென்பது, மக்கள் அறிந்த விஷயம். சித்தர்கள் ஆசி நிச்சயம் அப் பெரியாருக்குக் கிட்டும் என்பதையும் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த வைத்திய சாலைகளின் சேவையை மக்கள் பாராட்டி வருகின்றனர். இன்னும் பலர் இதைப் போன்ற வைத்தியசாலைகள் திறக்கப் பட வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றனர். ஆண்டவன் அருளால் சித்த மருத்துவத்தின் சிறப்பைக் கூடிய சீக்கிரத்தில் மக்கள் அறிவர். அதனுல் பெரும் பயனடைவர்.

—தொடரும்.



பெரியபாளையம் ஸ்ரீ ஐம்முக்தீசுவரர் கோயிலின் உட்புறத் தோற்றம்

# பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்

இந்தியாவிலுள்ள கோயில்களிலெல்லாம் மிகவும் பெரியதும், மிகவும் பழைமை வாய்ந்தது மாகத் திகழ்வது, ஸ்ரீ ரங்கத்தில் உள்ள ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோயில் என்பது, யாவரும் நன்கறிந்தது. அஃது இற்றைக்கு ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னரே நிறுவப் பெற்ற தாகும். நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பெருவாரியான பக்தர்கள் இக்கோயிலை வழி படுவதற்காக, ஆண்டு முழுவதும் இடைவிடாமல் வந்து கொண்டிருக்கின்றனர். ஒரு பெருஞ் சமய நிலையமாக மட்டுமே யன்றிக் கட்டிடக் கலை, சிற்பக் கலை ஆகியவற்றில் ஆர்வமுள்ள பலருக்கும், இக்கோயில் ஒரு பெரும் கவர்ச்சிப் பொருளாகவும்கூட விளங்கி வருகின்றது. ஆழ்வார்கள் பன்னிருவரில் பதினொருவர், இதனை மங்களாசாசனம் செய்துள்ளனர். இந்தியா விலுள்ள மிகவும் சிறந்த வைஷ்ணவத் தலங்கள் நூற்றெட்டுள், இது மிகவும் தலைசிறந்ததாகவும், மிக்க புனிதமுடையதாகவும் போற்றப் பட்டு வருகின்றது. இந்தப் புனிதப் பெருங் கோயிலி லேயே ஆண்டாள், திருப்பாணாழ்வார், பீபி நாச்சியார் முதலிய எத்தனையோ பல அடியார்கள், ஸ்ரீரங்கநாதரின் அருள் பெற்று, அவர்தம் திருவடியில் சேர்ந்துள்ளனர். ஸ்ரீரங்கநாதர் ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் குலதனமாகவும், இட்சுவாகு வம்சத்துச் சக்கரவர்த்திகளின் குடும்பத் தெய்வமாகவும் விளங்கியவராவர். இதனால் ஸ்ரீரங்கம் பெரிய கோயிலின் சிறப்பும் பழமையும் எத்தகையவை என்பது தெள்ளிதிற் புலனாகும்.

இக்கோயில், கருங்கல்லால் கட்டப்பட்ட ஏழு மதிற் சுவர்களை உடையது. இம்மதிற் சுவர்கள் இப்பொழுது மிகவும் சிதைந்து பழுதுபட்ட நிலையில் உள்ளன. மதிற் சுவர்களிற் பெரும்பாலான இடங்களில் செடி கொடிகள் படர்ந்து, அவற்றின் வேர்களும் கிளைகளும் பரவி, மிகவும் அச்சம் விளைவிக்கும் வகையில், மதிற் சுவர்களின் அமைப்பைச் சிதைத்துப் பாழ் படுத்தியுள்ளன.

இக்கோயிலில் 21 அழகிய சிறந்த விமானங்கள் அமைந்துள்ளன. அவைகள் வியக்கத்தக்க சிற்ப வடிவங்களாலும், பௌராணிகத் திருவுருவங்களாலும் அழகுபடுத்தப் பெற்றுள்ளன. கோபுரங்களை அழகு செய்து கொண்டு, காண்போர் உள்ளங்களை யெல்லாம் கொள்ளை கொள்ள வல்லவனவாகத் திகழும் சிறந்த சிற்பங்கள் எல்லாம்கூட, அழிந்து பாழ்படும் நிலையை அடைந்து வருகின்றன. கடந்த பல நூற்றாண்டுகளாக மழையில் நனைந்தும், வெய்யிலில் உலர்ந்தும் வருவதன் விளைவாக, விமானங்களின் சுதைச் சுண்ணம் சிதறி விழுந்து, சிற்பத் திருவுருவங்கள் சிதைந்து சீரழிந்து கொண்டு வருகின்றன. இங்குள்ள விலைமதிக்க முடியாத அழகிய ஓவியங்கள் பல, மங்கியும் மாசு படிந்தும் பொலிவிழந்து காணப்படுகின்றன.

இக்கோயில், ஏராளமான பல சிறுசிறு துணைக் கோயில்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன்கண் உள்ள பற்பல மண்டபங்களும், மாபெரும் தூண்களு மெல்லாம், சிற்பக்கலைத் துறை யிலும், தொல் பொருளியற் கலைத் துறையிலும், மாட்சிமை மிக்கு வியப்பிற்குரியனவாக, அழகிய கலைத்திறன் வாய்ந்து புகழ்மிக்கு விளங்குவனவாகும். இதன்கண் உள்ள சிறுசிறு துணைக் கோயில் கள், கவர்ச்சி மிக்க பல சிற்ப வடிவங்களாலும், நுண்ணிய வேலைப்பாட்டுடன் செதுக்கப் பெற்றுள்ள சுவர்களாலும் நிரம்பி, உண்மையிலேயே ஒரு தேன்கூடு போல நெருக்கமுற்றுக் காணப்படுகின்றன.

நினைவுக்கு எட்டாத காலம் முதல், தொன்று தொட்டே, நமது தேசத்தின் புகழ் மிகுந்த கலாசார வரலாற்றையும், கட்டிடக் கலையின் மாண்பையும் அனைவரும் அறியுமாறு, இக்கோயில் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. அளவிறந்த தொன்மையினாலும், வரலாற்று முதன்மையி னாலும், பௌராணிகச் சிறப்பினாலும் மிகுந்த இக்கோயிலானது, எந்த வகையிற் பார்த்தாலும், கட்டிடக் கலைத்துறை அழகுகளில், உலகில் வேறு எந்தப் பகுதியிலேனும் உள்ள எதற்கும் குறையாமல், இணையானதாக விளங்குகின்றது.

இத்தகைய புகழ்மிக்க பெருஞ் சிறப்புடைய இக்கோயிலானது, நன்கினிது பாதுகாத்து நடத்துவதற்குப் போதுமான நிதி வசதி இல்லாமல் இருக்கின்றது. கடந்த பல எத்தனையோ

பத்தாண்டுகளாக இக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய வேண்டுவதின் இன்றியமையாமை, அவ்வப்பொழுது உணரப் பெற்று வந்துள்ளது. ஆயினும் போதிய நிதி வசதி யின்மையினால், திருப்பணி செய்யும் திட்டங்கள் எதுவும் நிறைவேற்றப்பட இயலாமலே போயிற்று.

இப்பழம் பெருங் கோயிலை, அதன் முன்னைய சிறப்புடன் மீண்டும் விளங்கச் செய்யவும், அதன் தொன்மையான பெருமாண்பைப் போற்றிப் பாதுகாக்கவும், திருப்பணி வேலை செய்வதற்காக, கிடைக்கக் கூடிய எல்லா வகையான வாய்ப்பு வளங்களையும் முயன்று திரட்டித் தொகுத்தற் பொருட்டு, அனைத்திந்தியத் திருப்பணிக் குழு ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது. அளவான, எளிய மதிப்பீட்டின்படி, இத்திருப்பணிக்குக் குறைந்த அளவில் சுமார் ரூபா ஐம்பது லட்சம் (50,00,000) தேவைப் படுகின்றது.

ஐக்கிய நாட்டுக் கலாசாரக் கழகமானது, இப்புகழ் பெற்ற கோயிலுக்குத் திருப்பணி செய்வதின் இன்றியமையாமையை உணர்ந்து கொண்டுள்ளமை நமக்கு ஊக்கத்தைத் தருகின்றது. அக்கழகமானது அதன் பொருட்டுத் தனது அலுவலர்களுள் ஒருவரும், புகழ்மிக்க தொல் பொருள் இயல் அறிஞரும் ஆகிய திரு. பாட்ரிக் ஆர்தர் ஃபால்க்நர் என்பவரை அனுப்பி வைத்தது. அவர் 1966-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இக்கோயிலைப் பார்வையிட்டார். தொல் பொருள் இயற் பெருஞ் சிறப்பினைப் பாதுகாக்கும் நோக்கத்தில் இக்கோயிலைப் பார்வையிட்ட அவ்வறிஞர், தம்முடைய அறிக்கையை ஐக்கிய நாட்டுக் கலாசாரக் கழகத்திற்கு விரைவில் அனுப்பி வைப்பார். ஐக்கிய நாட்டுக் கலாசாரக் கழகம், தனது நிபுணர்களின் ஆலோசனையைக் கிடைக்கச் செய்வதுடன், இக்கோயில் திருப்பணிக்காகத் தேவைப்படும் பொருளுதவியையும் ஓரளவு அளிக்கக்கூடும் என்று நம்புகின்றோம்.

இந்திய அரசாங்கமானது, 25-10-66 தேதியிட்ட தன்னுடைய சுற்றறிக்கை எண் 106 [ எப். எண். 16/39/66-ஐ. டி. (எ 1) ] இக்கோயில் திருப்பணி நிதிக்காக வழங்கப் பெறும் நன்கொடைகளுக்கு 1961-ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டம் 88 (6)-ஆம் பிரிவின் கீழ்ச் செலுத்தப்பட வேண்டிய வருமான வரியினின்று விலக்கு அளித்திருக்கின்றது.

இந்தப் பழம் பெரும் புனிதம் மிகுந்த கோயிலுக்குத் திருப்பணி செய்வதும், நமது எதிர்காலச் சந்ததியினர்கள் கண்டு வியந்து உணர்ச்சியும் உள்ளக் கிளர்ச்சியும் கொண்டு பெருமிதம் அடையும் வகையில், பல தலைமுறைகள் நின்று நிலவும் வண்ணம் இக்கோயிலைப் பாதுகாக்க வேண்டுவதும், இந்தியா முழுவதிலும், மற்றும் வெளி நாடுகளிலும் உள்ள பக்தர்கள் அனைவருக்கும் உரிய தலையாய பெருங் கடமையும், சாலச் சிறந்த நற்பேறும் ஆகும்.

எனவே, உண்மையிலேயே 'பூலோக வைகுந்தம்' என எண்ணில்லாத ஆண் பெண் மக்களாகிய பக்தர்களால், போற்றி மதித்து வழிபடப் பெற்று வரும் இந்தப் பழம் பெரும் சிறந்த கோயிலின் திருப்பணி, ஆகிய மேலான புனித கைங்கரியத்திற்காக, மிகவும் தாராளமாக மனமுவந்து பொருள் வழங்கி உதவி புரியும்படி, பக்தர்களும் பண்பாளர்களும் ஆகிய அனைவரையும், யான் பெரிதும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கென்சிங்டன்,
கீழ்ப்பாக்கம்,
சென்னை-10.

ஏ. ராமசாமி முதலியார்,
தலைவர்,
திருப்பணிக் குழு.

குறிப்பு:—அன்பர்கள் பணமாகவோ (Cash), பணமுறியாகவோ (Cheque), உண்டியலாகவோ (Draft), அனுப்புவன அனைத்தையும்,

''நிர்வாக அதிகாரி,
செயலாளர், பொருளாளர், திருப்பணிக் குழு,
ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானம்,
ஸ்ரீரங்கம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம், சென்னை ராஜ்யம்''.

என்னும் முகவரிக்கு அனுப்பி யுதவுமாறு வேண்டிக் கொள்ளப் படுகின்றனர்.

—[தமிழாக்கம், ஆசிரியர்].

# கடந்து நின்றான்

('பாலகவி' வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் [தத்புருஷ தேசிகர்] தேவகோட்டை)

'கடவுள்' என்ற சொல், 'எல்லாவற்றையும் கடந்திருப்பது' என்னும் பொருளையுடையது. உலகத்திலுள்ள எல்லாச் சமயவாதிகளும் தத்தம் தெய்வங்களைக் கடவுள் என்ற சொல்லாலேயே குறிப்பிட்டு வருகின்றனர். அச்சொல்லுக்குரிய இலக்கணம் அவர்கள் குறிப்பிடும் தெய்வங்களினிடத்து அமைந்துள்ளனவா என்பது பற்றி ஆராய்ந்து முடிவு காண்பது மிகமிக இன்றியமையாதது. இவ்வாராய்ச்சி, காய்தல் உவத்தலின்றி நிகழ்த்தப் பெறுதல் வேண்டும். சொல்லுக்குரிய பொருள், அதன் இலக்கணத்திற் குறைவு பட்டிருக்கும்போது, அப்பொருளை அச் சொல்லாற் குறிப்பது உபசாரமாகுமே யன்றி உண்மையாகாது.

ஒரு பொருளுடன் ஒரு புடை யொப்பாயிருக்கும் பிறிதொரு பொருளையும் ஒப்பக் கொண்டு, அதற்கு அந்தப் பொருளின் பெயரையே இட்டழைப்பது உலகியலிற் காணப் பெறுவதொன்று. உண்மையான சிவப்பு, வயிரம் முதலியவற்றுடன் நிறவொற்றுமை ஒன்றேயுள்ள போலியான சிவப்பு, வயிரங்களும் அவ்வப் பெயர்கள் கொண்டே குறிப்பிடப் பெறுவதும், பயன்படுத்தப் பெறுவதும் நாமறிந்தனவே. இது போலவே கடவுள்என்ற சொல்லும், உண்மை, போலி ஆகிய இரண்டு வகைகளிலும் சமயவாதிகளால் குறிப்பிடப் பெற்று வருகின்றது. உண்மைப் பொருளின் பெயரை உபசாரத்திற் பெறுகின்ற போலிப் பொருள், அவ்வுண்மைப் பொருளின் பண்புகளில் ஒன்றையேனும் கொண்டிருத்தல் வேண்டுமல்லவா? அவ் விதியின்படியே எல்லாவற்றையும் கடந்திருக்கும் உண்மைக் கடவுளின் பெயரை ஒவ்வோரெல்லை வரை கடந்திருக்கின்ற போலிக் கடவுளருக்கும் உபசாரமாகச் சூட்டி மற்றைச் சமயவாதிகள் மகிழ்ச்சியடைகின்றனர்.

எல்லைகள் சிற்றெல்லை, பேரெல்லை, முடிந்த எல்லை எனப் பல நிலைகளில் உள்ளன. இவற்றில் முடிந்த எல்லையைக் கடந்து நிற்கின்ற கடவுளே, அப் பெயருக்கு உரிமையை உடையவர். இவ்வெல்லைகளைத் தத்துவ அடிப்படையில் வைத்து உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். சில சமயவாதிகள், தத்துவங்களின் எண்ணிக்கையைப் பொருந்தாத வகையில் விரித்துப் பெருக்கிக் காட்டித் தம்மை மேனிலையாளரெனப் பறைசாற்றி நிற்பர். பொருந்திய வகையில் எண்ணும் பொழுது பெருக்கமுடையதாயும், முடிந்த எல்லையை எட்டுவதாயுமிருப்பது, சித்தாந்த சைவர்கள் கூறும் முப்பத்தாறுவதாகிய நாத தத்துவமே யாகும். இந்த நாத தத்துவ எல்லைக்குட் பட்டிருக்கின்ற பல வேறு தத்துவ எல்லைகளின் அளவிலேயே பிற சமயங்கள் கூறும் கடவுளரின் நிலைக் களங்கள் அமைந்திருக்கின்றன.

பரம்பொருளாகிய சிவபெருமான் ஒருவனே இவ்வெல்லாத் தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட அகண்டாகார சச்சிதானந்தப் பேரொளிப் பிழம்பாக விளங்குபவன். 'கற்பனை கடந்த சோதி, அலகில் சோதி, ஆதி நடு அந்தமிலா அளவில் சோதி,' எனச் சிவபரம்பொருளை நமது தோத்திர சாத்திரங்கள் துதித்தன. திருக்காளத்தி மலையில் சிவலிங்கத் திருமேனி தாங்கி எழுந்தருளியிருக்கும் செம்பொற் சோதியைக் காணச் சென்ற திண்ணனார், 'பேணு தத்துவங்களென்னும் பெருகு சோபானமேறி' னாரென்று, சேக்கிழார் சுவாமிகள் குறிப்பது கொண்டும், அவர் ஏறிச் சென்ற திருப்படிகள் முப்பத்தாறு என்ற எண்ணிக்கையுடன் இன்றுவரை காட்சியளிப்பது கண்டும், தத்துவாதீதராகிய கடவுள் சிவபெருமானே என்பதை ஒருவாறு உணரலாம். நக்கீர தேவ நாயனார் தமது திருமுருகாற்றுப் படையில் முருகப்பெருமானை, 'ஆல்கெழுகடவுட் புதல்வ' என்று அழைத் தருளுகின்றார்.

திருமூல தேவ நாயனார் திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து, பதின்மூன்றாவது திருப்பாடலில் யாராலும் அளந்து காண முடியாததும், முடிந்த எல்லைக்கும் அப்பாற்பட்டிருப்பதுமாகிய நிலைக்களத்தைக் கொண்டு, கடவுள் என்னும் பெயருக்கு உண்மையில் உரிமை பூண்டவனாய்ச் சிவபெருமானொருவனே விளங்குகின்றானென்பதைத் தெளிவு படுத்துகின்றார். அத்

திருப்பாட்டு,

'மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னம் நினைக்கிலர் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேலளந் தாரில்லை
கண்ணளந் தெங்கும் கடந்துநின் ருனே'

என்பதாகும்.

அளவு கருவிகள் பல திறப்பட்டவை. ஒரு பொருளை அளக்கும் கருவியைக் கொண்டே எல்லாப் பொருள்களையும் அளந்துவிட முடியாது. நீட்டலளவை, நிறுத்தலளவை, முகத்தலளவை எனப்பல அளவைகளை வைத்தே உலகத்துச் சடப் பொருள்களை அளந்து கணக்கிடுருேம். சடப் பொருள்களிலேயேஒன்றுக்குப் பொருந்தும் கருவி, பிறிதொன்றுக்குப் பொருந்தாதாயின் சித்துப் பொருள்களில்எதையேனும் கொண்டு அளந்து விட முடியுமா? அல்லது இவற்றை அளக்கும் ஆன்ம அறிவு கொண்டாவது அளந்து காண முடியுமா? அளவைகளுக்கும் அடங்காத சடப் பொருள்கள் பல இங்கேயிருப்பதை நாமறிவோம்.

தூலமாகவும், சூக்குமமாயும் இருக்கிற எல்லாச் சடப் பொருள்களையும்விட அதி சூக்குமமாயிருப்பது சித்தாகிய உயிர். அதிலும் அதி சூக்குமமாயிருப்பது சிவம். சடப் பொருள்களில் பெருந் தூலமாயுள்ள மண்ணை அளந்து கண்டவர் திருமால். அவர் அந்த அறிவையும் ஆற்றலையும் நினைந்து ஆண்டவனை அளக்க முற்பட்டு அவனது அடிமலர்களைத் தேடிச் சென்ருர். முயற்சியில் தோல்வியுற்றதும் வருந்தியதுமன்றிப் பயன் ஒன்றும் அவருக்குக் கிட்டவில்லை.

திருமால் கடந்து நிற்கும் எல்லைக்குட் பட்டவர்களே நான்முகனும், மற்றைத் தேவர்களும். மண்ணையும் வானையும் அளந்தவரும், மூலப் பிரகிருதியைத் தனது வடிவமாகக் கொண்டவருமென்று சொல்லப்படுகின்ற திருமால், அம் மூலப் பிரகிருதிக்கு நெடுந் தொலைவிலுள்ள பரப் பிரகிருதியையும் கடந்து நிற்கின்ற பரசிவத்தை முற்றுங் காணுதற்கு மேற்கொண்ட முயற்சியில் எங்ஙனம் வெற்றி பெற முடியும்? 'பாதாள மேழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர் போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே' என்பது திருவெம்பாவை.

அதிகார சத்தி புண்ணியத்தால் ஒவ்வோரெல்லைவரை படைப்பாதியவற்றை மேற்கொண்டு பதவிகளில் இருக்கும் திருமால்முதலியோர் தத்தம் எண்ணங்களை மிகுதிப் படுத்திக் கொள்ளுகிருர்களே யன்றித் தலைவனுகிய பரம சிவனை நினைக்கின்றுர்களில்லை. இது பதவி ஆசையாலும், பதவியைப் பெற்றிருப்பதாலும் வந்த கேடாகும். தனது மேம்பாட்டிற்குக் காரணமான தலைவரை மறந்து உண்டாவது. ஆணவமலம் நீங்கும் வரை அறியாமையால் உண்டாகும் கேடுகளும் இருந்தே தீரும். சிவபுண்ணியப் பெரும் பேற்றினுல் பெருந் தகுதியுடைய பதவிகளைப் பெற்று வாழும் தேவர்களுக்கே உண்மையுணரும் வாய்ப்பு அமையவில்லை யென்றுல், மற்றை உயிர்த் தொகுதிகள் உண்மை யுணராதிருப்பது பற்றி வியப்படைய வேண்டுவதில்லை யல்லவா? இதனையே ஆசிரியர் இத் திருப்பாடலின் முற்பகுதியில்,

'மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னம் நினைக்கிலர் ஈசனை'

என அருளிச் செய்கின்றுர்.

மேலும் கீழும் இருக்கிற எல்லாப் பொருள்களையும் அளந்து கண்டு அவற்றுடன் கலந்து நின்று அதற்கப்பாலும் சென்றுள்ள சிவபெருமானை அவரிருக்கும் எல்லைவரையிற் போய் அளந்து கண்டவர் யாருமில்லை. கண்ணொளியுடன் கலந்து பொருள்களை அறிவதற்குத் துணை செய்வது கதிரவனது ஒளி. அதுபோல, உயிரறிவுடன் கலந்து பொருள்களை அறிவதற்குத் துணை செய்வது சிவபெருமானது திருவருள். இங்ஙனம் இன்றியமையாததாயிருந்து எந்தக் காலத்திலும் துணை புரிகின்ற திருவருளையும் அதனைச் செய்கின்ற சிவபெருமானையும் தருக்க நூல் அளவைகளைக் கொண்டு அளந்தறிய முடியாது. இதனையே 'அவனருளே கண்ணுகக் காணினல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுதே' என்று அப்பரடிகள் அறிவுறுத்துகின்ருர்கள். இது 'விண்ணளந்தான் தன்னை மேலளந் தாரில்லை' என்று ஆசிரியரால் உணர்த்தப் பெற்றது.

சிவபெருமானது சொரூப நிலை எல்லாவற்றையும் கடந்து நிற்பதாயினும், அவரதுதடத்த நிலை எல்லாவற்றிலும் கலந்திருப்பதாதலின், காணுங் கண்ணுக்குக் காட்டும் உள்ளம்போல் மறைமுகமாய் எவ்விடத்திலும் காணப்படுவதேயாகும். இது 'கண்ணளந் தெங்கும் கடந்து நின் ருனே' என்ற இறுதி வரியால் அறியப் பெறுகின்றது.

# நமது வேதங்கள்

(வேதார்த்த ரத்னகரம். அக்நிஹோத்திரம் ஸ்ரீ ராமாநுஜ தாதாசார்யர், கும்பகோணம்)

வேதம் என்ற பெயரில் உள்ள நூல், இன்றும் பாரத தேசத்தில் பழக்கத்தில் இருந்து வரும் புராதன நூல். இது ஒரு மத நூல். கடவுள், ஆன்மா, கடவுளின் அருளைப் பெறும் வழி, இறையருளைப் பெற்று இம்மையில் வாழ் நாளை நடத்தும் வகை, மறுமையில் அடுத்த பிறப்பிலோ, தேகாந்தரத்திலோ நன்மையைப் பெறுவது, மோக்ஷத்தை அடைவது முதலிய மத சம்பந்தமான கருத்துக்களை இது வெளியிடுகிறது. இதற்கு 'வேதம்' என்ற பெயர், அரிய கருத்துக்களை வெளியிடுவதால் ஏற்பட்டது. உலக அறிவிற்கு எட்டாத உண்மைகளை வெளியிடுவதால், இதற்கு வேதம் என்ற பெயர் ஏற்பட்டதென்று குமரில பட்டர் என்ற மீமாம்ஸகர் கூறுகிறார். இதற்குச் 'சந்தஸ்' என்ற பெயரும் உண்டு. தைவத் தன்மையைத் தன்னுள் அடக்கி மறைத்துக் கொண்டிருப்பதாலும் 'சந்தஸ்' என்ற பெயர் ஏற்பட்டது.

காவிய நடையில் கருத்துக்களை மறைமுகமாகக் கூறுவதாலும் இந்தப் பெயர் வந்தது. குரு சிஷ்ய பரம்பரையில் கேள்வி மூலமாகவே வந்து கொண்டிருப்பதால் ச்ருதி என்ற பெயரும் உண்டு. தமிழ் மொழியில் எழுதாக் கிளவி, மறை, வேதம், கேள்வி என்றபெயர்கள் காணப்படுகின்றன.

இதில் காணப்படும் கருத்துக்களுக்குத் தனிச் சிறப்புண்டு. கடவுள் சம்பந்தமான கருத்து மிகவும் பரந்த அடிப்படையில் அமைந்திருப்பதால், உலகத்தில் காணப்படும் எல்லா மதங்களின் கருத்துக்களையும் இங்கே காணலாம். இது கடவுளைப் பற்றிச் சொல்வதோடு மட்டும் நிற்கவில்லை. பகுத்தறிவு மூலமும் யுக்தி மூலமும் அறிவாளிகள் கண்டு பிடிக்க வேண்டிய முடிவான உண்மைப் பொருளை அறியும்வழிக்கு உதவுவதால், தத்துவக் கருத்துக்களும் இங்குக் காணக் கிடக்கின்றன. தத்துவக் கருத்துக்கள் ஆழ்ந்து, அகன்று அமைந்திருப்பதால் உலகத் தத்துவஞானிகளின் எல்லாவிதக் கருத்துக்களையும் இங்கே காணலாம். மதத் தத்துவங்களையும் கருத்துக்களையும் ஒருங்கே வெளியிடும் பெருமை வேதத்திற்கு உண்டு. கருத்துக்களை எளிய நடையில் வெளியிடுவதோடு, படிப்பவரின் உள்ளத்தைக் கவரும் வகையில் அமைந்திருப்பதால், இது உயர்ந்த காவியமாகவும் திகழ்கிறது. இம்மை மறுமை இரு வாழ்வுக்கும் உதவுவதுபோல், இல்லறம் துறவறம் என்னும் இரண்டு வாழ்வுக்கான வழியையும் இங்குக் காணலாம். கடவுளை இயற்கைக்கு அப்பாலான நிலையிலும், இயற்கைக்குள்ளில் உள்ள நிலையிலும், சொல்வதால் இயற்கைக் கடவுளைப் பற்றின கருத்துக்களைக் காணுவதுபோல், இயற்கையைப் பற்றின அழகானவருணனைகளையும் காணுகிறோம். அற நெறியை வற்புறுத்துங்காலத்தில் வாழ்க்கையின் உண்மைகளை விளக்குவதால், பண்பாடு நிறைந்த வாழ்வுக்குப் பூர்ணமாக உதவுகிறது. மேலெழுந்த வாரியாகத் தோன்றும் கருத்துக்களோடு, ஆழ்ந்து சிந்தித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய கருத்துக்களை வெளியிடுவதால், அறிவாளிகளுக்கு விருந்தாக அமைந்த நூல் என்று சொல்லுவது மிகையாகாது.

பிற்கால மதாசிரியர்கள் கடவுளை அடையவோ அவனுடைய அருளைப் பெறவோ கர்மா, பக்தி, ஞானம் என்ற மூன்று வழிகளை வகுத்துள்ளர்கள். கர்மா என்பது உலக வாழ்க்கையில் ஈடுபட்டு வாழ்க்கையை நடத்தி வரும் காலத்திலேயே தைவிக உணர்ச்சியைப் பெறுவதற்கும், திருவருளைப் பெறவும் உதவுவது. இயற்கை உலகத்திலேயே கடவுளை உணர்த்த இந்த வழி ஏற்பட்டது. பக்தி மார்க்கம், அன்பு நெறியைச் சேர்ந்தது. இங்கு உணர்ச்சி முன் நிற்கிறது. ஞான மார்க்கத்தில் இயற்கையை அடிப்படையாகவாழ்க்கைக்கும், அன்பு உணர்ச்சிக்கும் அப்பால் நின்று அறிவு நிலையில் நிற்பது. எங்கும், எப்பொழுதும் கடவுளை அறிய உதவுவது, இம் மூன்று கொள்கைகளும் தனித்தனி நோக்கத்தோடு ஏற்றபடி நடந்தாலும் மூன்று வழிகளும் மனிதனுக்கு இன்றியமையாதவைகளே. வேதாந்த சித்தாந்திகள்

இவைகளில் ஒன்றுக்கு உயர்ந்தஇடம்கொடுத்து மற்றவைகளை அதற்கு உதவி புரியும் நிலையை அடைவதென்று கூறுகிறார்கள். உண்மையில் மூன்று வழிகளும் பிணைந்து நிற்பதால் எக் காரணத்தைக் கொண்டும் இவைகளைப் பிரிக்க முடியாதென்று தெரிகிறது. இம் மூன்று வழி களின் விளக்கங்களை வேதங்களில் காணுவ தோடு, மூன்று வழிகளின் ஒற்றுமையையும் பார்க்கிறோம். வேறுபட்ட நிலையில் கடவுளுக் கும் பல உருவங்கள் பெயர்கள் இவைகளைக் கொடுத்தாலும், ஒருவனே தெய்வம் என்ற கொள்கையை வேதம் வழங்குகிறது. பலவித தேசம், ஜாதி, வகுப்பு என்ற வேற்றுமைக் கிடையில் உலகம் ஒன்று என்ற முடிவான கொள்கையை வேதம் கடைப்பிடிக்கிறது. திரு வருளைப் பெறப் பல வேள்விகளையும், அதன் அங்கங்களையும் வேதங்கள் விஸ்தாரமாகக் கூறு கின்றன. இதைச் செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களின் நோக்கங்களில் வேறுபாடிருந்தாலும் பல ஜாதி, மொழி, மதம், பண்பாடு, பாரம்பர்யம் இவை நிறைந்த உலகம் வாழவேண்டுமென்ற உயர்ந்த கொள் கையை வேதம் வற்புறுத்துகிறது. அரசியல் நீதிகளை விளக்குவது வேதத்தின் தனிச் சிறப் பில் தலை சிறந்தது. மனித வாழ்க்கையோடு அரசியல் உண்மைகள் கலந்து நிற்கின்றன. அரசியல் தத்துவம் இல்லா விட்டால் வாழ்க் கையே கிடையாது. இதை வேதத்தில் நாம் பார்க்கிறோம். ஆக வேதம் சமூகப் பொருளா தார அரசியல் நீதிகளை வகுத்துக் கொடுக்க ஏற்பட்டதென்று உறுதியாகிறது.

வரலாற்று ஆசிரியர்கள் வேதம் வரலாற்றில் தோன்றி வளர்ந்த நூல் என்று கூறுகின்றனர். இதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் வரலாற்று நூல் பல்லாயிரக் கணக்கான வரு ஷங்களாக ஒரே விதமாக இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். அதில் காணப்படும் கருத் துக்கள் வரலாற்றுக்குள் வருவதை நாம் பார்க் கிறோம். அதில் காணப்படும் கருத்துக்கள் வரலாற்றுக்குள் நடந்த சம்பவமாகக் காணப் பட்டாலும், வரலாற்றுக்கு உட்படாத பல விஷயங்கள் காணப்படுவது வரலாற்றாசிரியர் களுக்குப் பிரமிப்பை உண்டாக்குகிறது. அத னாலேயே மதாசிரியர்கள் 'வேதங்கள் காலங் கடந்தவை' என்று கூறி விட்டார்கள். இந்துக் களான நமக்கு வேதம், தைவத் தன்மை பொருந்திய நூல். கடவுளைப்போல் வேதமும் பிறப்பில்லாதது. 'வேதமாய் வேள்வியாய்' என்று கடவுளே வேத உருவில் நின்றான் என்று ஆழ்வார்களும் நாயன்மார்களும் கூறியுள்ளார் கள். மனிதர்களாகப் பிறந்து வளர்ந்து வாழ்ந் தவர்களுக்குக் கூடத் தைவத் தன்மையைக் கூறும் தன்மை, மற்ற மத வரலாற்றில் தோன்றி இருந்தாலும் வேதங்களுக்குள்ள தைவத் தன்மையை ஆக்ஷேபிக்க முடியாது. வேதத்தை மத நூலாக ஏற்று விட்டதால் வரலாற்று ஆசிரியர்களின் வாதங்களுக்கு முக் யத்வம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. வரலாற்று ஆசிரியர்களும், உலக நூல்களுள் வேதம் ஒன்றே மிகப் பழமையான நூல் என்று ஒப்பி விட்டார்கள். எகிப்து, பாபிலோனியா, சைனா, கிரீஸ் முதலிய தேசங்களின் நூல்களை விட வேத நூல் புராதனத் தன்மை வாய்ந்தது. ஜெர்மன் பேராசிரியர் மாக்ஸ் முல்லர் வேதம் உலக நூலாதலால், உலக மனித வர்க்கத்தின் மொழி, மதம், பண்பாடு இவைகளை அறிய நினைப்பவர்கள் வேதத்தைக் கற்றாக வேண்டு மென்று கூறுகின்றனர். இந்தியா சம்பந்தப் பட்ட வரையில் வேதத்தின் முக்யத்துவத்தை யாரும் உணராமலிருக்க முடியாது. இந்தியா வில் எந்த பாஷையைச் சேர்ந்த மதம், வேதாந் தம், ஸ்தோத்ரம், சாஸ்திரம், சித்தாந்தம் என்பன சம்பந்தப்பட்ட நூல்கள் எதுவாக இருந்தாலும், வேதத்தைப் பற்றிப் பேசுவ தோடு, வேதத்தைக் கற்றவர்களுக்கு முதல் நூலாகவும் கூறுகின்றன. இந்து மதத்தில் இரு முக்கியமான பிரிவாக அமைந்துள்ள சைவம் வைஷ்ணவம் ஆகிய இரு மதங்களும், வேதத்தையே தங்களுக்கு மூலப் பிரமாணமாகச் சொல்லுகின்றன. சைவ வைஷ்ணவ ஆகமங் கள் வேதங்களைப் போற்றிப் பேசுவதோடு நிற் காமல் உயர்ந்த இடத்தைக் கொடுக்கின்றன. நித்திய பூஜை, கும்பாபிஷேகம் முதலிய இடங் களில் வேதங்கள் முன் நிற்கின்றன. அடுத் தாற்போல் வேதத்தில் காணப்படும் கருத்துக் களை விளக்குவோம்.

# தில்லையில் திருஞான சம்பந்தர்

(சித்தாந்த கலாநிதி. உரைவேந்தர். ஔவை துரைசாமிப் பிள்ளை, மதுரை)

ஞானவெளியில், ஞானவொளியில், நிற்கும் ஆன்மா பெறும் பயன், பேரின்பமாகும். ஞானமேயாகிய அம்பலத்தில் ஞானப் பொருளாகிய கூத்தப் பெருமானது அருள் ஞானக் கூத்து ஆனந்தம் சுரந்து பெருகுவது தெளிந்து, ''உள்நிறைந்த ஞானத்து எழும் ஆனந்த ஒரு பெருந் தனிக்கூத்து'' என்று இயம்புகின்றார். காணப்படும் அம்பலமும் ஞானம். அதனைக் காணும் சம்பந்தரின் உள்ளத்து நிறைந்துவிளங்குவதும் ஞானம். ஞானக் கண்கொண்டு, ஞானமேயான திரு அம்பலத்தைக் காண் பார்க்கு அங்கே திரு நடம் தோன்றி அவர் உள்ளத்து ஞான நிறைவில் பேரின்பம் பெருகச் செய்கிறது. அதனை, ''உள்நிறைந்த ஞானத்து எழும் ஆனந்த ஒருபெருந் தனிக்கூத்து'' என்று சேக்கிழார் விளக்குகின்றார். ஞானத்தின் பொருளாவது இன்ப வடிவமான சிவமாதலாலும் அது கூத்தாடும் பெருமான் உருவில் காட்சிப்படுதலாலும், ''ஆனந்த ஒரு பெருந் தனிக் கூத்து'' என்று குறிக்கின்றார். ஏனையோர் கூத்திடைப் பிறக்கும் இன்பம், கூத்து ஒழிந்ததும் தானும் உடன் ஒழிந்து கெடுதல் போலாது, என்றும் ஒழியாது உணர்வின்கண் ஊடுருவி நின்று இறவாப் பேரின்பம் நல்குவது பற்றி ''ஒரு பெருங் கூத்து'' என்றும், தன்னைக் காணும் ஆன்மாவைத் தனது பேரின்ப வெள்ளத்தில் ஆழ்த்தி இன்புறச் செய்யும் தனிச் சிறப்புடைமை தோன்றத் 'தனிக் கூத்து' என்றும் சிறப்பிக்கின்றார். ஞானப் பேரின்பத்தைப் பெறுவாறு ஆன்மாவைப் பற்றிச் சூழ்ந்து கிடக்கும் மலகன்ம மாயைகளைப் போக்குவதும் இன்பத்தில் ஆழ்த்துவதும் சிவபரம்பொருளின் தனிப் பெருங்கூத்தின் சிறப்பியல்பு. இதனை,

> மாயை தனையுதறி வல்வினையைச் சாய்த்து மலம்
> சாய அமுக்கி அருள்தான் எடுத்து—நேயத்தால்
> ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
> தான் எந்தையார் பரதம் தான்

என்று திருவதிகை மனவாசகம் கடந்தார் கூறுகின்றார்.

இங்ஙனம் ஞானமேயான திருவம்பலத்தையும், ஞானத்து எழும் ஆனந்தத் தனிப் பெருங் கூத்தையும் ஞானசம்பந்தப் பெருமான் கண் களிப்பக் கண்டு கைகளாற் கும்பிட்டுக் கருத்திற் பெருகும் களிப்பினால் அம்பலக் கூத்தனைப் பரவிப் பாடலுறுகின்றார். கள்ளுண்ட வழிப் பிறக்கும் களிப்பு அறிவை மறைக்கும் இயல்பிற்று; இங்கே சம்பந்தரிடத்தே தோன்றும் களிப்பு சிவஞானத் தேறலால் உண்டாகும் அருள் விளக்கம்; ஆதலால், இனிய செந்தமிழ்ச் சொற்களால் கூத்தப் பெருமானது அருமையுருவின் பெருமையை இசைத்தேன் கலந்து பாடுகின்றார். இதனை நமக்கு அறிவிக்கும் அருண்மொழித் தேவர்,

> 'உணர்வின் நேர்பெறவரும் சிவபோகத்தை
> ஒழிவின்றி உருவின்கண்
> அணையும் ஐம்பொறி அளவினும்
> எளிவர அருளினை எனப்போற்றினர்'

என்று உரைக்கின்றார்.

உணர்வு வடிவிற்றாகிய ஆன்மா, மனத்தின் உள்ளகமாகிய சிந்தையின்கண் நின்று, மனத்தின் வாயிலாகப் பொறி புலன்களோடு கலந்து புறப்பொருளைக் கண்டு அறிவன அறிவதும், அப்பொறி புலன்களின் நீங்கிப் பொறிவாயிலாக அறிந்தவற்றைச் சிந்தித்துத் தெளிவன வற்றைத் தெளிவதும் செய்கிறது. சிந்தைக் கண் ஆய்ந்து பொருள்களின் பொய்ம்மை கடிந்து மெய்ம்மை யுணருமிடத்து எய்தும் தெளிவுக் காட்சி ஞானமாகும். ஞானத்தால் சிந்தைக்கண் நாடுங்கால் நேர்படுவது சிவமும் அதன் பயனாகிய போகமும் ஆதலால், ''உணர்வின் நேர்பெற வரும் சிவபோகம்'' என்று கூறுகின்றார். சிவஞான போதமும், ''ஞானக் கண்ணினில் சிந்தை நாடி, உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத் தண்ணிழலாம்

பதி'' என்று அறிவுறுத்துகின்றது. ஞான சம்பந்தரும், சிவத்தின்பால் நிறைந்த அன்புற்று, தீங்கு பயக்கும் காம வெகுளி முதலிய குற்றங்களைப் போக்கி, அகக் காட்சி எய்தாவாறு, புறப் பொருள்களின்பால் செலுத்தும் பொறி புலன்களை ஒடுக்கிச் சிந்தைக்கண் ஞான நாட்டம் கொள்பவர் உள்ளத் தாமரையில் சிவ பரம் பொருள் காட்சிப் படும் என்பாராய்,

அகன் அமர்ந்த அன்பினராய் அறுபகை
செற்று
ஐம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம் உள்ளப் புண்டரிகத்
துள்ளுறையும் புராணர்

என்று அருளுகின்றார். இதனால், சிவ பரம் பொருள் தன்னை உணர்வார் உணர்வின்கண் தோன்றும் என்பது கண்டே, சேக்கிழார், ''உணர்வின் நேர்பெற வரும் சிவபோகம்'' என்று குறிக்கின்றார்.

ஆன்மா, மனத்தொடு கூடிப் பொறிவாயிலாக அருவமும் உருவமுமாகிய பொருள்களைக் கண்டறிவது அறிவு; பொறிகளை விடுத்து மனத்தின்கண் நின்று பொருள்களின் நுண்மையும் மெய்ம்மையும் உணர்வது உணர்வு. உணர்வின்கண் உணரப்படும் சிவபரம் பொருள், அறிவால் அறியப்படும் உருவப் பொருளினும் நிறைந்து நிற்கும் செம்பொருள். இது விளங்கவே, ''அகரவுயிர் போல் அறிவாகி எங்கும், நிகரில் இறை நிற்கும் நிறைந்து'' என்று கூறுகிறது திருவருட் பயன். இத்திருக்குறளில் ''எங்கும்'' என்றது அருவும் உருவுமாகிய எப்பொருளின் கண்ணும் இறை நிறைந்து நிற்கும் திறத்தையே காட்டுகிறது. அருவுருவங்களில் நிறைந்திருப்பதை எளிதில் காணச் செய்வது சிவலிங்கம். ''காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய், நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்'' என்று சேக்கிழார் தெரிவிக்கின்றார்.

உணர்வு வடிவில் சிந்தைக்கண் சிவத்தைக் காண்பதினும், சிவலிங்கத்தைக்கண்டு சிவத்தை உணர்வது எளிது. அதனினும், முடியும் நுதலும் கண்ணும் வாயும், தோளும் மார்பும் அடியும் கூடிய திருவுருவில் சிவத்தைக் கண்டு உணர்ந்து வழிபடுவது யாவர்க்கும் எளிது. இத்திருமேனியும், சிவனே தானே கொண்டதாதலால், அதனைச் சிவனென்றே தேறி வழிடப நிற்கிறது. ''அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள், சகளமாய்வந்த தென்றுந்தீபற, தானாகத் தந்ததென்று உந்தீபற'' என்று சான்றோரும் கூறுவர்.

இங்ஙனம் எத்திறத்தாரும் எளிதில் கண்டு உணர்ந்து வழிபட்டு உய்திபெற வந்த கூத்தப் பெருமான் திருவுருவைக் கண்டு களிகூர்ந்து ஞானசம்பந்தர், ''ஒழிவின்றி உருவின்கண் அணையும் ஐம்பொறியளவிலும் எளிவர அருளினை'' எனப் போற்றினர் என்று சேக்கிழார் தெரிவிக்கின்றார். எப்பொருளின் கண்ணும் நீக்கமின்றி நிற்பது பற்றி 'ஒழிவின்றி' என்றும் உருவப் பொருளையே கண்டு பயிலுவது ஐம்பொறியின் இயல்பாதல் பற்றி ''உருவின்கண் அணையும் ஐம்பொறியளவினும்'' என்றும், உருவப் பொருளின்கண் எழுந்தருளுவது எவ்வுயிரும் எளிதிற் கண்டு வழிபட்டு உய்தல் வேண்டும் என்ற பேரருள் காரணமாக என்பது விளங்க ''எளிவர அருளினை'' என்றும் இயம்புகின்றார். பிறிதோர் இடத்துப் 'அரிதருகண்ணியாளை ஒருபாகமாக அருள் காரணத்தில் வருவார்' என்று இக் கருத்தே புலப்படக் கூறியருளுகின்றார்.

யாரும் அறிவரிதாய் அகளமாய் நிற்கும் சிவபெருமான், சகளமாய் எளிவந்த அருட்டிறம் ஞானசம்பந்தரின் ஞானவுள்ளத்தை உருக்கினமையின், அவர் கண்களில் நீர் பெருகி வழிய ''இணையில் வண் பெருங்கணையே ஏத்திப் பாடுவராயினர். பாடியதிருப்பதிகத்தின் முதற் பாட்டு,

கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றாநின் றாரைப்பற்றா பாவமே

என வருவது.

இத்திருப்பதிகத்தில், ஞானசம்பந்தர் பாடுதற்குப் பொருளாய் அமைந்தவற்றை அடுத்த இதழில் காண்போம்:

—(தொடரும்)

# ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை

(திரு. கே. பட்சிராஜன், பி.ஏ., பி.எல்., திருநெல்வேலி)

(முற்றொடர்ச்சி)

ஆழ்வான் எழுந்தருளி யிருந்த விடத்தே அவருடைய தர்மபத்தினி ஆண்டாளும் திருக் குமாரர்களான பட்டரும் சீராமப் பிள்ளையும் வந்து அவரைச் சேவித்து நின்றனர். ஆழ்வான் ஆண்டாளை நோக்கி, 'நீ உன் மனத்தே என்ன நினைத்திருக்கிறாய்' என்று கேட்ப அவளும், 'அடியேனுக்கென்று ஒரு நினைவுண்டா ஸ்வாமீ! தேவரீர் திருவடிகளைப் பின் செல்வ தொன்றுதானே அடியேனுக்குச் சொரூபம்' என்று விண்ணப்பித்து நின்றாள். ஆழ்வான் அவளை நோக்கி 'ஆண்டாள்! ஸ்ரீ வைஷ்ணவர் விஷயத்திலே மிகவும் ஆதரத்தோடே சேவித்துப்போ. எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்று கொண்டு பசியன் சோற்றைக் கண்டாற்போலே அவர் திருவடிகளில் ஆதரத்தோடு சேவித்திரு' என்று அருளிச் செய்தார். பட்டரும் சீராமப் பிள்ளையும் கண்களில் நீர் தேங்கத் தெண்டன் சமர்ப்பித்து நிற்க, ஆழ்வான் அவ்விருவரையும் 'சிறகரால் பார்ப்புப் புல்லிச் சிறையனம் இருந்ததேபோல்' தம்மிரு கைகளாலும் அணைத்து அவர்கள் கண்ணீரைத் துடைத்து, தம் திருக்கரங்களாலே அவர்கள் மேனியெங்கும் தடவி அவர்களை நோக்கி 'குழந்தைகாள்! நீங்கள் இப்பிராகிருத ஸம்பந்தத்தை எண்ணி வருந்தினீர்களாகில் உடையவர் திருவடி ஸம்பந்தத்தைத் தூஷித்தவர்களாவீர். ஆத்ம ஸம்பந்தத்தை நினைத்துச் சோகிப்பீர்களென்னில் நம்முடைய ஒழிக்க ஒழியா உறவை அறிந்திலீராவீர். இரண்டு முறையிலும் சோகிக்க இடமில்லை. விஷய மறிந்த நீங்கள் இங்ஙனம் சோகப்படலாகாது' என அவர்களைத் தேற்றிப் பின் பட்டரை அருகி லிழுத்தணைத்தவராய் அவரை நோக்கி 'பட்டரே! நீர் எம்பார் உகந்தருளின விஷயமன்றோ! எம்பார் திருவடிகளிலேயும் எம்பெருமானார் திருவடிகளிலேயும்மிகவும்ஆதரத்தோடு சேவித்து வாரும். எம்பெருமானார் ஸ்ரீபாதத்து முதலிகளைக் கண்டால் நம்மைக் கண்டாற் போலே நினைந்து நடந்து கொள்ளும்' என்று உபதேசித்தார். பின்னை சீராமப் பிள்ளையை அணைத்து 'நீர் பட்டர் திருவடிகளிலே ஒதுங்கி வாழும்' என்று அறிவுரை புகட்டினர். பிள்ளைப் பிள்ளை யாழ்வானை நோக்கி 'எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிரும்' என்றருளிச் செய்தார். அருகே துயர வடிவங்களாய் நின்ற முதலிகள் அனைவரையும் நோக்கி, 'பிள்ளைகாள்! ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்யப் பிரபந்தங்களே உங்களுக்குத் தாரக, போஷக, போக்கியங்களாகக் கொண்டு, திருவாய்மொழி தானே காலக்ஷேப வழியாக அநுசந்தித்துப் போருங்கள்' என்று அருளிச் செய்தார்.

ஆழ்வான் திருநாடு செல்ல விழைந்தார் என்றும், உடையவரும் ஆழ்வானை முதுகுதடவி விடை கொடுத்தார் என்றும் கேள்வியுற்றார் திருவரங்கத்தமுதனார். தாயிழந்த கன்றே போல் ஓடோடிவந்து கண்ணும் கண்ணீருமாய் ஆழ்வான் திருவடிகளிலே தண்டனிட்டு 'ஆழ்வான்' இதுவென்? நம்பெருமாளை ஸேவித்து 'இச்சுவை தவிரயான் போய் இந்திரலோக மாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்றும், 'எங்கள்மால் இறைவன் ஈசன் கிடந்த தோர் கிடக்கை கண்டும் எங்ஙனம் மறந்து வாழ்கேன்?' என்றும் பெருமாள் நடையழகிலும், கிடையழகிலும் உம்மைப் பதித்துக் கொண்ட நிலையினின்றும் உம்மை எங்ஙனம் பறித்துக் கொண்டார். அச்சுவை நிராசையாய் எப்படி ஆயிற்று. வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செலுத்துகிற அவனுடைய இருப்பிலே இப்படி ஆசை வேகம் கொண்டு, தேவரீர் திருநாட்டுக் கெழுந்தருளினால் அடியோங்கள் எங்ஙனம் ஆற்றி நிற்போம் ஸ்வாமீ! என்று கதறினர். ஆழ்வானும் மிகக் கருணையோடு அமுதனாரைக் கடாக்ஷித்து 'என்ன அமுதனாரே! செழுந்திரைப் பாற்கடல் கண்டுயில் மாயன் திருவடிக்கீழ் விழுந்திருப்பார் நெஞ்சில் மேவு நல்ஞானி, நல்வேதியர்கள் தொழும் திருப் பாதன் இராமாநுசனைத் தொழும் பெரியோர்

எழுந்திரைத்து ஆடும் இடம் அடியேனுக்கிருப் பிடமே' என்றும் கொண்டு நம் தலைமிசையே பொங்கிய கீர்த்தி இராமாநுசன் அடிப்பூ மன்னவேணுமென்று அரங்கனுக்கு அணியா கமன்னும் பங்கய மாமலர்ப் பாவையைப் பற் றும் பண்பு பெற்ற நீரா இங்ஙனம் சோக முறுவது? வெண்ணெயைக் கையில் வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவாருண்டா. வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை யிவற்றையிடமாக உடையவன் இன்று இருப்பிடமாக வந்துறை யும் மனத்தை உடைய இராமாநுசன் இன்புற இருப்பது உம் இதயத்துள்ளே'' என்று அநுப வித்த தேவரீர் ஏன் சோகிக்கிறீர் காணும். உடையவர் திருவடியே தஞ்ச மென்றிரும்' என்று அருளிச் செய்தார். அமுதனாரும் ஆழ் வானைத் தெண்டனிட்டு அவர் ஸ்ரீபாத தீர்த்த மும் சேர்த்துக் கொண்டு அதை ஆழ்வான் திருக்கைகளாலே அளிக்கப் பெற்று அவர்விடை கொடுக்க, பிரியா விடை கொண்டு சென்றார்.

இங்ஙனம் அனைவரிடமும் விடை பெற்றவ ராய் ஆழ்வார் திருமாளிகைக் கருகே இடப் பெற்ற காவணத்திலே பிள்ளைப் பிள்ளையாழ் வான் திருமடியில் திரு முடியும், ஆண்டாள் திருமடியிலே திருவடிகளும், பட்டர் திருமடி யிலே திருக்கைகளுமாய் கண் வளர்ந்தருளி யிருந்த ஆழ்வான்,

உதிப்பன உத்தமர் சிந்தையுள்,
ஒன்னலர் நெஞ்சமஞ்சிக்
கொதித்திட மாறி நடப்பன,
கொள்ளை வன் குற்றமெல்லாம்
பதித்த என் புன்கவிப் பாவினம்
பூண்டன, பாவு தொல்சீர்
எதித்தலை நாதன் இராமாநுசன்
தன் இணையடியே.

என்று அமுதனார் போற்றிய அவ்வெம் பெரு மானார் திருவடிகளை உள்ளத்தே தியானித்துக் கொண்டே திருநாட்டுக் கெழுந்தருளினார். அங்ஙனம் திருநாடு செல்லும் ஆழ்வானை நோக் கிச் சேனைநாதனை முன்னிட்டு வைகுந்த நாதன் எதிர்கொள்ள வரவும், 'மஞ்சுயர் மாமதிதீண் டநின்ற மாலிருஞ்சோலை மணாளர் வந்து மஞ் சுயர் பொன்மலை மேலெழுந்த மாமுகில் போன் றுளர் வந்துகாணீர்' என்று முதலி ஆழ்வா னுக்கு அருளப் பாடிடவும், ஆழ்வானும் பெரு மாள் திருவடிகளிலே தெண்டனிட்டு நிற்கப் பரந்தாமனும் புத்ரனை மாதா அணைத்தெடுப் பதுபோன்று தம் திருக்கைகளாலே தழுவி யெடுத்தணைத்து நாடும் நகரமும் நன்கறிய நலனிடை யூர்தி பண்ணிக்கொண்டு செல்ல, 'தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க் குத்தமை யொக்க அருள் செய்வர்' என்ற படியே ஆழ்வானும் திருவாழி, திருச்சங்கு, திவ்ய அபிஷேகம் (திருமுடி) இவை கூடப் பெற்றவராய் சூழ்விசும்பிற்படியே நித்ய சூரி கள் கட்டியம் கூறி வரவேற்கப் பரமபதம் எழுந்தருளிப் பாத பீடத்தே அடியிட்டு ஸ்ரீ வைகுண்ட நாதன் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பிக்கப் பரமனும் ஆழ்வானை வாரியெ டுத்தணைத்துப் பெரிய பிராட்டியார் திருக்கரங் களிலே காட்டிக் கொடுக்கப் பங்கயச் செல்வியும் ஆழ்வானை மார்போடணைத்துத் தன் இனிய நோக்காலே கடாக்ஷித்துப் பெருமாள் கையிலே கொடுக்க, அப்பரமனும், 'ஆழ்வான் இவ்வா னவர் நாட்டையும் நீ கண்டுகொள்' என்று அருளிச் செய்துவிட ஆழ்வானும் கூப்பிய கைய ராய் 'எதிரெதிர் இமையவர் இருப்பிடம் வகுக்க' திரு வைகுந்த நாதனும் திருவும் அமர்ந்த சேர்த்தியழகை அநுபவித்துக் கொண் டே நித்ய சூரிகள் கோவையில் ஒருவரானார்.

ஆழ்வான் திருவடிகளையே சேவித்துக்கொண் டு தன் கரங்களால் அவற்றை வருடிக் கொண் டிருந்தாள் ஆண்டாள். ஆழ்வான் இக்கொடு வுலகம் நீத்து விட்டமையை உணர்ந்தாள். கொஞ்சமும் தடுமாற்ற மெய்தாதவளாய் பிள்ளைப் பிள்ளை ஆழ்வானை நோக்கி 'ஸ்வாமீ ஆழ்வானை சேவித்தீரா?' என அவரும் ஆழ்வா ரது விக்ரகத்தை நன்கு கண்ணுற நோக்கித் திடுக்கிட்டார். ஆண்டாள் அவரை நோக்கி ஆழ்வான் திருநாடலங்கரித்த செய்தியைஉடை யவருக்கு விண்ணப்பம் செய்ய வேண்டுமே என்ன அவரும் அருகிருந்த வங்கிபுரத்து நம்பி யைப் பார்த்து உடையவரிடம் செய்திசொல்லி வரும்படி அனுப்பினார். நம்பியும் உடையவரைத் தெண்டன் சமர்ப்பித்துச் செய்தியை விம்மல் பொருமலோடு விண்ணப்பித்தார். கேட்ட உடையவர் மிகவும் திருவுள்ளம் கலங்கிக் கன்று பிரி காராவின் துயருழந்து,

ஒருமகள் தன்னை உடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள்போல வளர்த்தேன்
செங்கண்மால் தான்கொண்டுபோனான்.

நல்லதோர் தாமரைப் பொய்கை
நாண்மலர்மேல் பனி சோர
அல்லியும் தாதும் உதிர்ந்திட்
டழகழிந்தா லொத்ததாலோ
இல்லம் வெறியோடிற்றுலோ
என்மகளை எங்கும் காணேன்.

என்ற பாசுரங்களை அநுசந்தித்துப் புலம்பி, 'பரபத்தி, பரஞான, பரம பக்திகளால் ஞான பக்தி வைராக்கியங்களை உடையவராய், ஆசார்ய பூர்த்தியும் சிஷ்ய பூர்த்தியுமுடைய ஆழ்வானை வைத்துக் கொண்டிருக்கப் பெற்றேமில்லையே என்று மிகவும் வருந்தினர். அவர் துயருறு வதைக் கண்ட அருளாளப் பெருமாள் எம் பெருமானுர், ஸ்ரீ மதுரகவிகளைப் போலே பஞ்ச மோபாய நிஷ்டை யுடையராகையாலும், தேவரீருடைய விசேஷ கடாக்ஷத்தாலும் இத் தகைய பெரும் பேறு பெற்ற ஆழ்வானுக்காகத் தேவரீர் திருவுள்ளங் கலங்கலாமோ! என்று மெல்ல விண்ணப்பிக்க உடையவரும் மெது வாகத் தன்னைத் தேற்றிக் கொண்டார்.

பின்னர் உடையவர் முதலிகளை நோக்கி ஆழ் வானைத் திருப்பள்ளி படுத்துவோம் வாரீர் என்று நியமித்துப் பெருமாளுடைய திருமாலை, அபயஹஸ்தம், பரிவட்ட முதலிய பிரசாதங் கள் கொணருமாறு பணித்து முதலிகளுடன் ஆழ்வான் சரம விக்ரகம் எழுந்தருளி யிருந்த காவணம் எழுந்தருளினர். பிரசாதங்கள் வாத்திய கோஷங்களுடனே கொணரப் பெற் றன. நகரிலுள்ள அனைத்து முதலிகளும், கோயில் பரிகரமனைத்தும் ஒருங்காகத் திரண் டிருந்தனர். ஆழ்வானைத் திருமஞ்சனமாட்டி, ஒற்றுவாடை சாத்தி திருப்பரியட்டம் சாத்தி, கேசவாதி பன்னிரு திருநாமம் திருமண் காப்ப ணிவித்து, திருமடி சீலை சாத்திப் பெருமாள் பிர ஸாதங்களைச் சாத்தி ஆழ்வானைக் கோல மணி வித்து முதலிகளைத் தீர்த்தம் கொண்டு, சுருள் பரிமாற வேண்டி உடையவர் தலைமையாக விருக்க, ஸ்ரீ சூர்ணமிடித்து அனைவரும் எண் ணெய் சுண்ணம் கொண்டாடினர். பின்னர் பரம பாகவதரான ஆழ்வானுக்குப் பட்டர் பிரம்மமேதத்தாலே சகல சம்ஸ்காரங்களும் செய்து பள்ளி படுத்தார். பின்னர் ஆண்டா ளும், முதலிகளும் திருக்காவேரியிலே நீராடிப் பட்டர் திருமாளிகை சென்றனர். முதலிகள் பட்டரை நோக்கி, 'ஆழ்வான் இங்ஙனம் எழுந் தருளினுரே' என்று சோகிக்காமல் திருவரங்கன் திருப்பதியிலே எழுந்தருளியிருந்து சதஞ் சீவ சரதோவர்த்தமாந : என்கிறபடியே பகவத் விஷயத்தை அனைவருக்கும் ப்ரஸாதித்துக் கொண்டு சிரஞ்சீவியாய் எழுந்தருளியிருக்க வேண்டும் என்று ஆசீர்வதித்துச் சென்றனர்.

பட்டர் கண்ணீர் மாலை மாலையாய்ப் பெருக ஆண்டாள் திருவடிகளிலே தெண்டனிட்டு நிற்க ஆண்டாளும் அவரை அருகழைத்து தழுவி அணைத்து, திருமுதுகைத் தடவிக் கண்ணீரைத் தம் முன்றானையால் துடைத்துக் குழந்தாய் ஆழ் வான் சரமதசையில் உனக்குச் சொல்லி யருளி யதைக் கேட்டாயே. ஆழ்வானுக்காக எம் பெருமானுர் எழுந்தருளி யிருக்கையில் நீசோகப் படுவதென்? என்று பலவிதமாக ஆறுதல் கூறித் தேற்றியருளினுள்.

அப்பால் பன்னிரண்டு நாளும் செய்ய வேண் டிய கிரியைகளை உடையவர் முதலிகளைத் துணை கொண்டு நடப்பித்தார். திருவத்யயனம் நடத்த வேண்டுமென்று பட்டர் பிரார்த்திக்க உடையவரும், அரையரும் சகல ஸ்ரீ வைஷ்ண வர்களும் எழுந்தருளியிருக்க பட்டர் புஷ்பாஞ் சலி பண்ணி, ஸ்ரீபாத தீர்த்தத்தைச் சேர்த்து ஸ்வீகரித்துக் கொண்டார். மற்றை நாள் எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களையும் பட்டர் அமுது செய்வித்து உண்டொழி மிச்சில் ஸ்வீகரித் தருளினுர்.

—தொடரும்.